# வித்யா தளம்

ஆகஸ்ட் — அக்டோபர்,
1938

7L
O6ள211,N37
N38·2.5
209390

# ஸ்ரீ த்யார் தனம்

TAMIL TREASURE CHEST

ஆகஸ்ட்மீ 1938வரு | பகுதி 5



மைசூர்: சாமுண்டீஸ்வரி தேவாலயம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

# பொருளடக்கம்.


| | | பக்கம். | | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்பு | 1 | 6. | வர்த்தமானம் | 17 |
| 2. | ஞாயமும் வழி பெறத் துறந் தோன் உத்தம கௌதமா | 2 | 7. | குடுக்கை | 20 |
| 3. | சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம் | 9 | 8 | பிள்ளைகள் வரையக் கூடிய சித்திரப் படங்கள் | 21 |
| 4. | உள்ளத்தில் உண்மை | 12 | 9. | அரக்கு மெழுகு | 22 |
| 5. | திராட்சைப் பழச் சர்ப்பத்து | 16 | 10. | மஞ்ஜர்ஹாசன் பிரபு | 24 |


---

## பத்திரிகையின் சந்தா விபரம்.

---


| | | |
|---|---|---|
| பிரதி ஒன்றுக்கு | ... | அணா 1 |
| வருஷ சந்தா | ... | ரூ. 1—0—0 |
| வெளி நாடுகளுக்கு | .. | ரூ. 1—8—0 |



REV. T. A. FENN,
Editor, Vidyadhanam,
12 Venkata Maistry Street,
George Town,
MADRAS.



# வித்யாதனம்

# VIDYADHANAM

## TAMIL TREASURE CHEST

தொகுதி 2 ஆகஸ்ட்மீ 1938௵


## பத்திராதிபர் குறிப்பு

ஜூன்மீ பத்திரிகையில் வெளி வந்த படத்தில் காணப்பட்ட பி
கண்டு பிடித்தால் இனாம் உண்டு என்று சொல்லியிருந்தோம். அந்த இனாம் நா
படிக்கும் தினகரனுக்குரியது என்பதை அப்பையன் பத்திராதிபருக்கு
கடிதத்திலிருந்து அறியலாம். அவனுக்கு இனாம் அனுப்புவோம். அவன்
பிரசுரித்திருக்கின்றோம் :—

25-(

வித்யாதனம் பத்திராதிபர் அவர்களுக்கு,

ஐயா,

ஜூன் மாதம் வெளிவந்த பத்திரிகையில் உள்ள படத்தில் காணப்ட
நான் இரண்டு பெயர் கொடுக்கிறேன் :—

ஒன்று—அம்மா பிள்ளை.

இரண்டு—பாப்பம்மாள்.

என் பெயர் தினகரன். நான் கேப்ரன் ஹால் பள்ளிக் கூடத்தில் நா
படிக்கிறேன்.

இப்படி
தினகர

இப் பத்திரிகையின் மூலமாய் தினகரனுக்கு வாழ்த்துக் கூறுகின்றோ

---

### ஆகஸ்ட் மாதம்

இம்மாதம் வருஷத்தின் எட்டாவது மாதம். அகஸ்து இராயன்
இம்மாதத்திற் கிப் பெயர் வந்தது. இந்த இராயன் காலத்தில் இயேசு கி
அவதரித்தனர். இவர் காலத்தில் ரோமை கல்வியிற் சிறந்து விளங்கிற்று.
ஆளுகை ஞாபகார்த்தமானதே. இம்மாதத்தின் பெயரும் ஞாபகார்த்தமான
வாய்ந்த பெயர். நற் பெயர் வாய்ந்த இம்மாதம் மாணவர் கல்வியிற் சிறந்து விள
தூண்டும் மாதமா யிருப்பதாக!

T. A

காப்பக நூலகம்

# துயரறும் வழிபெறத் துறந்தோன் உத்தம கௌத்தமா

FRANCES E. GARDEN.

சித்தார்த்தா கௌத்தமா எனும் இளவரசர் சுகத்திலும் செல்வத்திலும் வளர்ந்தவர். பிறர் துன்பம் காணச் சகியார். தானோ துன்பம் துயர் அறியார். ஒரு பெரும் தூயவர் அல்லது அரசர் ஆவர் எனும் முன்னுரை இவரைப் பற்றி இருந்தமையால் இவரது தந்தை துயர் கண்டு அநுதாபங் காட்டும் சிந்தையை ஒழிக்க ஒரு சிற்றின்ப மாளிகை அமைத்து துயர் காணா வண்ணம் அதில் அவரை வைத்து வளர்த்து வந்தனர். விவாகமும் செய்து வைத்தனர். முப்பது பிராயமானபோதே துன்ப காட்சியும், மரண காட்சியும் இவரது மனதை இளக்கின. துயரறும் வழி வகுக்க ஆசித்து, தம்மவர் எவரையுந் துறந்து வெளியேறினர். அவருடன் சாணு என்னும் சேவகனும் சென்றனன்.

## நாடகம்

பாத்திரங்கள்:—1. சித்தார்த்தா கௌத்தமா—சாக்கிய ஜாதி இளவரசர்.
2. சாணு சேவகன்.
3. யாசகன்
4. வயோதிகன்.

காட்சி—(ஒரு மரத்தடியில்)

(கௌத்தமாவும் சாணுவும் தரையில் உட்காருகின்றனர்)

கௌத்தமாவின் புலப்பல்.

கௌத்தமா:—"துன்ப மிகு துயரமிகு தொல்லுலகில் தோன்றினதேன்?
இன்பமிகு இல்லமதில் ஏனிருந்தேன்? ஏனிழந்தேன்?
அன்பரென அனைவரையும் அழைத்துதவி அளித்திடவே—ஐயாவே!

சாணு:—சூரியன் உதிக்குமட்டும் இங்கேதானே இளைப்பாறுவோம்.

கௌத்தமா:—சரி மெதுவாய்ப் பேசு. யாரேனும் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கலாம்.

சாணு:—இளவரசரே உறக்கமில்லா திருக்கும்போது இவ்வளவு நேரம் இளைப்பாறினவர் களைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்?

கௌத்தமா:—எனக்கு களைப்பு ஒன்றுமில்லை. இதுவரை என்னைச் சுமந்த குதிரை இனி நடக்க முடியாது என் றஞ்சுகின்றேன்.

சாணு:—இன்னும் செல்லவா? இராஜ்ஜியத்தின் எல்லையைக் கடந்து விட்டோம். சிநேக நாடுகளையும் தாண்டி விட்டோம். இனி அதிக தூரம் போவது ஞான மன்று.

கௌத்தமா:—(விசனத்துடன்) சாணு! நான் எதற்காக வெளியேறினேனோ அதைக் கண்டறியுமுன் திரும்புவதில்லை என்பது திண்ணம்.



சாணு:—ஆண்டவா, திரும்பி வாரும். அனைவருக்கும் அதிபதியாவீரென ஞானிகள் தெரிவித்திருக்கின்றனர். நீர் சிம்மாசனம் ஏறி ஆளுங் காலத்திற்காக இராஜ்ஜியம் காத்துக் கொண்டிருக்கின்றது. இளவரசருக்கு ஏன் இம்மதி மயக்கம்?

கௌத்தமா:—ஒரு பெருங் காரியத்தைத் தேடி அலைகின்றேன். அதைக் கண்டறியும் வரை சிம்மாசனமும் வேண்டாம். ராஜ்ஜியமும் வேண்டாம். நான் தேடும் ராஜ்ஜியம் சகல ராஜ்ஜியங்களிலும் பெரியது. உலக ராஜ்ஜியமனைத்தும் ஒழிந்துபோம். அரச பதவிக்கல்ல. சாதுவாகி சத்தியத்தைக் கண்டடையவே என்னைத் தத்தம் செய்கின்றேன். என்னை விட்டுவிடு. நான் விட்டு வந்தவரிடம் சென்று என் பிரியா விடை கூறு.

சாணு:—பரதீசை விட்டு இளவரசர் துன்ப உலகைத் தெரிந்து கொள்ளலாமா? அரசனாகி ஆளுவதைத் துறந்து யாசகத் தொழிலை ஏற்கலாமா?

கௌத்தமா:—உத்தம ஊழியக்காரனே, நான் செல்லும் பாதையில் நீயுமா கற்களைப் போடுகின்றாய்? இரு, யாரோ ஒருவன் வருகின்றான்.

(ஒரு சப்பாணிப் பையன் நகர்ந்து வந்து பிச்சை கேட்கின்றான்)



சப்பாணி:—இளவரசே! பாக்கிய அரசே! ஏழைகளின் நாயகனே! பிச்சை போடுங்களேன்!
(கௌத்தமா மனம் நொந்து பார்க்கக் கூடாமல் திரும்புகின்றனர்.)

சாணா:—இந்தக் காட்சியை நீர் தாங்க மாட்டீர்.

கௌத்தமா:—(இரகசியமாய்) இவனும் என்னைப்போன்ற யௌவனப் பருவம் உள்ளவனோ? இவனும் இவனைப்போன்ற எத்தனையோ பேரும் உயிர்ப் பிணங்களாயிருக்கையில் முப்பது ஆண்டுகளாய் நான் பளிங்கு மாளிகைகளிலும் நறுமணம் வீசும் சிங்கார வனங்களிலும் உல்லாசமாய்க் காலங்கழித்தேனோ?

சாணா:—(பையனைப் பார்த்து) தூரப்போ. ஏன் இளவரசை இவ்வாறு வருத்துகின்றாய்? துயர்காணாக் கண்களைத் துன்புறுத்தாதே போ.

கௌத்தமா:—(எழுந்து பையனிடம் சென்று) பொறு. இந்தத் தங்கச் சங்கிலி மாலையைக் கொண்டுபோய் விற்றுச் செலவுக்கு வைத்துக்கொள்.

சப்பாணி:—தயாள அரசே! கடவுள் காப்பாற்றுவாராக! நன்றி, நன்றி.

கௌத்தமா:—(பையன் போகு முன்) எனக்கு நன்றி தேவையில்லை, உன் நிலைமை எத்தனை பரிதாபம்!

சாணா:—(எழுந்து) அரசே! பரிதாபக் காட்சிகளைக் காண்பதில் பயனில்லை. பிறர் துயர் உமது துன்பத்துக்குக் காரணம் ஆகும். கபில வஸ்துவில் இவை காண வேண்டியதில்லை. வாரும், என்னுடன் திரும்பி வாரும். முட்பாதையில் முன்னேறுவதும் கற்பாதையில் கால் வைப்பதும் கஷ்டம்.

கௌத்தமா:—(கையைப் பிடித்து) என்னைப் பரீட்சை பாராதே. மூன்று முக்கிய காட்சிகளைக் கண்டே வெளியேறும் எண்ணங்கொண்டேன் என்பது தெரியாதா?

சாணா:—(மெதுவான குரலோடு) தெரியும்.

கௌத்தமா:—முதல் காட்சி முக்கியமானது. கந்தை யுடையினன், வயது சென்றவன், எலும்புடன் தோல் ஒட்டின மனிதன், கோல்கொண்ட கூனுறு முதுகன், அவனுக்குப் பற்கள் கிடையா. மங்கலான கண்களுடையான்.

சாணா:—உமக்கு அக் காட்சியால் வந்த துயர் எனக்கு ஞாபகமுண்டு.

கௌத்தமா:—அதுவரை கிழப்பருவம் எவருக்கும் உரியதென அறியாதிருந்தேன். அடுத்த காட்சி, சாலையில் ஒருவன் சாகுந்தருவாயி லிருந்தனன். நோய் கொண்டோன். வேதனை யுற்றோன். அழுகுரலுங் கேட்டேன்.

சாணா:—அதுதான், கொள்ளை நோய்.

கௌத்தமா:—அவன் தலையைத் தூக்கி அவனுக்குத் தாக சாந்திசெய்ய நான் எத்தனித்தபோது அது கொள்ளைநோய் என்று அங்குள்ளோர் கூவினர்.



சாணா:—அது தரிசனக் காட்சியன்று. நானும் அங் கும்முடன் இருந்தேன். நீர் தப்பினது மறு பிழைப்பே. கொள்ளை நோய்க்கு அரசன் என்றுமில்லை ஆண்டி யென்றுமில்லை. எவரையும் தாக்கும்.

கௌத்தமா:—எவரையும் தாக்குமென்றுதான் சொல்லப்பட்டது.

சாணா:—மூன்றாவது என்ன காட்சி?

கௌத்தமா:—மூன்றாவது துக்கமிகுந்த கூட்டத்தார் தெருவிற் சென்றனர். தாரை ஊதுகின்றவரும், மேளம் தட்டுகின்றவரும், மாரடிப்பவரும், ராமா என்றழைப்பவரும், பேசாத, காணாத, கேளாத அசையாத ஓர் ஆளைப் பாடையிற் சுமந்துசென்றனர். அக்கினிக்கும் இரையாக்கினர். சொல்லொணாத் துயரக் காட்சி யன்றோ?

சாணா:—அக் காட்சி எங்குமுள்ள மரணக் காட்சி, அது தரிசனமன்று.

கௌத்தமா:—இதெல்லாம் நீயும் கண்ணாற் கண்டாய். ஏன் மறுக்கின்றாய்?

சாணா:—அவையாவும் உண்மையில் நடந்தவை. விசேஷ தரிசனமன்று. பிறந்தது முதல் எவரும் அறிந்த விஷயம். துன்ப துக்கங்களினின்று உம்மைப் பிரித்துவைத்து வளர்த்தது உமது தந்தைசெய்த தவறு. திடீரென இவைகளைக் காண்பதால் உம் மனம் துடிக்கின்றது. தந்தையின் அரண்மனையில் இன்னும் சிலநாள் தங்கிக் காரியங்களைக் கவனியும். அப்படியானால் நன்மை செய்யக்கூடும்.

கௌத்தமா:—அது கூடாத காரியம். துன்பத்தைக் கண்டபின் அதை சகிக்கவே முடியாது. மனதைக் கடினப்படுத்தவும் இயலாது.

சாணா:—மெய்தான். அதற்காகவே உம்மை அரண்மனைக் குள்ளேயேவைத்து வளர்த்தனர்: நல்ல பெண்ணைத் தேடி விவாகம் முடித்தனர். துன்பம் காணாத வண்ணம் தடுத்தனர்.

கௌத்தமா:—எனினும் கனவில் காணும் காட்சிகள் ஏராளம், அவை துன்ப உலகை என் முன் கொண்டுவருகின்றன. அவ் வுலகத்துக்கு உழைக்க அழைக்கப் படுகின்றேன்.

சாணா:—அது கண்டுதான் உம் தந்தை உம்மைப் பாதுகாத்தனர். நீர் வெளியேறினது பாதுகாப்பின் பலனன்று. உலகுக்கு உழைக்க வெளியேறி விடுவீரெனப் பயந்ததால் பாதுகாக்கப்பட்டீர்.

கௌத்தமா:—என் தந்தை பேச் செடுக்கவேண்டாம். விசனமாயிருக்கின்றது.

சாணா:—என்ன விசனம்? வயது காலத்தில், தனிமையாய் மரிக்கும்படி விட்டு விட்டோடி வந்த உமது நெஞ்சு என்ன நெஞ்சு. கல் நெஞ்சன்றோ?

கௌத்தமா:—சாணா! என்னை கோபிக்காதே. மரணம் எவருக்கும் உரியதானால் ஒருவர் பக்கம் மாத்திரம் இருந்து ஆறுதலளிப்பது தகுமா? யார் வருகிறது பார்.



(வயது சென்ற கூனுற்ற முதுகன் கோல் ஊன்றி வருகின்றான்)

சாணு:—கந்தை யுடையின னுயிராவிட்டால் அவனை உம் தந்தை யென்றே எண்ண வேண்டும்.

கௌத்தமா:—அவன் போன்றவரிடம் அநுதாபங் காட்டத் தேவர்களில்லையோ?

கிழவன்:—இளவரசே! மங்கள முண்டாவதாக!! யௌவனமும் சௌக்கியமும் கெட்டுப் போகாததற்கு முன் உமக்கு விடுதலை கிடைப்பதாக! முதிர் வயதின் சாபம் நீங்கி முக்தியடைவீராக!!

கௌத்தமா:—என் இன்ப தினத்தன்று அடைந்த சூரியன் இன்னும் உதயமாகவில்லையே. இச் செய்தி எனது காதுகளிலே தொனிக்கின்றதோ? பட்டத்துக் காசன் எனக் குதித்தனன் என்ற ஆசீர் மொழி கேட்டானந்தித்தேன். முதிர் வயதை ஆசித்தேன்.

அதுசாப மென்று இன்று எவ்வாறு எண்ணுவேன்?

(எழுந்து பணப்பையை எடுத்து கிழவனுக்குக் கொடுத்தார்)

இப்பணம் உன் கஷ்ட காலத்தில் உனக்குதவும். வைத்துக்கொள்.

கிழவன்:—(மறுத்து) நன்றி, நன்றி. செய்த நன்றி மறவேன். யௌவனப் பருவம் சென்றபின் ஒருவனுக்கு செல்வத்தினால் என்ன பயன்? கள்ளர் பயம், உள்ள சந்தோஷத் தையும் கெடுக்கும். இப்பணத்துக்காக கிழவனுயிரை வாங்கக் காத்துக் கொண் டிருப்பவர் எத்தனை? வேண்டாம். எனக்கு இப்பணம் வேண்டாமே! (போய் விடுகின்றான்).



கௌத்தமா:—உயிர் வைத்திருப்பதில் உவப்பில்லை யெனினும் உயிர் நீப்பதிலும் உவப்பில்லையே. உயிரைக் காப்பதில் உயிரா யிருக்கின்றனர். பணமும் சாபம், பிணமும் சாபம். உயிர்ப் பிணமாயிருப்பதில் என்ன பயன்? உண்மையை அறிந்தோரே ஆறுதல் அளிக்க வல்லோர். (சாணுவைப் பார்த்து) இவை யனைத்தையும் என் தந்தையிடம் கொண்டுபோய் கொடு. உயிர் வைத்திருப்பதின் உண்மைப் பயனை அறியவேண்டு மானால் சுகத்தாலும் செல்வத்தாலும் கறைப்படாது சென்றறியவேண்டும்.

சாணு:—இவற்றையும் இழக்க வேண்டுமா?

கௌத்தமா:—அன்பின் தியாக சிந்தையோடு கூடிய தேட்டமும் நாட்டமு மின்றி எவன் எந்த நற் காரியத்தைக் கண்டறிந் திருக்கின்றனன்?

சாணு:—தங்களை யாளும் பிரபு வருவா ரென உம்மைப்பற்றி எதிர் பார்த்திருந்த ஜனத் திற்கு நீர் ஏழைக் கோலம் எடுப்பதால் என்ன பயன்?

கௌத்தமா:—ஆளப் பிறந்தவன், தனக்கு யௌவனமும், செல்வமும், சக்தியும், சந்தோஷமும் இருக்கும் நாளில் இல்லாதவருக்கு அவற்றை பகிர்ந்து கொடுக்கக் கூடுமானால் துன்புற்றோருக்காக ஒருவன் தன் இன்பத்தை இழக்கக் கூடுமானால் உலகுக்கு லாபம் இல்லையோ?

சாணு:—விதியை வெல்லப் பிரயாசப்படுவது நன்றன்று. இராஜ்ஜியம் உமக்குக் கொடுக்கப் பட்டது. அதை ஆளும் பிரபு நீரல்லவா? விதிப்பயனை விலக்கலாமா?

கௌத்தமா:—விதிக்கடவுளுக்கு அஞ்சவேண்டியது என்ன? இரக்கம் கிடையாதா? இரக்க முண்டானாலும் இரட்சிக்க சக்தியில்லையா? உலகை உண்டாக்கி துன்பத்தி லிருந்து விடுவிக்க பிரம்மாவுக்கு சக்தியில்லையா? அன்பில்லாதவர், அநுதாப மில்லாதவர், சக்தியில்லாதவர் கடவுளாகார்.

சாணு:—அப்படியல்ல அரசே. வான சேனைகளைப்பற்றி அவ்வாறு பேசலாகாது. பிறர் துயரைக்கண்டு மனமிரங்கும் நீர் உமது உற்றார் துயரை எண்ணவேண்டாமா? அவரைத் துயரக் கடலில் ஆழ்த்திய பின் எவ்வாறு அவருக் குதவுவீர்?

கௌத்தமா:—உற்றோர் பெற்றோரைக் காட்டிலும் மற்றோரை நேசிக்கின்றபடியால் அவரை விடுவிக்கப் புறப்பட்டேன். அவரோடு இவரையும் இரட்சிப்பேன்.

சாணு:—இளவயதின் மனைவியை மறக்கலாமா? அவளுக்கு எவ்வளவு கவலை. இப்போது தான் குழந்தை பெற்றிருக்கின்றாள். ஆனந்தம் ஆரம்பித்த அன்றிரவே அவள் ஆண்டவன் அவளைவிட்டு அகன்றீர். யசோதாவுக்கு நீர் அனுப்பும் செய்தி ஏதேனும் உண்டா?

கௌத்தமா:—(முகத்தைத் திருப்பிக் கொண்டு தாழ்ந்த குரலுடன்) அவளுக்கு ஒரு செய்தியு மில்லை. மாறா அன்பு உண்டானால் அழியா ஆறுதலு முண்டு. உயிருள்ளோர் அனைவரிலும் அன்பு வைப்பதின் பலனாக அவளை அதிகம் நேசிக்கின்றேன் என் பதை அறிவாள்.

சாணு:—(முழங்காலூன்றி) ஆண்டவரே! அடியேனை மன்னிக்க வேண்டும். விதி மதியை வெல்லும் சக்தி வாய்ந்தது. இராஜ்ஜிய பாரத்தினின்று உம்மைக் கலைக்கும் கடவுள் கிடையாது. கந்தையுடை யணிந்தோ, முடி சூடியோ, உலகம் உம் சக்தியைக் காணும் காலம் சமீபம்.

கௌத்தமா:—(சாணுவை எழுப்பிவிட்டு கையைப்பிடித்து) மங்கள முண்டாவதாக! பலமடையப் பரிசோதித்தாய். இப்பொழுது என் குதிரையையும், ஆடை ஆபரணங்களையும், பட்டயத்தையும் கொண்டுபோய் அரசனிடம் கொடுத்து, முன்னிலும் பதின் மடங்கு ஞான மடைய ஒளியைத் தேடித் தனிமையாய் அலைந்து திரிகின்றபடியால் சித்தார்த்தாவை மறந்து போகவேண்டுமென்று கேட்டுக் கொள்வதாய்ச் சொல். நான் தேடும் வண்ணம் ஒருவரும் இதுவரை தேடினதில்லை. என் உலகை மீட்க உலகையே மறுத்து விட்டேன்.
போய் வா சாணு! நமஸ்காரம்!!

சாணு:—மங்களமுண்டாவதாக!

(நமஸ்கரித்துச் செல்லுகின்றனர்)

———:o:———

## நன்மையின் பன்மை

பெஞ்ஜமின் பிராங்க்லின் என்பவரின் ஊரிலுள்ள ஆள் ஒரு நாள் அவரை பிரான்ஸ் தேசத்தில் கண்டு உதவி தேடினன். அவன் விரும்பிய உதவி அனுப்பியபோது அவர் எழுதிய கடிதம் பின் வருமாறு:—

"இத்துடன் ரூ. 30 அனுப்புகின்றேன். ஈவாக அல்ல கடனாக அனுப்புகின்றேன். நம்மூருக்கு நீ வருங்கால் ஒரு வேளை ஓர் உத்தியோகங் கிடைக்கலாம். அப்பொழுது இக் கடனைத் தீர்க்க நிர்வாகம் ஏற்பட்டால் அதை எனக்குக் கொடுத்துத் தீர்க்காமல் உன்னைப் போல் அக்காலத்தில் கஷ்டப்படும் ஒருவனுக்குக் கடன் கொடுக்க மனங் கோணாதே! ஈவாக அல்ல கடனாகக் கொடு. அவனும் அவ்வாறே நல்ல நிலைமையி லிருக்கும்போது வேறொருவனுக்கு இப்பணத்தைக் கடனாகக் கொடுக்கட்டும். இந்த நன்மையின் பன்மையைக் காண ஆசிக்கின்றேன். இது பலுகிப் பெருகட்டும். திருடனன்றி வேறொருவனும் இந்த நன்மைச் சங்கிலித் தொடரை அறுக்கமாட்டான். அற்பப் பணத்தின் ஆசீர் பெருக்குப் பெரியதே! தர்மத்தின் தன்மை நன்மையின் பன்மையே!

"உண்ணும் உணவல்ல, ஜீரணமாகி உடலோடு சேரும் உணவே உரம் தரும். சேர்ந்த லாபமல்ல, செலவழிக்காமல் சேர்த்தவையே செல்வம் தரும். கற்றவையல்ல, கற்றதை ஞாபகத்தில் வைப்பதே கல்விமானுக்கும். போதிப்பதல்ல, சாதிப்பதே கிறிஸ்தவனுக்கும்."

Bacon



## சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம்

KAMALA P. FENN.

ஐரோப்பாவிலுள்ள ஸ்விட்சர்லாந்து தேசத்தைச் சேர்ந்த ஹென்றி டூனென்ட் என்பவர் இதை ஸ்தாபித்தார். அவர் 1859ஆம் இடாலி தேசத்தைக் கடந்து செல்கையில் அங்கு ஆஸ்திரியருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த கடூர யுத்தக் காக்ஷியைக் கண்ணுற்று மனக் கலக்க மடைந்தது மன்றி யுத்தத்தில் காயப்பட்டோருக்குத் தன் நண்பருடன் தன்னாலியன்ற உதவி செய்தார். இதன் பின் இததகைய சேவைக்காக ஒரு சங்கம் ஏற்படுத்த எண்ணி அதற்காக மனம் சோராது உழைத்து அரசர்களையும் ராஜதந்திர நிபுணர்களையும் இவ்விஷயத்தில் அனுதாப முறச் செய்தார். 1863ம் ஆண்டில் ஸ்விஸ்தேச சர்க்கார் ஜினீவாவில் ஒரு மகா நாடு கூட்ட, அதில் எல்லா தேசத்துப் பிரதிநிதிகளும் யுத்தத்தில் காயப்பட்டோருக்கு உதவி செய்வதாக ஒப்புக்கொண்டு கையொப்ப மிட்டனர்.

இச் சம்பவம் ஜினீவாவில் சிவந்த பரப்பின் மீது வெள்ளைச் சிலுவை தோன்றிய கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு பெரிய சபா மண்டபத்தில் நடைபெற்றது. போர்க்களத்தில் காய முற்றோர்க் குதவி யளிப்போர் அணியவும், அங்குள்ள வைத்திய சாலைகளுக்கும், காயப்பட்டோரைக் கொண்டுவரும் வண்டிச் சாதனங்களுக்கும் ஒரு குறி வேண்டு மென தீர்மானிக்கப்பட்டதால் ஸ்விஸ் தேசத்தின் கொடியின் அம்சங்களை மாற்றி அதை அடையாளக் குறியாக வைக்க எல்லோரும் சம்மதித்தனர். ஆகவே அன்று முதல் ஓர் வெள்ளைப் பரப்பின் மேல் தோன்றும் செஞ்சிலுவையே எந்த தேசத்தையும் மதத்தையும் சேர்ந்த வியாதியஸ்தருக்கும் துன்பப்படுவோருக்கும் உதவிபுரியும் சின்னமாக விளங்கிற்று. இச் சின்னம் எவ்விதமான மார்க்கக் கருத்து முடைய தன்று.

கடந்த மகா யுத்தத்தில் இச் செஞ்சிலுவைச் சங்கம் புரிந்த பெரிய சேவையை எடுத்துக் கூறவும் இயலுமோ! ஆக ஹென்றி டூனென்ட் யுத்த காலத்தில் உதவக் கூடிய சங்கத்தை ஏற்படுத்தினர்.

ஆனால் ஹென்றி டேவியஸ் என்பவர் இவ்வூழியத்தை யுத்த காலத்தில் மாத்திர மன்றி எக்காலத்திலும் நோய் துன்ப முள்ளோர் எவருக்கும் சகாய மளிக்குமாறு ஒழுங்கு செய்தார். சமாதான காலங்களில் செஞ்சிலுவைச் சங்கம் நான்கு வகை இயக்கங்களில் ஈடுபடக் கடமைப் பட்டிருக்கின்றது. அவை சுகாதாரக் கல்வி, வியாதியஸ்தரைப் பராமரிக்கும் அறிவு, சிறுவர் செஞ்சிலுவை, ஆபத்துக்கால உதவி என்பவையே. இது எல்லா தேசங்களிலும் இச் சங்கத்தாரால் கையாளப் பட்டு வருகிறது.

நமது இந்திய செஞ்சிலுவைச் சங்கம் நம் மக்களின் துன்பத்தைப் போக்கவும், ஆபத்தில் உதவி புரியவும் தன் மனதைச் செலுத்தி வருகிறது. பீகார் பூகம்பத்திலும் சமீப வெள்ள விபத்திலும் இச் சங்கம் சிறந்த உதவி செய்தது. தவிர, அதின் வேலை விபரம் பின் வருமாறு: சிசு சம்ரக்ஷணை வேலை, மக்களின் பொது சுகாதாரக் கல்வி, பொது மக்களின் சுகம், வியாதியஸ்தர் பராமரிப்பும், வீடுகளைச் சந்தித்தலும், ஆபத்துக் காலத்தில் மக்களின்

இடையூறுகளை நிவிர்த்திக்கல், ஆஸ்பத்திரிகளுக்குப் படுக்கை முதலிய வசதி கொடுத்தல், பள்ளிக் கூடங்களில் சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம் ஸ்தாபித்தல் என்பவையே.

சிறுவர் செஞ்சிலுவையானது செஞ்சிலுவையின் சிறுவர் பாகம். ஆசிரியரின் உதவியைக் கொண்டு ஏற்படுத்த வேண்டியது.
முக்கிய நோக்கங்கள் :—

1. சுகாதார வழக்கங்களைக் கையாடல்

2. நோய் துன்புற்றோருக்கு அதிலும் விசேஷமாய் சிறுவருக்கு உதவி செய்தல்.

3. கடிதம் படங்களடங்கிய புஸ்தகங்கள் முதலியன ஒரு சிறுவர் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தினரிடமிருந்து மற்றொரு தேசச் சிறுவர் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தினருக்குப் போகவும் வரவும் ஒழுங்கு செய்வதால் ஒரு தேசத்துச் சிறுவருக்கும் மற்றொரு தேசச் சிறுவருக்கும் ஒரு பாந்தவம் ஏற்பட ஏதுவாகும்.

இந்தியாவிலுள்ள சிறுவர் செஞ்சிலுவை அங்கத்தினர் பின் வரும் சுக ஜீவிய சட்டங்களைக் கைக்கொள்வதுடன் தொத்து வியாதிகளை எதிர்க்கும்படி ஜனங்கள் அம்மைப்பால் வைத்துக் கொள்ளவோ, ஊசி போட்டுக் கொள்ளவோ அவர்களைத் தூண்டுவதோடு தங்களிலும் எளிமையாயுள்ள தங்கள் தோழருக்குப் புஸ்தகங்கள் வாங்கிக் கொடுக்கவோ, ஆகாரம், உடுப்பு முதலியவைகளுக்காக அவசியம் நேரிடும்போது ஒழுங்கு செய்யவோ ஆக்கிர முள்ளவர்களா யிருக்கிறார்கள். நாம் ஸ்தாபிக்கும் சங்கங்களும் இவ்வித சேவை புரிய வல்லமையுள்ளதாக்க வேண்டியது நம் கடமையன்றோ.

## சிறுவர் செஞ்சிலுவை அங்கத்தினர் செய்யவேண்டியவை

(A) The Promotion of Health—சுகாதாரத்தை விர்த்தி பண்ணுதல்:—

I Personal Hygiene—தனித்தாள் சுகாதாரம்.

I (a) சுகாதார வழக்க பழக்கங்களைக் கையாடல்—இதில் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு அட்டவணை chart கொடுத்து அதில் குறிப்பிட்டு அதிக மார்க் எடுக்கும் பிள்ளைக்கு பரிசு கொடுக்க வேண்டும்.

(b) சுகாதாரக் கல்வி யறிவு—வியாசங்கள் எழுதல்—பாடங்கள் கற்பித்து வியாசங்கள் எழுதக் கேட்பது அவசியம்.

(c) பட அட்டைகள் செய்தல்—சுக ஜீவிய சட்டங்களை பட ரூபமாக விளக்கி தங்கள் அறைகளில் தொங்கவிடல்.

II School Hygiene—பாடசாலை சுகாதாரம்

(a) வகுப்பறை சுத்தம் (b) கக்கூஸ் சுத்தம்—உபயோகம்—(c) விளையாட்டு ஸ்தலம் (d) சுத்தமான குடிக்கும் தண்ணீர் வசதி—(e) பள்ளிக் கூடத்தோட்டம் உண்டு பண்ணி ஆகாரத்தில் காய்கறிகளின் முக்கியத்தை வற்புறுத்தல்.



III Community Hygiene—சமுதாய சுகாதாரம்.

(a) சிசுக்கள் சுகாதார வாரம்—சிறுவர் தங்கள் ஸ்தல சம்பவங்களில் பங்கெடுக்கலாம்.

(b) தொத்து நோய்களைப் பரவச்செய்யும் கொசு, ஈ, எலி முதலியவற்றை குறைக்கும்படியாக ஸ்தல சுகாதார அதிகாரிகள் எடுத்துக்கொள்ளும் எல்லாவிதப் பிரயத்தனங்களிலும் சிறுவர் செஞ்சிலுவை அங்கத்தினர் உதவிபுரியவேண்டும்.

(c) அம்மைப்பால் வைப்பதிலும், ஊசி போடுவதிலும், சிறுவர் தாங்களே முந்திக் கொண்டு அவைகளின் பிரயோஜனத்தைப் பிறருக்கும் தெரியப்படுத்தி அவர்களும் இவ்வித சிகிச்சைகளுக்கு உட்படத் தூண்டவேண்டும்.

(d) கண்களை குருடாக்கக்கூடிய எவ்விதத் துர்ப்பழக்கங்களுக்குள்ளும் தாங்கள் ஈடுபடாமலும் பிறர் விழாமல் தடுக்கவும் சிறுவர் முயல்வதோடு குருடரைக் குருட்டுப் பள்ளிக் கூடம் இருக்கிற பாளையங்கோட்டை போன்ற விடங்களுக்கு அனுப்ப ஏற்ற ஒழுங்குகள் செய்ய வேண்டும்.

B. நோய் துன்புற்றோருக்குச் சேவை:—

1. ஆஸ்பத்திரிகளிலுள்ள நோயாளிகளுக்கென்று சிறுவர் படப் புஸ்தகங்களும் விளையாட்டுச் சாமான்களும் செய்யலாம். அவர்களுக் கென தங்கள் தோட்டங்களில் பூச்செடிகளும் காய்கறிச் செடிகளும் வைத்து வளர்க்கலாம்.

2. தங்களை ஒறுப்பதாலும் அல்லது பணம் சேகரிப்பதாலும் தங்கள் ஜில்லாவிலுள்ள அல்லது தங்கள் பள்ளிக்கூடத்திலேயே உள்ள ஏழை மாணவருக்கு உணவு, உடை, புஸ்தகங்கள் கொடுத் துதவுவது சிறுவர் செஞ்சிலுவை அங்கத்தினர் இலட்சணமாகும்.

3. வெள்ளம், பஞ்சம், தீ, பூகம்பம் போன்ற விபத்துக்கள் நேரிடும் காலங்களில் இச் சிறுவர் இடுக்கண்பட்டவருக்கு விசேஷமாய் அவ்வித சிறுவருக்கு முதலுதவி செய்யவோ, ஆகாரம், ஆடை மற்றும் மிக்க அவசியமானவை கொடுத்து ஆதரிக்கவோ முன்வரவேண்டும்.

C. சர்வதேச சிநேகம்:—

மத இன பேத மின்றி எவருக்கும் சமமாக சேவை புரிய வேண்டு மென்ற செஞ்சிலுவை நோக்கத்தைச் சிறுவருக்கு நன்கு புகட்டவேண்டும். சற்று பெரிய பிள்ளைகள் சர்வதேச சங்கத்தின் ஒழுங்குகளையும், அதில் இந்தியா செய்யும் சேவையின் பங்கு இன்னதென்பதையும் படிக்க வேண்டும்.

# உள்ளத்தில் உண்மை.

ஆனந்தி என்ற பெண்மணி ஒரு பூந்தோட்டத்தில், சோலைகளுள் ஒளிந்துகொண்டு தன் காரியாதிகளைக் குறித்து யோசித்தனள். ஏனெனில் கிராம முன்னேற்ற சங்கத் தேறுதலில் ஆனந்திக்கு ஒரு ஸ்தானமும் கொடுக்கப்படவில்லை. கடந்த வருஷம் முழுவதும் ஆனந்தி எவ்வளவோ பிரயாசை எடுத்து கிராமத்தில் உழைத்தும், தனக்கு கிராம முன்னேற்ற சங்கத் தலைவர் ஸ்தானம் கிடைக்குமென்று நம்பின நம்பிக்கை வீணாய் போயிற்று என்று நினைத்து அவள் வருத்தத்துடன் அன்று அங்கு இருந்தனள்.

அக் கிராமத்திலுள்ள பெண்கள் யாவரிலும் ஆனந்தி சங்கக் கூட்டங்களை நடத்துவதில் மிக்க திறமைவாய்ந்தவள். ஆனால் சங்கத்தாருக்கு இவள்பேரில் அதிருப்தி உண்டு. ஒரு தரம் ஒரு கூட்டத்தில் அவ்வூர் டாக்டர் அம்மையாரைப்பேச ஒழுங்குபண்ணி ஆனந்தி டாக்டர் அம்மையாரிடம் போய்க்கேட்டு ஒழுங்குசெய்ய தீர்மானித்திருந்தது. இப் பெண்ணோ கடைசி நாள்வரை டாக்டரிடம் போகவில்லை. மற்றப் பெண்கள் இவளைக் கண்டு கூட்டத்திற்குப் பேச டாக்டர் அம்மையாரை ஒழுங்கு செய்துவிட்டாயா? என்றதற்கு டாக்டர் அம்மையார் திட்டமாய்ப் பேசுவார்கள் என்றனள். மறுநாள் அதிக பரபரப்புடன் ஆனந்தி டாக்டரிடம் ஓடினள். டாக்டருக்கு நேரமில்லாமற் போயிற்று, அன்றையத்தினம் நடந்தக் கூட்டத்தில் பேச ஆள் கிடையாது. இக் குற்றத்தைக் குறித்து மற்றவர்கள் இவளிடம் பேசினால், இவளுக்குத் தப்பிதமாகத் தெரியவில்லை. இது பொய்யாகுமா? டாக்டர் அம்மையார் திட்டமாய்ப் பேசுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அவர்களுக்கு நேரமில்லாவிட்டால் என்பேரில் குற்றமாகுமா? என்று தனக்குள் நினைத்தனள்.

ஆனந்தி கை வேலையிலும் தேர்ந்தவள். சின்னக் கம்பளங்கள் செய்வதிலும், தரி அடிப்பதிலும், நூல் நூற்பதிலும் மகா கெட்டிக்காரி. ஒருதரம் அவ்வூரில் பொருள்காட்சிசாலை திறப்பு விழா வந்தது. அந்த ஜில்லாவிலுள்ள பலர் பல கைவேலைகள் கொண்டு வந்து வைக்கவும் உசித மானப் பொருட்களுக்கு இனாம் அளிப்பதாகவும் செய்தி. சுகந்தி என்ற மாது இதற்கு தலைமையாக இருந்தனள். அந்த மாது ஆனந்தியின் கைத்திறமை தெரிந்தபடியால், இக்கிராமத்துக்கு ஆனந்தியே சில கைவேலைகள் செய்ய கேட்டுக்கொண்டனள். அவ்வாறே செய்ய ஆனந்தியும் சம்மதித்தனள். சில நாட்கள் சென்றதும் சுகந்தி ஆனந்தியைக் கண்டு கை வேலைகள் செய்து முடித்துவிட்டாயா என வினவினள். கை வேலைகள் யாவும் குறித்த தினத்தன்று உங்களிடம் சேர்ந்துவிடும். யாதொரு கவலையும் கொள்ளல் அனாவசியம் என்று விடைபகர்ந்தனள் கண்காட்சி தினமன்று ஆனந்தி ஒன்றும் கொண்டுவரவில்லையென கண்டு சுகந்தி அதிக மனவருத்தமடைந்தனள். மற்ற பெண்களும் இதைக் குறித்து பேசி தங்கள் வெறுப்பைக் காட்டினார்கள். ஆனந்தி இதில் என்ன குற்றமிருக்கிறது? இது பொய்யாகுமா? நான் செய்துவிடலாமென உத்தேசித்தேன். மறந்துவிட்டேன். பொய் ஒன்றும் சொல்லவில்லையே. சுகந்தி மற்றவர்களையும் செய்யச் சொல்லியிருக்கலாம் என தன் மனதில் நினைத்தனள். ஆனந்தி இவ்வாறாக தன்



காரியாதிகளைக் குறித்து யோசித்துக்கொண்டு தோட்டத்தில் இருக்கும்போது இவள் தமயன்



ஆனந்தியின் ஆழ்ந்தயோசனை

தேவபுத்திரன் தன் பெற்றோரிடம் இக் காரியங்களைக் குறித்து வினவினன்... ஆனந்தியின் தாயார் தன் மகள் எவ்வளவோ உழைத்தும் கிராம முன்னேற்ற சங்கத்தார் அவளை அலட்சியம் செய்துவிட்டார்கள் என வருத்தப்பட்டனள். தேவபுத்திரன் தன் தாயாரைப் பார்த்து "ஆனந்தியை நம்பி ஒரு காரியமும் செய்ய முடியாது. அவளிடம் உண்மையில்லை. நீங்கள் வீட்டைப் பெருக்கிக் குப்பையைக் குப்பைத் தொட்டியில் போடச் சொல்லுகிறீர்கள். அவள் ஒருநாளும் அப்படிச் செய்கிறதில்லை. தான் செய்துவிட்டதாக உங்களிடம் சொல்லுகிறாள். குப்பையை பெட்டிக் கடியில் தள்ளிவிடுகிறாள்.' என்றான். இது பொய்யாகுமா என்றாள் தாயார். உடனே தகப்பனார்-" தேவபுத்திரன் சொல்லுவது சரியே. தன் வேலையை சரிவரச் செய்யாமல், குற்றங்களை மற்றவர்கள் பேரில் சுமத்துவது அவளது வழக்கம். தன்பேரில் மற்றவர்களுக்குக் கோபம் உண்டு எனவும், தனக்குச் சத்துருக்கள் அதிகம் எனவும் பேசுகிறாள். இவளது குணம் இப்படியே வளருமானால் ஆனந்தி ஒருபோதும் சந்தோஷமாக விருக்க முடியாது. அவள் குணம் மாறவேண்டும். அவள் சீர் அடையவேண்டும். தாயார் இதில் கண்டிப்பாயிருப்பது அவசியம்" என விடை பகர்ந்தார்.

சற்று நேரத்துக்குப்பின் ஆனந்தி வீட்டிற்குள் நுழைந்தாள். தகப்பனார் மகளைப் பார்த்து—ஏன் துக்க முகத்துடன் இருக்கிறாய் என்றனர். ஆனந்தி அழுது கொண்டு மற்றப் பெண்கள் தன்மேல் கோபமாய் இருப்பதையும் தான் குற்றம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் ஒன்றும் செய்யவில்லை எனவும், தனக்கு இந்த வருஷத் தேறுதலில் இடமில்லாமல் போனதையும் விஸ்தாரமாய் எடுத்துக் கூறினாள். தாயாரும் மனவருத்தப்பட்டு கண்ணீர் விட்டனள்.

தேவபுத்திரன் தங்கையைப் பார்த்து—" பெண்கள் செய்தது சரியே. உன்னை நம்பி ஒரு காரியமும் செய்யக்கூடாது. உன் காரியத்தை ஒளிக்க நீ எப்போதும் பொய் உரைக்கின்றாய் என்றனன். ஆனந்தி ஒன்றும் பேசாது, தன் அறைக்குட் சென்று சத்தமிட்டு அழுதாள். மறுநாள் தன் தமயனிடம் பேசவில்லை. கோபமாய் இருந்தாள். தாயார் மகள் கோபம் தணிய அவள் தன் தங்கையுடன் கடைக்குப் போய்வர உத்திரவு கொடுத்தனள். தாயார் மகளைப்பார்த்து கடைக்குப் போகுமுன்-தண்ணீரைக் கொதிக்கவைத்து கூஜாவில் ஊற்று. அடுத்த கிராமத்தில் விஷபேதி இருக்கிறதாம். நாம் குடிக்கும் ஜலம் கொதிக்க வைக்கப்படவேண்டும் என்று உத்திரவு கொடுத்தனள். கடைக்குப்போகும் அவசரத்தில், ஆனந்தி இன்றைக்கு தண்ணீர் கொதிக்க வைக்க முடியுமா? தாயாருக்கு என்ன வித்தியாசம் தெரியப் போகிறது என நினைத்து, ஜலத்தை கொதிக்கவைக்காமல் கூஜாவில் ஊற்றி வைத்தனள். ஆனந்தி போகும்போது தாயார் அவளை நோக்கி „ஜலத்தை கொதிக்கவைத்து கூஜாவில் நிரப்பி விட்டாயா?" என்றாள்.

ஆனந்தி:—என்ன அம்மா? அடுத்த கிராமத்தில் விஷபேதி இருப்பது எனக்கு தெரியாதா? ஜலத்தைக் கொதிக்கவைப்பது அவசியம் என்றும் எனக்கு தெரியாதா? என்று பதில் உரைத்தனள்.

அன்று முழுவதும் ஆனந்தியும் அவள் சிற்றம்மையாரும், கடையில் வாங்கவேண்டியவைகளை வாங்கிக்கொண்டு, சாயந்திரம் மோட்டார் பஸ் ஏற வந்தார்கள். கிராமத்தான் ஒருவன் ஓடி வந்து, "ஆனந்தி! உன் தமயனுக்கு விஷபேதி கண்டு வீட்டிற்கு கொண்டுவந்தார்கள். டாக்டர் வந்து சிகிட்சை செய்தார்" என்றனன்.

உடனே ஆனந்தி: ஐயோ நான் தப்பிதம் செய்தேன். ஜலத்தை கொதிக்கவைக்கவில்லை, பொய் சொன்னேன். உண்மை உரைத்திருப்பேனாகில் என் தாயார் கொதிக்கவைத்து ஜலம் கொடுத்திருப்பார்களே. என் தமயன் சுகத்துடன் இருந்திருப்பானே. எனப் புலம்பினாள். கடவுளை நோக்கி, "பிதாவே என் தமயன் ஜீவனைக் காப்பாற்றும். என்னை மன்னியும்" என்று அடிக்கடி ஊர் வரும்வரை ஜெபித்துக்கொண்டே வந்தாள். தன் தமயன் போன இரவில் தன்னைக் குறித்து சொன்னதையும், தன் உண்மையற்ற நிலைமையையும் நம்பிக்கையற்ற குணத்தையும் உணர்ந்து, கடவுளிடத்தில் அறிக்கை செய்து, தன் குற்றம் தனக்கு காட்டப்பட்ட பின்னும் தான் மறுபடியும் பொய் சொன்னதையும் நினைத்து மனம் நொந்தாள். தான் எப்படியாகிலும் இனிமேல் உண்மையுள்ள ஜீவியம் செய்ய தீர்மானித்தாள். கடவுள் தன் உள்ளத்தில் எப்பொழுதும் உண்மையை தரும்படி வேண்டினள்.

இதற்குள்ளாக பஸ் வந்து சேர்ந்து விட்டது. ஆனந்தி அழுத கண்ணும் தலைவிரிகோலமாய் வீட்டிற்குள் நுழைந்து தமயன் கட்டிலில் படுத்திருப்பதையும், தகப்பனார் குனிந்து அவரை கவனிப்பதையும் கண்டு, தாயாரிடம் ஓடி, ஐயோ அம்மா வென் றலறி "எல்லாம் என் குற்றந்தான். ஜலத்தை நான் காய்ச்சி ஊற்ற வில்லை. பொய் சொன்னேன். இனிமேல் ஒருபோதும் என் கடமைகளை அலட்சியம் செய்து குற்றங்களை மற்றவர்கள்மேல் சுமத்தாமல் உண்மையுடன் எல்லாக் காரியங்களையும், செய்வதாக கடவுளிடத்தில் அறிக்கை செய்திருக்கின்றேன். என் தமயன் பிழைப்பாரா? அம்மா சொல்லுங்கள்" என புலம்பினள். தேவபுத்திரன் தலையை மெல்லத் தூக்கித் தன் சகோதரியை நோக்கினன். பெற்றோர் திகைத்து நின்றனர். இதற்குள் சிற்றன்னை வந்து சேர்ந்தனள். அவ்வம்மையார் "ஐயோ தேவ புத்திரன் விஷபேதி கண்டு கஷ்டப்படுகிறான்" என்று கேள்விப்பட்டோமே என்றனள்.

தாயார்—மகன் இன்று காலையில் ஆகாரம் அருந்தாமலும், பகலில் கஷ்ட வேலை



செய்தபடியாலும், வயலில் மயங்கி விட்டான். வீட்டிற்கு கொண்டு வந்தபோது காலரா டாக்டர் சமீபத்தில் இருந்தார். அவரைக் கூப்பிட்டு சிகிச்சை செய்ததினால் மற்றவர்கள் விஷபேதி என்று எண்ண ஏதுவாயிற்று. 'என்று விடை பகர்ந்தனள். ஆனந்தியின் மன நிலைமை மாறியது. பேதியாயிருந்தால் நான் என் செய்வேன். கடவுள் இன்னும் ஒரு தவணை எனக்கு கொடுத்திருக்கிறார் போலும். வருங்காலத்தில் நான் எல்லாரிடத்திலும் உண்மையாயும், நாணயமாயும் நடந்து கொள்வேன் என தீர்மானித் திருக்கின்றேன்.' என்று சொல்லுவதற்குள்—தேவபுத்திரன், "சந்தோஷம், நாங்கள் எல்லோரும் உனக்கு உதவி செய்வோம்" என்றனன்.



ஆனந்திக்கு அவள் செய்த தீர்மானம் முதலில் கஷ்டமாகவே யிருந்தது. கடவுளை அடிக்கடி வேண்டிக் கொண்டனள். தன் தப்பிதங்களை மற்றவர்களிடம் அறிக்கை செய்தனள். கடைசியாக உண்மையே தன் உச்சி வடமாக கொண்டனள். மறு வருஷ கிராம முன்னேற்றத் தேறுதலில் மற்றப்பெண்கள் ஆனந்தியை தலைவியாக தெரிந்தெடுத்தனர். இவள் அன்பையே அணியாக கொண்டவள். பொறுமையையே பூஷணமாகத் தரித்தவள் அறத்தையே ஆடையாக புனைந்தவள். வாய்மையையே உச்சி வடமாகப் பூண்டவள்.

சென்னை-600 008

———:o:———

"சொந்தப் புகழ் ஓங்க வழியில்லையேனும்
அந்தம் வாய்ந்த தென அறிந்த வற்றை,
எந்த விதமேனும் செய்திடுக"—

Pythagoras.

பத்தனுனைக் கடையில் நேசி. சத்துரு தன்னை ஆசி.
உத்தம உண்மை வெல்லும். நித்தமும் கேடு கொல்லும்.
பலவித எரிச்சல் நாவும் வலக்கர சாந்தம் மேவும்.
நயமிகு நீதி நாட்டு. பயமென்ற தெல்லாம் ஓட்டு.
கடவுள் சத்திய முண்மைக்கும் புடவியில் புகழ் ஓங்கட்டும்."

Shakespeare.

———:o:———

தந்தி: பின்மென்

போன்: 2281

உங்கள் விலை உயர்ந்த உடைகளை தண்ணீரில் நனைக்காமல் அழுக்கை நீக்கவும், சாயம் போடவும், சலவை செய்யவும் வேண்டுமானல்

ஆங்கிலோ பர்மா பின்மென்,

147, பிராட்வேக்கு அனுப்பவும்.

## திராட்சைப் பழச் சர்ப்பத்து

கனிந்த சுத்தமான திராட்சைப் பழங்களை ஓர் அலுமினியப் பாத்திரத்தில் போட்டு பிசைந்து, ரசம் முழுவதையும் இறக்கவேண்டும். வெள்ளைத்துணியினால் வடிகட்டி, ரசத்தை எடை பார்த்துக்கொண்டு, அலுமினியச் சட்டியில் ஊற்றிக் காய்ச்ச வேண்டும். நன்றாகக் காய்ந்தபின் இறக்கி ஆறவைக்க வேண்டும். ரசம் எவ்வளவு எடையோ அவ்வளவு சீனி அல்லது கற்கண்டுத் தூள் சேர்த்து ரசத்துடன் காய்ச்சவேண்டும். பாகு பக்குவமாகக் காய்ச்சி, அதில் 2 பலம் பன்னீர் விட்டாலும் நல்லது. பின்பு இறக்கி ஆறினபின் புட்டியில் அடைக்கவேண்டும். இது பித்த சூட்டையும், கை கால் எரிச்சலையும் தணிக்கும். காலையில் 6 ரூபாய் எடை ஜலத்தில் 3 ரூபாய் எடை சர்பத்தை சேர்த்து உபயோகிக்கலாம்.

---

## லட்டுப் பலகாரம்

<u>பொருட்கள்:—</u>

| | |
|---|---|
| சுத்தமான கடலை மாவு | ½ படி |
| சீனி | 1½ படி |
| குங்குமப்பூ | ½ அணா |
| ஏலம் | ½ அணா |
| வாதுமைப் பருப்பு அல்லது முந்திரி பருப்பு | 2½ பலம் |
| திராட்சைப் பழம் | 2½ பலம் |
| கற்கண்டு | 2½ பலம் |
| நெய் | 15 பலம் அல்லது கால் படி |
| தேங்காய் எண்ணெய் | 10 பலம் அல்லது ⅛ படி |
| உப்பு | |

கடலை மாவைப் கொஞ்சம் உப்பையும் சேர்த்து நன்றாகப் பிசையவேண்டும். நன்றாகப் பிசைந்து தோசை மாவும் பக்குவத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

தனி நெய்யும் உபயோகிக்கலாம். அல்லது நெய்யும் எண்ணெய்யும் கலந்து இரும்புச் சட்டியில் ஊற்றிக் காய்ச்சி, மேலே தயாராக்கி வைத்திருக்கும் மாவை பெரிய துவாரங்களுள்ள ஜல்லிக் கரண்டியில் ஊற்றித் தேய்த்து விடவேண்டும. ஒவ்வொரு தடவையும் ஒரு கரண்டி மாவுதான் தேய்க்க வேண்டும். பூந்திகள் சமமாய் காய்ந்திருக்கும் நெய்யில் விழும். நன்றாக வெந்தவுடன் மற்றொரு ஜல்லிக் கரண்டியினால் திருப்பிக் கொடுத்து சட்டியிலிருந்து எடுத்து இன்னொரு பாத்திரத்தில் வைக்கவும். இப்படியே எல்லா மாவையும் பூந்திகளாகச் செய்து கொள்ளவும். இதற்குள்ளாக 1½ படி சீனியை ½படி ஜலம் ⅛ படி பால் சேர்த்து முதிர்ந்த பாகாக்கி, குங்குமப் பூவையும் பாலில் கலந்து சேர்க்கவேண்டியது. இந்த பாகில் பூந்திகளைக் கொட்டி, திராட்சை, முந்திரி பருப்பு கற்கண்டு இவைகளையும் சேர்த்து நன்றாக கிளறிக் கொடுத்து உடனே உருண்டைகளாக உருட்டி லட்டுகளாகச் செய்து விடவேண்டும்,

Jane Fenn.



## வர்த்தமானம்

புறதேச செய்தி:—

### ஐரோப்பாவும் நாஸிகளும்

ஹிட்லர் செக்கோஸ்லோவேக்கியா நாட்டிற்குள் இன்னும் பிரவேசிக்கா விடினும், நாஸீகள் எனும் ஹிட்லரின் கட்சியார் அந்நாட்டைத் தமக்குச் சொந்தமாக்கும் நம்பிக்கையை இழந்துபோகவில்லை. நாஸீகள் உள்ளே இருந்து வேலைசெய்கின்றனர். நாட்டின் சிக்கன செல்வாக்குக் குன்றிப்போகத் தக்கதாய், ஜனங்களின் மனதைக் கெடுத்து சன்மார்க்க நிலை தவறும்படியாகவும் உழைக்கின்றனர். ஹிட்லர் எப்படியாகிலும் படை எடுப்பார் என்னும் செய்தியை இரகசியமாய் விதைத்து வருகின்றனர்.

"செக்கோஸ்லோவேக்கியாமீது தாக்கும் முறை" என்னும் பொருளின் மேல் வியாசம் எழுதும் போட்டியில் பரிசுபெற்ற வியாசத்தில் படை யெழுச்சியின் திட்டவட்டமான ஹம்சங்கள் வரையப்பட்டிருந்தன. அதன்படி படையெழுச்சி திடீரென எழுந்து நசுக்கவேண்டுமாம். பதினான்கு நாட்களுக்குள் போர்முடியவேண்டுமாம். வெற்றி வீரர் ரைன்நதி தீரத்திற்குச் சென்று பிரான்சுக்காரர் உதவிக்கு வராதபடி தடுக்கவேண்டுமாம். ஜெர்மனி நீண்டகால யுத்தம் செய்யமுடியாதாம்.

### பலஸ்தீனாவின் நிலைமை

மறுபடியும் பலஸ்தீனாவுக்குக் கஷ்டம் வந்துவிட்டது. நாள்தோறும் யூதரும் அராபியரும் கத்திக் கிரையாகின்றனர். 1936ஆம் ௵. ஏப்ரல்மீ அராபியர் வேலைநிறுத்தம் செய்த போது கலகம் ஆரம்பித்தது. இரு கட்சியினரும் கொடுமையான முறைகளை யனுசரித்தனர். 1936௵. செப்டெம்பர்மீ 12000 போரடங்கிய பிரிட்டிஷ் படை பலஸ்தீனாவுக் கனுப்பப்பட்டது. யுத்தகால சட்டம் அனுசரிக்கப் பட்டது. அதே ஆண்டில் அக்டோபர் மாதம் வேலைநிறுத்தம் ஒழிந்தது. 1937௵. ஜூன்மீ பலஸ்தீனா விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட ராஜாங்க சிற்சபையார் தேசத்தைப் பிரிக்க வேண்டுமென ஆலோசனை கொண்டுவந்தனர் இது அராபியருக்குப் பிரியமில்லை. செழிப்பற்ற பாகம் அவர்களுக்குத் தேவையில்லை. ஆகையால் இன்னும் கலகம் முடிவுக்கு வரவில்லை. இரு கட்சியாரும் திறந்துபேசி விட்டுக் கொடுத்தாலன்றி ஒரு தீர்மானமும் முடிவானதா யிராது என்று அராபியர் எண்ணுகின்றனர்.

### சீனா யுத்தம்

ஓர் ஆண்டில் லாப நஷ்டம்

1937௵ ஜூலைமீ 7௳ சீனாவில் யுத்தம் துவங்காமல் துவங்கிற்று. பீக்கிங் என்னும் இடத்திற் கருகி லுள்ள லூக்கூச்சியாவோ எனும் ரெயில்வே ஜங்ஷனில் சீனா ஜப்பான் படை வீரருக்குள் ஒரு மனஸ்தாபம் ஏற்பட்டு கலகம் ஆரம்பித்தது.

முதல் ஆறுமாதத்திற் குள்ளாக வட சீனாவில் பெரும் பாகத்தையும், மங்கோலியா உட்நாட்டையும் யாங்டிஸ்கியாங் நதி யோடும் மத்திய சீனாவையும், தலைநகராகிய நான்கிங்கையும் ஜப்பானியர் கைப்பற்றிக் கொண்டனர். தென் சீனாக்கடற் கரையோரங்களிலுள்ள பல தீவுகளை ஜப்பான் எடுத்துக் கொண்டனர்.

கடந்த ஆறுமாத காலமாய் சூச்சௌ என்ற இடத்தை அடையும்படி ஜப்பானியர் கடும் போர் புரிந்தனர்-ஐந்துமாதமாய் கஷ்டப்பட்டபின் பலனுக அப்பட்டணத்தைப் பிடித்தனர். வட சீனுவிலுள்ள சேனையையும் மத்திய சீனுவிலுள்ள சேனையையும் இணைத்துக் கட்டக்கூடியவர் களாயினர். அப்படியிருந்தும் ஜப்பானியரோடு சீனர் செய்யும் கைச் சண்டை ஓய்ந்தபாடில்லை. கடந்த ஆறுமாத காலமாய் ஏராளமான தீவுகளை ஜப்பானியர் தங்கள் சொந்தமாக்கியிருக்கின்றனர். அவைகளுள் முக்கியமானது ஆமாய் துறைமுகமுள்ள ஷியா-மென் தீவு.

ஒரு வருஷகாலமாய் ஜப்பான் கைப்பற்றிக் கொண்ட பாகம் 3,70,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. 14,00,00,000 ஜனங்கள் அடங்கியது. ஜெர்மெனி, இத்தாலி, சுவிட்சர்லாண்டு, பெல்ஜியம், நெதர்லாண்டு முதலிய தேசங்களனைத்தையும் இப்பாகத்துக்குள் அமைக்க முடியும். இன்னும் சீனர் சர்க்கார் ஆதினத்துக்குள்ளிருக்கும் பாகம் 25,00,000 சதுரமைல் விஸ்தீரணமுள்ளது. ஜனத்தொகை 29,00,00,000-நூற்றுக்கு 87 பாகமும் நூற்றுக்கு 67 ஜனத்தொகையும் சீனர் வசம் இப்பொழுது இருக்கின்றது.

சீனர் முடிவுபரியந்தமும் போர் புரியத்தீர்மானித்திருக்கின்றனர். தங்கள் சொந்தமெனச் சொல்லக் கூடிய ஓர் அங்குல நிலமிருந்தாலும் விட்டுக் கொடுக்கப் போகிறதில்லையாம்.

சீனுவுக்குக் கடன் கொடுத்துதவும் முறைகளைப் பற்றி லண்டன் பட்டணத்தில் பேச்சு நடக்கின்றதாம். சர்க்கார் இது விஷயமாய் வாக்குறுதி கொடுக்கவில்லை.

சீனு யுத்தத்தின் பயங்கரத்தையும் அதில் வெற்றி யுற சீனர் எடுத்துக் கொள்ளும் பிரயாசத்தையும் உண்மையாய் இந்திய மக்களுக்கு விளங்கும்படி பம்பாயில் சீனர் சகாய சினிமா சிற் சபையொன்று ஏற்பட்டிருக்கின்றது. ஐரோப்பா அமெரிக்காவிலிருந்து சீனரைப் பற்றிய படங்களை வரவழைத்து இந்தியாவின் பல பாகங்களில் காட்டிப் பணஞ் சேர்த்து சீனர் சகாய நிதிக்குக் கொடுக்கப் போகின்றனராம் —

## உலகச் சுற்றுப் பயணம்

ஹவர்ட் ஹ்யூஸ் என்ற கோடீஸ்வரர் நான்கு பேருடன் தன் ஆகாய விமானத்திலேறி நான்கு நாட்களுக் குள்ளாக உலகத்தையே ஒரு சுற்று சுற்றி வந்துவிட்டனர். சில நாட்களுக்கு முன் வில்லி போஸ்ட் என்பார் ஏழுநாளில் சுற்றி வந்தார். ஹ்யூஸ் சுற்றிவர 91 மணி 8 நிமிஷம் 10 செக்கண்டானதாம். நல்வரவுக் கூட்டத்தில் உலகமெங்கு முள்ள விமான வாசிகளின் சகோதரத்துவத்தை இது பலப்படுத்தக் கூடுமானுல் இதில் செலவிட்ட காலமும் சக்தியும் வீணன்று என்று அவர் பதிலுரை கூறி யிருக்கின்றனர்.

இந்திய செய்தி :—

## ஆமடா பாட் மது விலக்கு

ஆமடபாட் தாலுக்காக்களுள் சிலவற்றில் மதுவிலக்கு ஒழுங்கு முடிவுக்கு வந்திருக்கின்றது. இப்பாகத்தில் அபின், கஞ்சா, பங்கி, சாராயம், மருந்துவகை லாகிரி வஸ்துக்கள், திராக்ஷசேவா வரக்கூடாது என்பது சட்டம். இச் சட்டத்துக்குக் கட்டுப் பட்ட பாகங்களாவன :—



ஆமட்நகர் ஜில்லாவைச் சேர்ந்த நிவாசா தாலுகா, ஷெவ்கவான் தாலுகா, தாடிமஹாலுமே; கன்ரா ஜில்லாவைச் சேர்ந்த கும்டா தாலுகா, அன்கில்லா தாலுகாவுமே; புரோச் ஜில்லா பஞ்சமஹால் ஜில்லாக்களில் வாக்ரா தாலுகாவும் ஜம்புசார் தாலுகாவுமே.

## சிந்து சர்க்காரும் பெண்கள் கல்வியும்.

சிந்து மாகாணத்தில் பெண்கள் கல்வியை விருத்தி செய்வதற்காக சர்க்கார் ஒரு செய்தி பிரசுரித்திருக்கின்றனர். பாலர் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்பு வரை படிக்கும் ஒவ்வொரு பெண் பிள்ளைக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ 10 உபகாரப் பணமாகக் கொடுப்பதாக சர்க்கார் தீர்மானித்து 150 பேருக்கு பணம் கொடுக்கும்படி ஒழுங்கு செய்திருக்கின்றனர். உபகாரச் சம்பளம் பெறுவோர் படித்து முடித்தபின் உபாத்தினிகளாய் வேலை செய்ய வேண்டும், என்றெதிர் பாாக்கின்றனர். 100 பேர் கிராமப் பாடசாலைகளில் உதவிசெய்ய வேண்டும். மூன்று வருஷகாலமாய் இதை சோதித்துப் பார்க்கப் போகின்றனர்.

## பாலும் பாடசாலை மாணவரும்.

பம்பாய் நகரப் பிள்ளைகளில் பால் தேவையானோருக்குப் பால் கொடுக்கும்படி ஒழுங்கு செய்து நகரப் பரிபாலன சபை ரூ 50,000 பிரித்து வைத்திருக்கின்றது. தற்சமயம் புதிதாகச் சேரும் பிள்ளைகளுக்கு மாத்திரம் பால் பருகும் பாக்கிய முண்டு. ஒரு வருஷ சோதனையில் சித்தி காணப்படுமாயின் எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் இது அனுசரிக்கப் படும்.

## அகில இந்திய ஸ்திரீகளின் மகா நாடு.

இம்மகா நாடு ஆறு மாதத்திற் கொரு முறை கூடும். இத்தடவை இது ஜூலை மீ 30 உ யிலிருந்து ஆகஸ்ட் மீ 1உ வரை பரோடாவில் கூடப்போகின்றது. திருமதி ராஜ்குமாரி அம்ரிட்கார் அம்மையார் அக்கிராசனம் வகிப்பார்கள்.

## எவரெஸ்டை எவரும் எதிர்த்துப் போக இயல வில்லை.

ஐந்தாவது தடவை எவரெஸ்டில் ஏறிப் பார்க்க எடுத்த முயற்சி வீணாயிற்று. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இம்முயற்சி ஆரம்பித்தது. 27,300 அடி உயரம் ஏறக்கூடியவரா யிருந்தனர். மற்றவர்கள் ஏறின உயரத்துக்கு மேலே இவர்கள் ஏறவில்லை.

## கிராம வைத்திய ஊழியர்.

பீகார் சர்க்கார் கிராமங்களில் வைத்திய ஊழியஞ் செய்ய வெளியேறும் ஆட்களுக்கு வருஷந் தோறும் பணச் சகாயம் செய்ய ஆலோசித்து தற்போது நான்கு பேரைத் தெரிந்தெடுத்து ஆரம்பிக்கப் போகின்றனர். ஒவ்வொருவருக்கும் வருஷத்துக்கு ரூ 240 மருந்து செலவுக்காகக் கொடுக்கப்படும். வியாதியஸ்தரை வீடுகளில் சந்திக்கப் போனுல் எவ்வளவு பணம் பெற்றுக் கொள்ளலாம் என்பதைப் பற்றியும் பேசி முடிவுக்கு வருவார்கள். ஐந்து வருஷம் இதை அனுசரிக்கப் போகின்றனர். பாதிச் செலவு வைத்தியர் வேலை செய்யும் ஜில்லா போர்டாருடையது.

## குடுக்கை.

A. R. Kareem

சுரை, பூசணி முதலிய பயிர் செடிகளின் காய்களிலிருந்து குடுக்கை எடுக்கலாம். அக்காய்களின் தோடு காய்ந்த பின் கடினமா யிருக்கின்றது. வீட்டு ஜாமான்கள் செய்ய உதவும்.

ஆப்பிரிக்கர் குடுக்கைகளையே பாத்திரங்களாக உபயோகிக்கின்றனர். போகணி, சீசா, கடைகால், பெட்டிகள் முதலியன பலவகையான குடுக்கைகளால் செய்யப் பட்டவை.



இந்தியாவில் குடுக்கைகளில் வீணை முதலிய கீத வாத்தியக் கருவிகள் செய்கின்றனர். குடுக்கைகளை மிதப்புகளாக உபயோகித்து ஆறுகளையும் வெள்ளங்களையும் கடக்கின்றனர். பாத்திரங்களும் செய்கின்றனர்.

சுரைக் குடுக்கையில் தண்ணீர் குடிக்கும் பாத்திரம் செய்கின்றனர். பால் பாத்திரமாகவும் உபயோகிக்கலாம்.

பூசணிக் குடுக்கையில், எண்ணெய் வைக்கவோ, சீனி, அல்லது காப்பிக் கொட்டை அல்லது மாவு வைக்கவோ ஏற்ற பாத்திரங்கள் செய்கின்றனர். பாலும் ஊற்றிவைக்க உதவும். சாயம் பூசி மெழுகு தடவி அழகுக்காகவும் சிலவற்றை உபயோகிக்கலாம்.

---

"எவ்வளவு நன்மை தேவையோ அவ்வளவு முயற்சி தேவை.
அறிவு வேண்டுமானால் அதை அடைய ஆராய்ச்சியும் வேண்டும்". —Ruskin.

"எத்தேசத்தாருக்கும் எம் மதத்தினருக்கும்
மானிட மனச் சாட்சியே தேவ வாக்காம்." —Byron.

"தேசத்திற்கு வரும் நாசத்தில் நாசம்
தொழுகை நாசம்--அதுவே மோசம்" —Emerson.

"மனஸ்தாபப்படுவோன் உத்தம மனிதோன்" —Seneca.

---

"ஜெபம் பண்ணுங்கால் இதயமில்லா பதங்களைவிட பதங்களில்லா இதயமே வாசி"

Bunyan.



## பிள்ளைகள் வரையக் கூடிய சித்திரப் படங்கள்



# அரக்கு மெழுகு.

Padma Paranjoti

கிராமபோன் தட்டுகள் செய்ய உபயோகிக்கும் அரக்கு மெழுகு ஒரு சிறு லட்சப் பூச்சியினு லுண்டாகின்றது.

சமஸ்கிருதத்தில் லட்சம் என்றால் (நூறு ஆயிரம்) மரக் கொப்புகளில் நூறாயிர கணக்காய் கூடி வாழ்கின்றபடியால் அதற்கு லட்சப் பூச்சி யெனப் பெயர் வந்தது.

ஜப்பானிலும், சீனாவிலும், இந்தியாவிலும் இவ்வகைப் பூச்சி யுண்டு. ஆதிகாலந் தொட்டு அதின் பிரயோஜனம் இந்தியருக்குத் தெரியும். அக்பர் மன்னரின் அரண்மனைக் கதவுகள் அரக்கு மெழுகு பூசப்படவேண்டும் என்ற கட்டளை இருந்தது. செத்த பூச்சிகளி லிருந்து வரும் சாயம் பட்டு நூலைச் சாயங் காய்ச்ச உபயோகப் படுத்தப் பட்டது.

இந்த செய்தி 18ம் நூற்றாண்டின் கடைசியில் ஐரோப்பாவுக்குத் தெரியவந்தது.

## லட்சப் பூச்சி

இந்தப் பூச்சி மரக் கொப்புகளில் தொங்கிக்கொண்டு மரத்திலுள்ள ரசத்தைப் பருகிப் பிழைக்கின்றது. அதோடு தன் தேகத்தின் சருமத்தின் வழியால் ஒருவகை சிவப்பு வர்ண பிசின் போன்ற வஸ்துவை வெளி விடுகின்றது. அது ஒரு கூடு போலாகின்றது. கூடிவாழ்கின்ற பூச்சியானபடியால் ஒரே இடத்தில் அநேக கூடுகள் சேர்ந்து இருக்கும். இப் பூச்சியின் நீளம் 1/25 அங்குலம். பெரிய பூச்சி 2/25 அங்குல நீளம்.

கூட்டுப் புழுப் பருவத்தில் மூன்று மாதம் கழித்தபின்பு ஆண்பூச்சி வெளியேறி பெண் பூச்சியோடு வர்க்க விருத்திக்காக ஜோடி சேர்ந்தவுடன் ஜீவனை விடுகின்றது. ஆண் பூச்சி



களைக் காட்டிலும் பெண் பூச்சிகள் ஏராளம். ஆனதுபற்றிக் கூட்டைவிட்டு அவை எளிதில் வெளியேறுகிறதில்லை. எப்போதாவது வெளியேறின பூச்சி ஜோடி சேர்ந்து, கால்களை இழந்து, உருவம் இழந்து பளபளப்பான சிவப்புப் பையைப் போன்ற வடிவ மடைகின்றது. அதுதான் கருப்பை. வா யுண்டு, வெள்ளை முடியும் முளைக்கும்.

பெண் பூச்சி ஜோடி சேர்ந்து ஒரு மாதமான பின் முட்டையிட்டுத் தன் ஜீவனை விடும். பதினைந்து நட்களுக்குப் பின் முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளியாகும்.

## அரக்கு மெழுகு.

பிசின் போன்ற வஸ்துவை நசுக்கித் தூளாக்கி சுடுதண்ணீரில் கழுவி உருக்கி வடி கட்டிக் காய வைக்கவேண்டும். அப்பொழுது நமக்கு நல்ல அரக்கு மெழுகு கிடைக்கும். செந்நிற மெழுகு முண்டு. கருநிற மெழுகுமுண்டு. குளோரின் வாயுவை உபயோகித்து வெண்ணிற மெழுகு மெடுக்கலாம். இதைப் பல



வர்ணங்கொடுத் துபயோகிக்கலாம். முத்திரை மெழுகு இதிலிருந்துதான் செய்யப்படுகின்றது. கிராமபோன் தட்டுகளும் செய்ய இது உபயோகப்படுகின்றது. வார்னிஷ், சிமெண்ட் முதலியன செய்ய இது தேவை. மரத்தினால் செய்யப்படும் பம்பரம், அப்பளக்கட்டை முதலிய பொருட்களுக்குப் பல வர்ணம் ஏற்றும்படி இது உபயோகப் படுகின்றது.




1. சிறு பூச்சி. 2. பெண் பூச்சி. 3. ஆண் பூச்சி.

இவ்வித மரவேலை ஜப்பான், சீனா, பெனாரீஸ், ஜெய்ப்பூர், சாணாப்பட்னா முதலிய இடங்களில் நடக்கின்றது. மதுரை வண்டியூர் தெப்பக்குளத்துக் கப்பால் இவ்வேலை நடக்கின்றது.

இந்தியாவில் ரூ. 3,00,00,000 பெறுமான அரக்கு மெழுகு எடுக்கப்படுகின்றது. ஓர் அந்தர் மெழுகு ரூ. 100 அல்லது ரூ. 150 வீதம் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தார் வாங்கிக்கொள்ளுகின்றனர். பாதி வியாபாரம் அங்குதான் நடக்கின்றது.

இதை ஒரு குடிசைக் கைத்தொழிலாக வைத்து நடத்தக் கூடுமானால் அதிக லாபம் கிடைக்கும்.

மைசூர் மாகாணத்திலுள்ள கிராமத்தார் இக் கைத்தொழில் செய்யும்படி சர்க்கார் உதவிசெய்கின்றனர். அங்கு சித்தி கிடைக்குமானால் இது எங்கும் பரவும் என்பதற்கு ஐயமில்லை.

---

"பிறருக்கு நன்மை செய்பவன் தனக்கே நன்மை நாடுகின்றான். கிடைக்கப்போகும் பலனில் மாத்திரமன்று. செய்யும் செய்கையிலேயே பலனைக் காணலாம். நன்மை செய்கிறோம் என்ற எண்ணமும் உணர்வுமே பெரும் பலனாகும்." Seneca.

தமிழ்நாடு

# மஞ்ச்ஹாசன் பிரபு

## Merci Kanakam

மஞ்ச்ஹாசன் பிரபு ஜெர்மனி தேசப்போர் வீரர். ருஷியாவிலும் துருக்கியிலும் உழைத்தார். 1876ஆம் வேலை விட்டு இளைப்பாறினபோது ஜெர்மனி தேசத்திலிருந்தனர். தான் உழைத்த இடங்களில் தான் பட்ட கஷ்டங்களைப் பற்றி அநேக கட்டுக் கதைகள் சொல்லுவது வழக்கம். அவர் நன்ருய் பிறருக்கு இன்பம் ஊட்டத் தக்கதாய் கதை சொல்லக் கூடியவரான படியால் அநேகர் அவரிடம் கதை கேட்கப் பிரியப்படுவார்கள்.



அநேக ஆண்டுகளுக்குப் பின்னர் அவருடைய சிநேகிதர் ரூடால்ப் எரிக்ராஸ்பி என்பவர் தனக்குப் பணக் கஷ்டம் வந்த காலத்தில் இவருடைய கதைகளை ஒரு புஸ்தகத்தில் எழுதி விற்பனை செய்தார். இது நன்ருய் விலையானது. அநேக பதிப்புகள் அச்சடிக்க வேண்டியதாயிற்று. அநேக பாஷைகளிலுங்கூட இப்புஸ்தகம் வெளியாயிற்று. வேடிக்கைக் கதைகளாயிருந்த படியால் அநேகர் அப்புஸ்தகத்தை வாங்கினர்.

அதிலொரு கதை :

"கோவில் கோபுரக் கோல்."

"மிகவும் குளிரான ஒருநாளில் ருஷியாவில் என் குதிரை மேலேறி சவாரி போனேன். தரையெல்லாம் உறைபனியால் மூடப் பட்டிருந்தது. பாதை கரடு முரடாயிராதபடி மூடு பனி சமப் படுத்திற்று.

நாளெல்லாம் தெரியாத பாதையில் சென்று கொண்டிருந்தேன். இரவு வந்தது. ஆகாரம் வாங்கவோ இராத் தங்கவோ ஒரு கிராமங்கூட தெரிய வில்லை. பிரயாணம் பண்ணவும் சக்தி யில்லை. களைத்தும் போனன். ஆகையால் அன்றிரவு மூடு பனியின்மேல் படுத்துறங்க தீர்மானித்து என் குதிரையை மூடுபனிக்கு வெளியே மேலே நீட்டிக் கொண்டிருந்த ஒரு கோவில் கட்டி வைத்தேன். கம்பளியைப் போட்டு நிறைய மூடிக்கொண்டு தூங்கிவிட்டேன்.

அதிகாலையில் விழித்துப் பார்க்கையில் ஒரு கோவில் பக்கமாய் நான் படுத்திருக்கிறதாகக் கண்டு அதிசயித்தேன். என் குதிரை கனைத்தது. அச் சத்தம் மேலே இருந்து வந்தபடியால் எட்டிப் பார்த்தேன். அங்கே என் குதிரை கோவில் கோபுரக் கோலில் தொங்கக் கண்டு காரியத்தை விளங்கிக் கொண்டேன். இரவில் மூடியிருந்த பனிக்கட்டியெல்லாம் இளகி விட்டது என்றும் குதிரையைக் கட்டி வைத்த கோல் கோவிலின் கோபுர நுனி என்றும் அதினுல் குதிரை தொங்கவேண்டியதாயிற் றென்றும் கண்டு குதிரையை எவ்வாறு அவிழ்த்து விடுவது என்று தெரியாமல் திகைத்தேன்.

திடீரென ஒரு சிறந்த யோசனை வந்தது. என் துப்பாக்கியை எடுத்து குதிரை கட்டியிருக்கும் கயிற்றைப் பார்த்து சுட்டேன். தோல் கயிறு தெரித்தது. குதிரை குதித்தது. நான் ஏறி சவாரி செய்தேன்."

பாரில் புகழ்பெற்ற பௌதிக சாஸ்திரியார்

சர் சந்திர சேகர வெங்கட்டராமன், Kt., D.Sc, F.R.S., N.L.

பங்களூர்.



**SIR CHANDRASEKHARA VENKATA RAMAN, Kt., D.Sc., F.R.S., N.L.**

*Indian Institute of Science,*

*BANGALORE.*

Registered No. M. 3804.

உல்சூர் ஏரி, பங்களூர்.



ULSOOR LAKE, BANGALORE.

Printed by S. T. Rhenius at the N.M.S. Press, 48 B, Peters Road, Royapettah an[d]
Published by Rev. T. A. Fenn, College Church,
12, Venkata Maistry Street, George Town, Madras.

# வித்யாதனம்

## TAMIL TREASURE CHEST

[தொ]குதி 2 | செப்டெம்பர் 1938௵ | பகுதி 6

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7-OCT 1938
MADRAS



பிரம்பு வேலை.

## பொருளடக்கம்.


| | | பக்கம். | | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்பு | 1 | 7. | வர்த்தமானம் | 13 |
| 2. | நளன் தமயந்தி நாடகம் | 2 | 8. | நோயுற்றோருக் குதவி புரிதல் | 17 |
| 3. | பொற் களம் | 7 | 9. | செவிப் புலன் | 19 |
| 4. | சிரங்குக் கிருமிப் பூச்சி | 9 | 10. | விகடம் | 22 |
| 5. | வாழ்வில் வெற்றிதரும் மணிகள் | 11 | 11. | கின்டர்க் கார்ட்டன் கதை | 24 |
| 6. | அன்பு | 12 | | பிள்ளைகள் கைவேலை | |


## பத்திரிகையின் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| பிரதி ஒன்றுக்கு | ... | அணா 1 |
| வருஷ சந்தா | ... | ரூ. 1—0—0 |
| வெளி நாடுகளுக்கு | .. | ரூ. 1—8—0 |


REV. T. A. FENN,
Editor, Vidyadhanam,
12, Venkata Maistry Street,
George Town,
MADRAS.



# வித்யாதனம்

# VIDYADHANAM

## TAMIL TREASURE CHEST

தொகுதி 2 | செப்டெம்பர்மீ 1938ஹு | பகுதி 6



OFFICE OF THE REGISTRAR OF ...
7-OCT 1938
MADRAS


## பத்திராதிபர் குறிப்பு.

இப் பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பித்து அநேகர் தாங்கள் வாங்கும் பத்திரிகைகளின் தொகையை அதிகப்படுத்தியிருக்கிறதற்காக நம் நன்றி கூறுகின்றோம். மற்ற நேயரும் இவ்வாறு முன்வந்து இப் பத்திரிகையை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். புதிய நேயர் சம்பாதிப்பதில் பழைய நேயர் உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

### செப்டெம்பர் மீ

'செப்டெம்' என்றால் ஏழு என்று அர்த்தம். இது ஒரு பூரண மாதம். சகலமும் சம்பூரணமாய் சம்பாதிக்கலாம். கடவுள் பூரண ஆசீர் அளிக்கக் காத்துக் கொண்டிருக்கிறார். ஆயத்தமா?

மார்ச்சுமீ முதல் மாதம் என்று சொல்லியிருக்கின்றோம். அதிலிருந்து ஏழாவது மாதத்திற்கு செப்டெம்பர் எனும் பெயர் வந்தது. இது பலவகையில் விசேஷித்த மாதம்.

ஏழாவது மாதம் ஓய்வின் மாதம். ஆகையால் இந்த மாதத்தில் சிலநாட்கள் விடுமுறை நாட்களாக வரும்.

இந்த மாதம் பரிசுத்த மாதம். பரிசுத்த மிகாவேலின் திருவிழாவும் இம் மாதத்தில் கொண்டாடப் படும். நாமும் நம்மை பரிசுத்த ஜீவியம் செய்ய ஒப்புக்கொடுக்க வேண்டும்.

நமது கணக்கின்படி இது ஒன்பதாவது மாதம். நவகனிகள் நம்மிடத்தில் காணப் படுகின்றனவா?

### சந்தா விஷயம்

V. P. P. யின் மூலமாய் அனுப்பச் சொல்லுகிறதை விட பத்திரிகை ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் மணி ஆர்டர் (Money Order) செய்வது நல்லது. இரு பக்கத்தாருக்கும் செலவு சுருக்கம். ஒரு பத்திரிகை V. P. P. செய்தால் 5அணா 3பை செலவாகும். மணி ஆர்டர் செய்தால் 2அணா மாத்திரம் செலவு. இதைக் கவனித்துப் பத்திரிகை வேண்டுவோர் ஏற்கனவே மணி ஆர்டர் மூலமாய்ப் பணம் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

T. A. Fenn.

# நளன் தமயந்தி நாடகம்

("நளன் சரிதை" என்னும் புஸ்தகத்தைத் தழுவி எழுதிய நளன் நாடகம்)

— கடவுள் துதி —

மத்யமாவதி — ஆதி தாளம்

பல்லவி.

நாதனை நமஸ்கரிப்போம்—நளன்
நாடகம் நடத்துமுன் —நாதனை

சரணம்.

போதனை யடையும் மாக்களை
சாதனை யுடையோ ராக்கவும்
சோதனையால் வரும் வேதனை நீக்கவும்
வேதனை வேண்டி யிவ் வேலையிற் கூடியாம்—நாதனை.

1

பொய் சூதப்புறம் போக்குவோம்—பூவில்
பொல்லா ரோடவர் — பொய்
மெய்யாய் அறம் வேர் கல்லும்
செய்யோம் எத்தீதும் என்றும்
உய் வழி எவ்வழி? செல்வழி பல்வழி
பொய் வழி அவ்வழி மெய்வழி இவ்வழி —நாதனை.

## I காட்சி.

## கொலுவிருக்கை

(மந்திரி பிரதானிகள் வீற்றிருக்க நளன் பாடி வருதல்)

— வெண்பா —

"காமர் கயல் புரளக் காவி முகை நெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூ மடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு."

சங்கராபரணம். — ஆதி தாளம்.

பல்லவி.

மா மனு நூல் வாழ—மாநிலம்
நா மனுதின மாள்வோம் —மா



அநுபல்லவி.

தாமரைத் தடாகம் பூக்கும் தாமரையிற் றாமரையாம்
பூமடந்தை போலிலங்க பூவுலகைப் பாதுகாப்போம்—மா

சரணங்கள்.

1

வெஞ்சிலையே கோடுவது - மென்குழலே
துஞ்சி மிக சோருவது
கஞ்சமே கலங்குவது காரியல்தர் கண்களென்றும்
அஞ்சாது மிலங்குவன அஞ்ஞானம் விட்டிங்குமங்கும்—மா

2

திக்கெங்கும் போய்த் தேனையுண்டு—திரும்பி யிப்
பக்கம் வந்தடையுங் கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலும் தூங்கிருள் வெய்யோர்க் கொதுங்கிப்
புக்கிருந்தாலன்ன பொழில் மிக்கிருக்கும் நாட்டை நன்றாய்—மா

நளன்: மந்திரிகாள்! நமது நாட்டில் நடைபெற வேண்டிய காரியங்கள் யாவும் நன்றே நடைபெற்றுள்ளனவா?

மந்திரி 1. குறை எதுங் கண்டிலேன் கொற்றவா!

நளன்: ஒரு நாட்டின் நாகரிகம் பெண்களின் நிலைமையைச் சார்ந்ததன்றோ. நம் நகரின் பெண்கள் எப்படிப் பட்டவர்கள்?

மந்திரி II: அரசே! நம் நகரின் பெண்கள் மிக்க அந்தம் வாய்ந்தவர்கள். நித்தம் குளித்து சுத்தம் வாய்ந்தவர்கள். அகில் கமழும் கூந்தலை உடையவர்கள். சந்தனம் தோய்ந்த சரீரத்தோடு விளங்குபவர்கள். அவர்கள் படித்தற் கரிய நூல்களையும் படித்துத்தெளிய வல்லவர்கள். அவர்கள் படித்ததும் கடித்ததும் கற்பு ஒன்றே. கரவு என்பதை அவர்கள் கற்றும் கேட்டும் அறியார்கள்.

நளன்: பிரதானிகாள்! நம் நாட்டின் சமாதானத்தைப் பற்றி நமக்குக் கவலையுண்டு. குடி படைகள் சந்தோஷமா யிருக்கின்றனர்.

பிரதானி I: அரசே! நும்தம் மாட்சியுறு ஆட்சியில் அறம் வளருகின்றது. மறம் தொலைகின்றது. செம்மை தழைக்கின்றது. கொடுமை குன்றுகின்றது. குடிகள் மாட்டு பரஸ்பர சிநேகமும் நிலை வரமான சமாதானமும் நீடிய சந்தோஷமும் நிலைபெற் றோங்குகின்றன.

நளன்: ஆ! ஆ!!

பிரதானி II: பின்னும் அரசே! பசுவும் புலியும் ஒரு துறையில் நீர் அருந்தவும் பருந்தும் கிளியும் ஒரு கூட்டில் வாழவும் தக்கதான ஆட்சியும் மாட்சியுடைத்து இந்நாடு.

நளன்: சந்தோஷம்! சந்தோஷம்!!

என்றும் இவ்வாறே இருப்பதாக!!!

மந்திரி பிரதானிகள்; வாழ்க! வாழ்க!!! நீடூழி வாழ்க!!!

(திரை விழுகின்றது.)

## II காட்சி

### சோலை

(பணிப் பெண்கள் ஆடிப் பாடி வருகின்றனர்)



(இராகம்—"ஸ்ரீசிவ ஷன்முக வேலனே")

மாக மீது அருள மாரி பெய்
மேகங் கண்டு கண்டு வந்து மெய்
யாகவோ ரன்னம் வாழ் சூழல்வாய்
நாகமாயும் நாக மாயுமே.



ஆதபன் அலருங் காலையில்
மாதர் வான்முகம் இச் சோலையில்
சீத வாவியின் செம் பங்கயப்
போதலர்ந்திடும் போதலர்ந்திடும்.

இன்னலுற்றவர்க் கிரங்கி மெய்
நன்னர் வாசகம் நவிற்றி நொய்
யுன்னருங் குணத்தோ டேவல் செய்
யந்தலா ரெலா மகலார்களே

மருமலி பூம்பொழில் மைந்தரின்
திரு மலி மங்கையர் சிறுவரின்
ஒரு தனி நளன் பணி செய்வோரின்
கரு மஞ்சாலும் கரு மஞ்சாலுமே

(தாமரைத் தடாகத்தின் பக்கலில் நளன் உட்காருகின்றனன்)

நளன்: எவற் பெண்காள்! அவ்வன்னத்தை அடைய ஆவலுட னிருக்கின்றேன். அதனைப் பிடியுங்கள்.

(பெண்கள் அரசனைப் பணிந்து)

பெண்கள்: அப்படியே ஆகட்டும், அரசே!
(அனனத்தை வளைந்து பிடித்துத் தருகின்றனர்)

நளன்: அஞ்சல் மட அன்னமே! உன்னை உயிர் வாங்கும் பொருட்டுப் பிடித்தேனல்லேன்; உன் அரிய அழகினை அருகில் வைத்துக் கண்டு களிப்படைதற்கே உன்னைப் பற்றினேன். உன்றன் அணி நடையோ, மாதர் தம் மட நடையோ, எது சிறந்தது என்பதைக் கண் கூடாகக் கண்டறிய எண்ணினேனே யன்றி காரணம் வேறன்று.

அன்னம்: என்றும் விரோதிகளை வென்றுயர்ந்த தோள்களையுடைய மன்னனே! உம் இசை நிறைந்த தோளுக்கு இசைந்தவள் ஒரு வசையில்லா தமயந்தி என்னும் வனிதா இரத்தினமே யாவாள்.

நளன்: அன்னமே! நீ சொன்ன மயில் யாருடைய மகள்? என்ன நிறம்? என்ன வயது? என்ன குணம்?

அன்னம்: தூணை வென்ற தோள்களையுடைய மன்னனே! அவள் நில நலனும் நீர் நலனும் வாய்ந்து விளங்கும் விதர்ப்ப நாட்டின் கொடை நலம் சிறந்த வீமராஜன் மகள். அவள் பொன்னிறத்தாள், செந்நிறத்தாள். எக்குணமும் நன்றே இனி துறையும் இளவயது மங்கை. அம்மாது தன் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நாற்குணங்களையும் நாற்படையாகவும், மெய்,

வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம் பொறிகளையும் நல்லமைச்சாகவும்
கண்ணிணைகளை வேற்படையாகவும் வாட் படையாகவுங் கொண்டு தன்
வதன மதிக்குடையின் கீழிருந்து பெண்ணரசு புரிவள். அவளது அன்ன
யுடலைத் தாங்க இயலாத அரையின் அவஸ்தையை சுட்டி அவள் காற்
சிலம்புகள் கதறி அழும். அவளது நெற்றி நிலவின் துண்டமென விளங்
கும். அவள் தேனும் தீந்தமிழும் போலு மினிய சொற்களைப் பேசுவாள்.

நளன்: அன்னமே! நீ சொன்ன அன்னத்தை யுன்னவே என்னுவி சோருகின்றது.
அவ்வன்னத்தோடு உனக்குற்ற சம்பந்தம் யாது?

அன்னம்: மன்னவா! அம்மயிலின் மென்னடையைக் கற்க விரும்பிய யாங்கள் அம்
மயிலோடு சேர்ந்த மயில்கள் போல அவள் மனையிடத்துப் பொருந்தி வாழ்
கின்றோம். அவளை உன்னிய அளவில் இத்தாமரைத் தடாகத்தையும்
விட்டேகுவோம்.

நளன்: அன்னையை ஒத்து விளங்கும் அன்னமே! நீ சொன்ன அன்னமே
அருந்தும் அன்னத்தைப்போல் எனக்கு ஆருயிருக் கருமையானது. என் மன
நிலை மாறிற்றே! என் மானம் மடிந்ததே!! என் நாணம் நகன்றதே!!! உன்
வாயுடையதே என் வாழ்வு. அல்ல வென்றால் தாழ்வு..

அன்னம்: கொஞ்சமும் அஞ்சாதார் நெஞ்சமும் அஞ்ச வெஞ்சமர் புரி தோளாய்!
வீமன் திருமடந்தை யினது தோளை உம் வாம நெடும் புயத்தே வை
குவிப்பேன்- எம் அன்னையிடம் சென்று உம் அன்னைபோல் நின்று நீர்
உன்னியதை முடிப்பேன். போய் வருகிறேன், மன்னா!

(அன்னம் அகல, பணிசெய்வோர் ஏக, நளன் தனியாயிருந்து பாடுகின்றனன்)

பல்லவி.

அன்னம் என்னிடம் சொன்ன மயிலே!
உன்னவே மனம் பின்ன மாகுதே!

அ. பல்லவி.

மன்னர்மகளே! உன் சின்னம் ஒன்றின்றியே
முன்னர் நீ பன்னல்முன் துன்னல நீதியே!—அன்

சரணம்.

வாரிச மன்ன காரிகை யுன்னை
பாரியை யாக்கும் வீரிய மென்னை?
பாரி துன்னை யானே நேறிற் றெரியாது
யாரிவ ளென்றே விசாரித் தறியாது—அன்

(இன்னும் வரும்)



# போற் களம்

NALINI KANAKAM,

சுந்தருக்கு இரவெல்லாம் தூக்கமில்லை. விடியுமுன் ஒரு காரியம் செய்யத் தீர்மா
னித்து விட்டனன். காலை ஆகாரம் அருந்துங்கால் தன் அன்னையிடம் அவன் சொன்னதா
வது:—"காத்திருப்பதில் பயனில்லை. நிலத்துக்கு உரம் வாங்கப் பணம் வேண்டும்- ஆகையால்
தலையடி விதை நெல்லைத் தலையாரியிடம் விற்று வரப்போகின்றேன்" "அதற்கு அன்னை
அவனை நோக்கி" எல்லா நெல்லையும் விற்றுப் போடாதே. விதை விருத்தி முயற்சிக்கு வேண்டிய
வற்றை வைத்துக் கொள்" என்றனள். "நல்ல மேனி காணும்வர்க்கம் கொண்டுவரத் தந்தை
மிக்கப் பிரயாசம் எடுத்தும் அதின் பலனை அன்னியன் யனுபவிக்கக் கொடுத்து வைத்திருக்கின்
றோம் என்று எண்ணும்போது எனக்கு மனம் வருந்துகின்றது" என்று மகன் கூறினன்.

"அதற்கென்ன? தலையாரியும் உன் தந்தையும் உத்தம சிநேகிதரல்லவா? விற்கின்
றது உண்மையானால் அவருக்கு விற்பதே உத்தமம்" என்று அன்னை கூற, அதற்கு மகன்
சொன்னதாவது.

"அது உத்தமம். எனினும் பலனடையும் சமயத்தில் அவ்விதைகளை விற்பதுதான்
விசனம். பதின் மடங்கு பலன் தரும்படி அந்த வர்க்கத்தை விருத்தி செய்திருக்கின்றோம்.
எந்த சீதோஷ்ண நிலையிலும் விளையத் தக்கதாகவும் அவ்விதைகளுக்கு சக்தி யுண்டு. அவ்விதை
களை நமக்கே வைத்துக் கொள்ளக் கூடுமானால் மிகுந்த லாபமுண்டு"

அவன் பிறப்பதற்கு முன்னிருந்தே சுந்தரின் தந்தை இவ்விதையை விருத்தி செய்து
விவசாயத் தொழிலின் தரித்திர திசையை மாற்ற முயற்சி செய்து வந்தனர். ஒரு மணி ஈயும்
கதிர் மூன்று மணிகளைக் கொடுக்கும்படி பிரயாசப் பட்டு சித்தி பெற்றால் ஒரு குடும்பம் பிழைக்
கிற இடத்தில் மூன்று குடும்பம் பிழைக்குமே என்று எண்ணித் தன் அயலகத்தார் வாழ்வைக்
கருதினவராக இதை ஆரம்பித்தனர். சுந்தரும் தன் தந்தை செய்து வந்த வயல் வேலையில்
பிரியங் காட்டி வந்தனன்.

இதற்காக இவன் குடும்பத்தார் வயலோரம் ஒரு சிறு குடிசையில் குடியிருக்க வேண்
டிய திருந்தது. கள்ளர் பயம் இருந்த போதிலும் விதை நெல்லை புதை பொருள்போல் காத்து
வந்தனர்.

வர்க்க விருத்திக்கேற்ற மணியான நெல்லை விதை நெல்லுக்காக வைத்துக் கொண்டு
மற்றதை மற்றவருக்கு விற்று விடுவார்கள். விதை நெல்லை விருத்தி செய்யும் வேலைக்குப் பணம்
தேவையா யிருந்தது. விற்பதானால் தலையடி நெல்லைத் தலையாரி தனக்கு விலைக்குக் கேட்டிருந்
தனர். நல்ல விலை கொடுப்பதாகவும் கூறியிருந்தனர். ஆகையால் தலையாரிக்குத் தன் விதை
நெல்லை விற்று சுந்தர் தன் வேலையை நடத்தக் கூடியவனானன்.

தலையாரி வயலில் இவ்விதை நெல் நன்றாய் வளர்ந்து பலன்தந்தது. தன் அதிகாரியின்
வசம் வயலை விட்டுவிட்டுத் தலையாரி வெளியூர் போயிருந்தனர். இச்சமயம் நன்றாய் விளையும்
வயலுக்கு தேசாதிபதி ரூ500 வெகுமதி கொடுப்பதாய் செய்தி கிடைத்தது. சுந்தருக்குப் பணம்
தேவையாயிருந்தது. அவன் அப்போது கடனுக்குள் ளிருந்தனன். இந்த வெகுமதிப் பணம்
தனக்குக் கிடைத்தால் எவ்வளவோ உதவியாயிருக்கும் என்று எண்ணினன். ஆகையால் அவன்
ஓடி தேசாதிபதிக்குத் தன் வயலைப் பரிசோதனைக்குப் பதிவு செய்யும்படி தந்தி கொடுத்தனன்.
அங்கு இதற்கு முன்பே தலையாரியின் அதிகாரி அவர் அநுமதியின்றி அவர் வயலைப் பதிவு
செய்ததாகக் கேள்விப் பட்டு விசன முற்றனன். தலையாரியின் நிலமும் விதையும் சிறந்தவை
யானபடியால் வெகுமதி பெறும் என்பதற் கையமில்லை. இச் செய்தி எங்கும் பரவிற்று.



தூராலோசனைக் கர்த்தாக்களனைவர் எழும்பினர். தீயை வைத்து எதிரி வயலை எரித்து விடும்படி ஏவினர். இது சுந்தருக்குப் பெரிய சோதனை. காற்றும் தனக்கு அனுகூலமாயிருந்தது போல் காணப் பட்டது. தலையாரியும் ஊரில் இல்லை அவர் அதிகாரியும் ஊரில் இல்லை.

இப்படி ஏதாயினும் நடந்தால் நலமாயிருக்கும் என்று எண்ணிப் படுத்தவன் தூங்கி விட்டனன்.

அதிகாரியின் மனைவி "ஐயையோ தீ, தீ, வயல் தீப்பிடித் தெரிகின்றது" என்று கூவின சத்தத்தில் விழித்து எழுந்தான் சுந்தர். சுந்தரின் அன்னையும் அவனுக் கிதை அறிவித்த னள். அப்போது சுந்தருக்குச் சோதனை பலமாய் வந்தது. ஆயினும் பொற் பிரமாணத்துக்குக் கட்டுப்பட்டவனாக மணி யடித்து ஊராரைத் திரட்டி, தண்ணீர் மண் முதலியவற்றைக் கொண்டு வந்து நெருப்பை அணைக்க உதவி செய்தனன். சேதம் அதிக மில்லை.

அவன் வீட்டிற்குப் போகிறதற்குள்ளாக ஒரு தந்தி கிடைத்தது. அதில் தலையாரி தன் அதிகாரி உத்திரவில்லாமல் வயலைப் பதிவு செய்ததாகவும், தான் தேசாதிபதியை நேரில் பார்த்துத் தன் வயலை சுந்தர் பேருக்குப் பதிவு செய்ததாகவும் வெகுமதி கிடைத்தால் அது சுந்தருக் குரியது என்றும் தந்தி கொடுத்திருந்தனர்.

இதற்குள்ளாக மறு தந்தி ஒன்று வந்தது. அதில் தேசாதிபதி "விதை நெல் விருத்தி செய்வதில் நீ எடுத்துக் கொண்ட பிரயாசையைப் பற்றி கேள்விப் பட்டேன். இது சம்பந்த மான, ராஜதானி விதைநெல் அபிவிருத்தி வயலில் காலியா யிருக்கும் மேலதிகாரி வேலையை ஒப்புக் கொள்ள சம்மதிக்கிறாயா?" என்று கேட்டிருந்தது.



# சிரங்குக் கிருமிப் பூச்சி

சொறி சிரங்கு என்னப்படும் தோல் வியாதி, ஒரு சின்னக் கிருமிப் பூச்சியினால் உண்டாகிறது.

இக்கிருமிப் பூச்சி தோற்றத்தில் முட்டை வடிவமும் நிறத்தில் கபில வர்ணமு முடையது. ஆமையைப் போல் பார்வைக்குக் காணப்படும், சுற்றிலும் ரோமங்க ளுண்டு. தலை யில் பலமுள்ள பற்களுண்டு.




சிரங்குக் கிருமிப் பூச்சி

இப் பூச்சிகளில் பெண் பூச்சியானது ஆண் பூச்சியைவிட பெரிது. ஒரு சாதாரண பூதக் கண்ணாடியின் மூலமாகப் பெண் பூச்சியைக் காணலாம். ஆண் பூச்சி சொறி சிரங்கின் அடியில் ஒளித்திருக்கும். சில வேளைகளில் வெளியே நமது சர்மத்தின் மேல் வந்து உலாவி பெண்ப் பூச்சியுடன் சேர்ந்து அலையும்.

முட்டைகளிடக்கூடிய பெண் பூச்சியானது தனக்கு மெதுவான, மறைவான, குளிர்ச்சியான, ஓர் இடம் தேடி வரும்; அநேகமாய் விரல்களின் இடையில், முட்டுகளின் மடிப்புகளில், மணிக் கட்டியின் உள் புறத்தில் வசிக்கப் பிரியப்படும் ஒரு சின்னப் பிள்ளை தேகத்தின் எப் பாகத்திலும் வசிக்கப் பிரியப்படும். தனக்கு ஒரு இருப்பிடத்தைக் கண்டு பிடித்த பின், தோலை துளைத்து மலைக் குகை மாதிரி செய்து அவ் வில்லத்தில் முட்டைகளை இடுகிறது. இந்த மாதிரி மலைக் குகைகள் தோலுக் கடியில் வரிசை வரிசையாக செய்து கொள்ளும். நமது கண்ணுக்கு மங்கின புள்ளிகளாக அல்லது தோலை சிறிது கீறின மாதிரி தோன்றும்.

இப் பூச்சிக்கு தான் செய்த குகைகளே அதின் கல்லறை. அதைவிட்டு அது வெளியே வருவதில்லை. சில மாதங்கள் அது அவ்விடத்தில் ஒரு நாளைக்கு ஒரு அங்குலத்தில் பத்தில் ஒரு பாகம் மாத்திரம் துளைக்கக்கூடியதாக விருக்கிறது. இம்மாதிரி தோலுக்குள் வேலை செய்வது இரவில்தான். தான் உட்கார்ந்திருக்கும் ஆள் தூங்கும்போதும், நேரம் குளிர்ந்து அமைதலா யிருக்கும் போதும் இப் பூச்சி தன் வேலையை சுறுசுறுப்புடன் நடத்தும் ஆனால் குழந்தைகளுக்கோ இச்சமயம் நோவு தாங்க வியலாது.

ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு முட்டைகள் தான் இடும். ஒரு சமயத்தில் இப்படி துளைக்கப்பட்ட தோலுக் கடியில் 21 முட்டைகள் கண்டு பிடித்தார்களாம்.

மூன்று நாளிலிருந்து ஆறு நாளைக்குள் முட்டைகள் பொரித்து ஆறு கால்களுடைய புழுக்கள வெளிப்படுகின்றன. இப் புழுக்களின் ஜீவிய சரித்திர விஷயமாய் சாஸ்திரிகள் பல அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர். சில சாஸ்திரிகள் இப்புழுக்கள் வெளி வந்தவுடன் நமது சரீரத்தின்மேல் உலாவி தங்களுக்குப் புது இல்லம் தேடிக் கொள்ளுகின்றன வென்றும், சிலர் இப்

புழுக்கள் தங்களின் பழைய இருப்பிடத்தின் அடியிலே புது குகைகளை துளைத்துக் கொண்டே போகின்றன வென்றும் அபிப்பிராயம் கொள்ளுகின்றனர். இப்புழுக்கள் இரண்டு நாட் கழித்ததும் கால்கள் மாறுபாடடைந்து நாலு கால்கள் மாத்திரம் இருக்கும். பின்னும் சில நாட்களில் பல மாறுதல்களடைந்து ஆணும் பெண்ணுமாக உரு மாறி பதினறு அல்லது பதினைன்கு நாட்களுள் சரியான சிரங்குப் பூச்சியாக ஆகிவிடும்.

இப்புது ஜீவன்கள் சந்தோஷமாக நமது சரீரமாகிய அவையவங்களின் தோட்டத்தில் உலாவிப் பக்குவ மடைகின்றன. பின்பு மறுபடியும் அவைகளின் ஜீவியம் பழையபடி ஆரம்பிக்கும். இரவில் பூச்சிகள் தங்கள் வேலையைச் செய்யும்போது, குழந்தைகளுக்கு சகிக்கமுடியாத சொறி உண்டாகி, சொறிந்தவுடன், பூச்சிகளின் குகைகள் திறப்புண்டு, மேலே சலம் உண்டாகிறது.

பிள்ளைகளுக்கு சொறி சிரங்கு உண்டாயிருந்தால் கெந்தகக் களிம்பு அல்லது மெர்க்கூரி களிம்பு, இவைகளைக் கொண்டு அந்த இடத்தை நன்ருகத் தேய்க்கவேண்டும். அப்படி தேய்க்கும்போது, பூச்சிகள், முட்டைகள், புழுக்கள் இவை யாவும் தங்கள் இருப்பிடத்திலேயே மாண்டுப் போகக்கூடியன. நாம் முதலாவது வெந்நீரில் சோப்பு முதலியவை உபயோகித்து சுத்தமாய் கழுவி, பின்பு முரட்டு துவாலையால் தேகத்தைத் துடைத்து அந்த இடத்தையும் நன்ருகத் துடைத்து, சொறி சிரங்கின் மேல்படையை எடுத்துவிட வேண்டும். இப்படி செய்யும் போது, பூச்சிகளின் இருப்பிடத்தை வெளியாக்குகிறோம். பின்பு களிம்பை அதின் மேல் தேய்த்தால் பிரயோஜனம். இரவிலும் ஒரு தடவை களிம்பு உபயோகித்து, தூங்கி எழுந்ததும் காலையிலும் களம்பு தடவவேண்டும். இப்படி மூன்று நாள் செய்வது நல்லது. இந்த நாட்களில் பிள்ளை தினந்தோறும் ஸ்நானம் செய்து உடுப்பு மாற்ற வேண்டும். அழுக்கு உடுப்பை கொதிக்கும் ஜலத்தில் அலசி, சுத்தம் செய்வது நல்லது. மூன்று நாளில் பூச்சிகள் செத்துப் போகக் கூடியது, சில வேளை புழுக்கள் வெளியே நமது தேகத்தில் உலாவினல் புது சிரங்கு வரக் கூடியது. ஆகையால் உடுப்பு, படுக்கை இவைகளையும் சுத்தம செய்து, மருந்து கலந்த கொதி ஜலத்தில் அலசி, உடுப்பை காங்கையான இரும்பு பெட்டியினல் தேய்ந்து மடிப்பது நல்லது.

சொறி சிரங்கு ஒரு தொத்துவியாதி. இவ்வியாதியுள்ள பிள்ளை தனியே பிரிந்திருப்பது வெகு மேன்மை. பிள்ளையின் உடுப்பு, படுக்கை, புஸ்தகம், கோட்டு, இவைகளின் மூலமாக அடுத்த பிள்ளைக்கு வரக்கூடியது. நமது வீடுகளிலுள்ள நாய், பூனை, மாடு, ஆடு, குதிரை, கழுதை, முதலிய மிருகங்களுக்கும், சிங்கம், ஒட்டகம் முதலிய மிருகங்களுக்கும் சொறி சிரங்கு பிடித்து, அதின் மூலமாக நமக்கும் பரவும்.

அரிஸ்டாட்டில் என்னும் சாஸ்திரியார் சிரங்கு ஒரு பூச்சியினல் உண்டாகிறதென்று கிறிஸ்து பிறப்புக்கு முன்னதாகவே கண்டுபிடித்திருந்தும், தற்சமயம் மறக்கப்பட்டுப்போய் பன்னிரண்டாம் நூற்றாண்டில் சாஸ்திரிகள் மறுபடியும் மேற் சொன்னவைகளையே புதிதாக கண்டுபிடிக்கின்ருர்கள்.

———:o:———

"பெரியார் என்பதற்கு முதல் அறிகுறி தாழ்மை; பெரியார் தம் காரியத்தில் கண்ணுயிருப்பார். அக் காரியத்தை தாம் அறிவார் என்பதையும் அறிவார். சரியான அபிப்பிராயம் உடையார். அதையும் அவர் அறிவார். தம்மையே பெரிதாகக் கருதார். அதன் பலனுக அயலானிடம் தெய்வீகத் தன்மையைக் காண்பார்".

Ruskin.



ஆவணக் காப்பக

# "வாழ்வில் வெற்றிதரும் மணிகள்"

தினகரன், கேப்ரன் ஹால், மதுரை.

1. நீ எக்குணமுள்ளவனுக இருக்கிருயோ அப்படித்தான கடவுள் உனக்குத் தோன்றுவார்.

2. உன் வேலையை நீ முழு மனதுடன் செய்தால் உனக்குக் கடவுள் முன் வந்து உதவி செய்வார்.

1: இரு வஸ்துக்கள் "நான் பெரியது, நான் பெரியது" என்று வீம்பு பேசிக் கொண்டிருந்தன. ஒருவரும் நியாயம் தீர்த்துவிட முடியாமலிருந்தால் இவை இரண்டும் எல்லாவற்றிற்கும் சிறியவை யாகிவிடும்.

4. ஒரு காரியத்தைச் செய்து நீ சிறந்த பெரியவனுகப் போகிருய் என்று நிச்சயமாய்த் தெரிந்தாலும், அதைப் பிறரிடம் சொல்லாதே. அது தவறிப் போனுல் என்னவாகும் என்பதை யோசித்துப்பார்.

5. உனக்கு ஒரு சோதனை வந்தால் ஒரு நல்ல வேலையை செய்து கொண்டிரு. அப்போது அதை ஜெயித்து விடுவாய்.

6. விடாமுயற்சி பலன்தரும் என்பதை யாவரும் அறிந்திருந்தாலும் அதைக் கையாடுகிறவர்கள் சிலர். அவர்களுக்கே வெற்றியும் உரியது.

7. உன்னை நீயே பெரியவன் என்று காட்டினுல், உலகத்தார் உன்னை அறிவில்லாதவன் என்று முடிவு செய்வார்கள்.

8. நமது குற்றங்களை நாம் அறிந்தால் மாத்திரம் அதை சீர்திருத்திக்கொள்ள முடியும். நமது குற்றங்கள் நமக்குத் தெரியாது. அவற்றை எடுத்துக் காட்டுகிறவர்களை நேசிக்க வேண்டும்.

9. நல்லவர்களுடன் சிநேகம் செய்வது மிக நல்லது. கெட்டவனைக் காணுமலேயிருப்பது அதிலும் நல்லது.

10. அதிக சொற்ப விலைக்குக் கிடைக்கிறது என்று அனுவசியமான பொருளை வாங்கும் சுபாவம் உனக்கு இல்லாதிருந்தால், நீ தனவந்தனுக வழியுண்டு.

——— ———:o:——— ———

# அன்பு

மனித பாஷைகளையும் தெய்வ தூதர் பாஷைகளையும் பேசினாலும் அன்பு எனக்கு இராவிட்டால் சத்தமிடும் வெண்கலமும் ஓசையிடும் கைத்தாளமும் ஆய்விட்டேன். நான் தீர்க்க தரிசன வரத்தையுடையவனும், சகல இரகசியங்களையும் சகல அறிவையும் அறிந்தவனுமாயினும், மலைகளைப் பேர்க்கும் சகல விசுவாசமுமுள்ளவனாயினும், அன்பு எனக்கு இராவிட்டால் நான் ஒன்றுமில்லை.

எனக்குள்ள யாவற்றையும் அன்னதானஞ் செய்தாலும், சுட்டெரிப்பதற்கு என் சரீரத்தை ஒப்புக்கொடுத்தாலும், அன்பு எனக்கு இராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.

அன்பு நீடிய சாந்தமுள்ளது; அன்பு தயாளமுள்ளது; அது பொறாமை கொள்ளாது; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தனக்கானதை நாடாது, கோபங் கொள்ளாது, குற்றத்தைப் பாராட்டாது. அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தோடு சந்தோஷப்படும். யாவற்றையும் பொறுக்கும், யாவற்றையும் நம்பும், யாவற்றிலும நன்மையை எதிர்பார்க்கும், யாவற்றையும் சகிக்கும்.

அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், பரவசப்பேச்சுகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம், நாம் அறிவதும் குறைவு, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுவதும் குறைவு. நிறைவு வரும்போதோ குறைவு ஒழிந்துபோம், நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போல் பேசினேன், குழந்தையைப்போல் சிந்தித்தேன், குழந்தையைப்போல் யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்குரியவைகளை ஒழித்துவிட்டேன்.

இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுதோ முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் அறிகிறது குறைவு, அப்பொழுதோ நான் முற்றிலும் அறியப்பட்டிருக்கிறபடியே முற்றிலும் அறிந்துகொள்ளுவேன். இப்பொழுதோ, நிலைத்திருக்கின்றவை விசுவாசம் நம்பிக்கை அன்பு இம்மூன்றுமே; இவைகளில் அன்பே பெரியது.



# வர்த்தமானம்

புற தேச செய்தி:—

## கீழ் தேசங்கள்

மஞ்சுக்குவோ மாகாண எல்லை சம்பந்தமாய் ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் போருண்டாகும் போலிருந்தது. ஆனால் இப்போது யுத்தாயுத நிர்ப்பிரயோக உடன்படிக்கைக்கு இரு கட்சியாரும் கையொப்ப மிட்டிருக்கின்றனர். எல்லை குறிக்கும் வரைக்கும் அப்பாகத்தில் எக்கட்சியினரின் சேனையு மிருக்கலாகாது.

1869ல் ருஷியாவும் சீனாவும் வைத்திருந்த பூகோளப் படத்தை யனுசரித்து எல்லை குறிக்கப் போகின்றனர். ருஷியரில் இருவரும் மஞ்சுக்குவோ ஜப்பானியரில் இருவருமாகக் கூடி எல்லை குறிக்க ஏற்படுத்தப் பட்டிருக்கின்றனர்.

இதன் பலனாக சீன யுத்தத்திலிருந்து ஜப்பானியர் கவனம் சிதறும் என்றெண்ணப் பட்டது. ஹான் கௌவுக்கு எதிரே முன்னேறிச் சென்றதை ஜப்பானியர் கொஞ்சக் காலம் நிறுத்தி யாங்ட்சி நதியோரம் பதுங்கி யிருந்தனர். நதியின் தென் கரையோரம் ஜப்பானியர் முன்னேற முடியாது என்று சீனர் கூறுகின்றனர். காஞ்சாங்குக்கு நேரே முன்னேறினபோது ஷாஹோ என்ற இடத்தில் ஜப்பானியர் பெரு நஷ்ட மடைந்தனர். நதியின் வடக்கே முன்னேறப் பிரயாசப்பட்டபோது மேல் வெள்ளம் வந்து தடுத்தது. அச்சமயம் சீனர் முன்னேறினர்.

## ஐரோப்பிய நாடுகள்

பவேரியா, சாக்ஸனி, ரைன்லண்ட் முதலிய நாட்டார் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கின்றனர். ஏனெனில் ஜெர்மனியில் யுத்தப் பயிற்சி ஏராளமாய் நடக்கின்றது. ஆகாயப் படைப் பயிற்சி ஆகஸ்ட் மாத மத்தியில் ஆரம்பிக்கப் போகின்றது என்ற சத்தம் வந்தது. ரைன்லாண்ட் பிரதேசத்தில் ஊர் விட்டு ஊர் பிரவேசிப்பவர்கள் உடனே கொல்லப்படுவர் என்ற செய்தியும் பரவுகின்றது.

ஸ்பெய்னில் கொடிய கலகம் நடந்து கொண்டே யிருக்கின்றது. கலகக்காரர் சித்தி பெற்று வருகின்றனர். இவ்வருஷம் முடிவடையுமுன் யுத்தம் முடிவடையும்படி இத்தாலியர் கலகக்காரருக்குப் பக்க சகாயம் செய்கின்றனர். உதவிக்குச் சைனிய மனுப்புகின்றனர். கலகக்காரருக்கு ஜெயம் உண்டாகும் என்ற நிச்சயம் வரும்போது இத்தாலியர் தங்கள் வீரர்களை வெளியேற்றுவர். அதுவரை அதிக வீரரை உள்ளே அனுப்பிக்கொண்டே யிருக்கின்றனர்.

ரன்ஸிமன் பிரபு செக்கோஸ்லோவேக்கியாவுக்குச் சென்று சமரச முண்டாக்க முயற்சிக்கின்றனர். அதன் பலனாக அங்கே கலக முண்டாகாமல் சமாதானம் நிலைபெறும் என்று நம்பப்படுகின்றது. ஆயினும் ஐரோப்பா முழுவதிலும் சமரசம் ஏற்படும் என்று எண்ணுவதற்கு இடமில்லை. அங்குள்ள ஹிலின்கா பாதிரியார் மரண மடைந்ததால் தற்சமயம் சமரசமுண்டாக வழியில்லை.

ருஷியாவில் மார்க்க துவேஷப் படைமுயற்சி சித்தியடைந்து வருகின்றது. மாஸ்கோ பட்டணத்திலுள்ள கடைசி அத்தியக்ஷ ஆலயத்தையும் மூடி விடும்படி கட்டளை பிறந்தது. இன்னும் இருபது சிறு ஆலயங்களில் ஆராதனை நடக்கின்றது. 450 ஆலயங்களுள் 430 ஆலயங்கள் மூடப்பட்டன.

## அகில லோக ஒலிம்பிக் பந்தய விளையாட்டுகள்

1940ஆம் ஜப்பானில் ஒலிம்பிக் பந்தய விளையாட்டுகளை நடத்த முடியாதென்று ஜப்பானியர் சொல்லிவிட்ட படியால் பின்லாண்டில் அதை நடத்தும் படியாக முயற்சி செய்யப் பட்டு வருகின்றது.

இந்திய செய்தி :—

## வளமிகு பஞ்சாப்

1937—1938ஆம் ஷத்திய வரவு செலவு கணக்கில் பஞ்சாப் சர்க்கார் காட்டியிருக்கும் மீதம் எவரும் காட்டியிராத பெருந் தொகையா யிருக்கின்றது. வருஷ ஆரம்பத்தில் பொக்கிஷ அமைச்சர் இரண்டு லட்ச ரூபாய் மீதம் வருவது சந்தேகம் என்று அபிப்பிராயப் பட்டனர். பெப்ருவரி மீ ரூ. 61,00,000 மீதமாகு மென்று வெளியிட்டனர்.

ஆனது பற்றி சர்க்கார் கிராம அபிவிருத்தி விஷயமாய் ரூ. 53,00,000 செலவிடத் தீர்மானித்தனர்.

வருஷ முடிவில் ரூ. 6,00,000 மீதியிருப்பதற்குப் பதிலாக ரூ. 32,00,000 மீதி வந்தது. எதிர்பார்த்ததற்கு மேலே ரூ. 14,00,000 அதிகம் வரவு. செலவில் ரூ. 12,00,000 குறைவு மற்ற வரும்படி ரூ 42,00,000. சில்லறை வரவுமிருந்தது. ஆக இந்த வருஷ ஆரம்பத்தில் ரூ. 1,95,00,000 கையிருப்பு இருக்கும் என்று எண்ணப்பட்டது. அதற்குப் பதிலாக ரூ. 2,79,00,000 கையிருப்புக் கிடைத்தது.

## வைத்தியப் பண்டிதர் மாடன் அட்டால்

M. அட்டால் பண்டிதர் 1935ஆம் ஸ்ரீமதி கமலா நேரு அம்மையாருடன் ஐரோப்பாவுக்குச் சென்ற வைத்தியர். கடந்த பதினெரு மாதங்களாய் ஸ்பெய்ன் கலகத்தில் காயப் பட்டோருக்கு வைத்திய சிகிட்சை செய்து உதவினர். இப்போது இந்தியாவுக்கு வந்திருக்கின்றனர்.

இவ்வித வைத்திய சகாயம் சீனர் யுத்தத்தில் காயப் படுவோருக்குக் கிடைக்க வேண்டுமென்று காங்கிரஸ் ஏற்படுத்தியிருக்கும் சங்கத்தைச் சேர்ந்து சீனவுக்கு தான் போகப் போவதாகவும் இதற்காக இங்கிலாந்தில் பவு. 400 சேர்த்துக் கொண்டு வந்திருக்கிறதாகவும் பம்பாய் பட்டணத்தில் பேசும் போது கூறினர். பலரும் பல நன்கொடைகள் கொடுத்திருக்கின்றனர். அவற்றுள் விசேஷமானது இரண வைத்தியம் செய்யக்கூடிய பெரிய மோட்டார் வண்டி. சீனர் சர்க்கார் ஹாங்காங் பட்டணத்தில் இவர்களை வரவேற்று உபயோகிப்பார்கள். மோட்டார்



வண்டியில் இரண வைத்திய சிகிட்சைக்கு வேண்டிய மேசை ஆயுதங்கள் முதலியன வைக்கப் பட்டிருக்கின்றனவாம்.

## பர்மா கலகம்

ரங்கூனிலுள்ள இந்தியருக்கும் பர்மருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டதின் பலனாக பர்மாவில் ஒரு கலகம் ஏற்பட்டது. "மௌல்விக்கும் யோகிக்கும் நடந்த சம்பாஷணை" என்னும் புஸ்தகம் ஒன்றை மகமதியரில் ஒருவர் பிரசுரித்தார். புத்த மதத்தினர் அப்புஸ்தகத்தைப் பரவாமல் தடுக்கும்படி எதிர்த்தனர். எதிர்ப்புக் கூட்டம் ஒன்று ஷ்வேதகான் பகோடாவில் நடைபெற்று ஊர்வலத்துடன் முடி வடைந்தது. அப்போது ஒரு குட்டிக் கலகம் ஆரம்பித்தது. அது வளர்ந்து ஊர்க் கலக மாயிற்று. நாட் கணக்காயிற்று. ஒரு வாரம் கலகம் நடந்தது. ரங்கூனில் மாத்திரம் 70 பேர் உயிர் விட்டனர். 400 பேர் காயப் பட்டனர். பத்து லட்ச ரூபாய் பெருமான சாமான் நஷ்டமாயின.

பிரதம அமைச்சர் மா மௌ பண்டிதரும் அவர் உடன் ஊழியரும் எடுத்துக் கொண்ட பிரயாசையின் பலனாக கலகம் அடங்கிற்று. இரு கட்சியினரிலுமுள்ள பெரியவர் அவர்களுக்குள் சமாதானம் ஏற்பட வேண்டுமென எழுத்தின் மூலமாய் விண்ணப்பம் செய்திருக்கின்றனர்.

## ருஷியாவிலிருந்து வந்திருக்கும் பிரதம அத்தியக்ஷர்.

பிரதம அத்தியக்ஷர் நெஸ்டார் என்பார் லண்டன் பட்டணத்தை விட்டு சூரியானிய கிறிஸ்தவர்களுக்குள் வேலை செய்யும்படி திருவாங்கூரிலுள்ள கோட்டையத்துக்கு வந்திருக்கின்றார்.

"தோமா சகோதரத்துவம்" என்னும் சங்கத்தை ஸ்தாபித்து அதிலுள்ள ஆங்கிலேய குருக்களையும் ருஷியா குருக்களையும் கொண்டு கோட்டையத்தில் வேலை ஆரம்பிக்கப் போகின்றார். மலபார் கிறிஸ்தவர்களின் கொள்கைகளை மாற்றுவதல்ல அவர்கள் சுதேச சபையை விருத்தி செய்யும்படி உதவி செய்வதே இவரது நோக்கமாம்.

## சிந்து மாகாணத்தில் போதனை முறை பயிற்சிக் கலாசாலை

சிந்து மாகாண சர்க்கார் காராச்சியில் அல்லது ஹைதராபாத்தில் ஒரு போதனை முறை பயிற்சிக் கலாசாலை ஒன்று பம்பாய் சர்வகலாசாலையின் ஆதீனத்தின் கீழ் ஏற்படுத்த ஆலோசித்துக்கொண் டிருக்கின்றனர். சிந்து மாகாண மகாநாடு அதின் செலவுக்கு உத்திரவாதமாயிருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது

## இந்தியாவில் கரும்புத் தோட்டம்.

இந்தியாவில் 4,453,000 ஏக்கர் நிலத்தில் கரும்பு நடப்பட்டிருக்கின்றதாம். இதன் மூலமாய் 6,717,000 டன் எடையுள்ள சீனி கிடைக்கும். ஆஜ்மீர், மேர்வாரா, குவாலியர், காஷ்மீர் மத்திய இந்தியா, ராஜபுதனம், காசி, பஞ்சாப், சென்னை முதலிய இடங்களிலும் 1,22,000 ஏக்கரில் கரும்புத் தோட்டமுண்டு. 2,15,000 டன் சீனி கிடைக்கும். சீனி செய்யும் இயந்திரங்கள் போன வருஷம் ரூ. 65,71,502 செலவு செய்து இறக்குமதியானது. இதற்கு இந்த வருஷம் ரூ. 95,16,462 செலவு.

## அஸ்ஸாம் மாகாண மாணவர் உடை

உடையிலும் பாஷையிலும் ஒற்றுமை காணப்பட்டால் ஊராருக்குள் ஒற்றுமை காணப்படும் என்ற எண்ணத்தினால் அஸ்ஸாம் சர்க்கார் ஏற்படுத்திய சிற் சபையார் மாகாணத்தின் மாணவ ரனைவரும் ஒரேமாதிரி உடை யணிந்து ஒரே பாஷை பேசவேண்டு மென்று சிபார்சு செய்திருக்கின்றனர். கூடிய மட்டும் ஒரே மாதிரி உடையிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றார்களே தவிர கட்டாய மில்லை. ஒரே நிறம் இருப்பது அவசியம். கிராமத்தாரின் நிலைமையையும் அனுசரித்தே சிபார்சு செய்திருக்கின்றனர்.

———: (0) :———

## வாசிப்புப் பாடத்திலுபயோகிக்கும் கதைகள்

மாணவருக்குத் தெரிந்த பதங்களை உபயோகித்து உபாத்திமார் புதுக் கதைகளைக் கரும் பலகையில் எழுதுவார்கள். அல்லது, மற்றப் புஸ்தகங்களிலுள்ள கதைகளைப் பிள்ளைகள் யாவரும் ஏக காலத்தில் வாசித்தறியும் படி கரும் பலகையில் எழுதலாம். அல்லது பிள்ளைகள் தாங்களே கதைகள் எழுதலாம்.

கரும் பலகை உபயோகித்தால் ஒரு தடவை மாத்திரம் வாசிக்க முடியும். அதற்குப் பதிலாக, ஒரு பெரிய காகிதத்தில் மையினால் அல்லது பெரிய பென்சலினால் பெரிய எழுத்துக்களால் எழுதிவைத்தால் மாணவர் மறுபடியும் வாசித்துப் பழக ஏதுவுண்டாகும். அப்படி சேகரித்த கதைகளை அநேக்கி தலைப்பில் நாடா போட்டுத் தைத்து ஒரு சட்டத்தில் கட்டி வைத்தால் வேண்டும் போதெல்லாம் உபயோகித்துக் கொள்ளலாம்.

இப்படிப் பட்ட வாசகப் படம் ஒன்று இங்கு கட்டித் தொங்க விட்டிருக்கின்றது. இம்முறையினால் கதைகளுள்ள காகிதத்தைத் திருப்பிப் போடுவது இலேசு. வகுப்பை வெளியே வைத்து நடத்தினால் இந்தச் சட்டத்தை எடுத்துக் கொண்டு போவதும் இலேசு.

மற்றப் பாடங்களில் சேகரிக்கும் படங்களையும் கட்டித் தொங்கவிட இவ்வித சட்டத்தை உபயோகிக்கலாம்.




———

"அழகின் சிந்தை அகத்திலில்லாதவன் அகிலாண்டமெங்கு செல்லினும் அழகு என்பதை காணமாட்டான்"
—Emerson.



## நோயுற்றோருக் குதவி புரிதல்

Nina M. Munson.

நோயுற்றோரை வேதனை தெரியாமல் வைத்துக் கொள்ள பல உபாயங்களைத் தேடலாம். படுக்கை உயரமா யிருந்தால் உதவி புரிவது இலகு வாயிருக்கும். படுக்கும் மெத்தை கெட்டுப் போகாம லிருக்கும்படி மெழுகு துணி போடவேண்டும் அல்லது விரிப்புக்குக் கீழே காகிதம் பரப்பலாம்.

### மேசைகள்

இரு மேசைகள் இருக்கவேண்டும். படுக்கையின் பக்கத்தில் சிறு மேசை இருக்க வேண்டும். சாமான்கள் வைத்துக்கொள்ள ஒரு பெரிய மேசை வேண்டும்.

### படுக்கைப் பாத்திரம்

படுக்கையிலேயே மல ஜலம் வெளியேற படுக்கைப் பாத்திரம் இல்லாவிட்டால், தலையணையைச் சுருட்டி அரைக்குக் கீழே அண்டை கொடுத்து வாயகன்ற பாத்திரத்தை தலையணையோடு சேர்த்து வைக்கலாம்.

### கைக்குட்டை

மூக்கி லிருந்தாவது தொண்டையி லிருந்தாவது ஏதாவது நீர் வடிந்தால் பழைய சுத்தமான வெள்ளைத் துணியைச் சதுரம் சதுரமாகக் கிழித்துக் கோர்த்து வைக்கவேண்டும். படுக்கையின் பக்கத்தில் ஒரு பை தொங்கவிட்டிருக்க வேண்டும் ஒரு தடவை உபயோகித்த துணியை மறுதடவை உபயோகிக்காதபடி பைக்குள் போடவேண்டும். ஒவ்வொரு நாளும் அந்தப் பையை சுட்டெரித்துப் புதுப் பை தொங்க விடவேண்டும்.

### சளிப் பெட்டி

பழைய அட்டைப் பெட்டியையாவது காகிதப் பெட்டியையாவது அடியில் சாம்பல் போட்டு வைத்து அதில் சளியைத் துப்பும்படி செய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் சுட்டெரிக்கப் படவேண்டும்.

### அளவு பாத்திரம்

ஒரு சதுரக் கண்ணாடி சீசாவை எடுத்து அதில் ஒரு நீள காகிதத் துண்டு வெட்டி ஒட்டி ஒவ்வொரு அவுன்ஸ் தண்ணீராய் அதில் விட்டுக் குறிக்கவேண்டும். இது நல்ல அளவு பாத்திரமாகும்.

## பனிக் கட்டிப் பை

துவிச் சக்ர வண்டி உள்ளுறையில் ஒரு துண்டு வெட்டி எடுத்து அதைப் பனிக் கட்டியால் நிரப்பி இரு பக்கமும் நன்றாய் ஒழுகாமல் கட்டி விட்டால் நேர்த்தியான பனிக் கட்டிப் பையாகும்.



சாய்ந்த படுக்கை

படத்தில் காட்டியபடி நாற்காலியைத் தலை கீழாய்க் கவிழ்த்தி வைத்து முதுகுக்குத் தலையணை வைத்து விட்டால் வியாதியஸ்தருக்கு வசதியான சாய்ந்த படுக்கையாகும். இது முதுகுக்கு நல்லது.

## திரைகள்

நோயுற்றோர் எனைவருக்கும் சுத்த ஆகாயம் அவசியம். எனினும் வாடையடிக்கக் கூடாது. ஜன்னல்களைத் திறந்து வைத்து திரை போட்டால் உத்தமம். காற்றும் உண்டு. மறைவும் கிடைக்கும்.

—— ——:o:—— ——

## ரவை உருண்டை

ஆழாக்குத் தண்ணீரை இரும்புச் சட்டியில் விட்டு சிறிது உப்புப் போட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். தண்ணீர் கொதிக்கும் போது ஓர் ஆழாக்கு மெல்லிய ரவையை அதில் கொட்டிக் கிளறி நன்றாய் வெந்த பின் இறக்கி சிறிது ஜாதிக்காய்த் தூள் போட்டுக் கலந்து, சிறிய எலுமிச்சம் பழம் அளவாய் உருண்டை பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஓர் ஆழாக்குச் சர்க்கரையை மெல்லிய பாகாக காய்ச்சி அதில் ஓர் எலுமிச்சம் பழத்தின் சாற்றை விட்டு, கொஞ்சம் பட்டை லவங்கம் போட்டு வைத்துக்கொள்ள வேண்டும்.

நெய்யை நன்றாய் காய்ச்சி, ரவை உருண்டைகளை நெய்யில் சிவக்கப் பொரித்து பாகில் போட்டு வைத்து 1 மணி நேரத்திற்குப் பிறகு சாப்பிட்டால் திவ்விய மதுரமாக இருக்கும்.



# செவிப் புலன்

S. S. SIROMANI

கேட்கும் சக்தி கடவுள் கொடுத்திருக்கிற ஈவுகளில் ஒன்று என்று நாம் எண்ணுகிற தில்லை. பறவைகளின் பாட்டுகளையும் இலைகளின் இரைச்சலையும் கேட்டானந்திப்பது நமக்குரியது என்று எண்ணுகின்றோம். இந்த சக்தியை இழந்தால் மாத்திரம் அதின் அருமையை அறியக் கூடியவர்களாவோம்.

பிள்ளைகளுக்குக் கேட்கும் சக்தி எவ்வளவு இருக்கிறதென்று சோதித்துப் பார்க்க வேண்டும். அதைப்பற்றிய பூரண அறிவு பெற்றோருக்கும் உபாத்திமாருக்கும் இல்லாத படியால் அனுவசியமாய் அநேக மாணவர் தண்டனைக் குள்ளாகின்றனர். காது கேட்காத பிள்ளைகள் தங்கள் குறைவை வெளியிட வெட்கப் படுவார்கள். இக்குறையின் நிமித்தம் கோபப் படுவார்கள். மற்றவர்கள் தங்களைக் குறித்துத் தீது பேசுகின்றனர் என்று எண்ணி தப்பர்த்தம் பண்ணுவார்கள்.

காதின் அமைப்பை நாம் சரியாய் விளங்கிக் கொள்ளக் கூடுமானால் அதைப் பாதுகாப்பதில் கவனமாயிருப்போம்.



1. காதுக்குழாய் 2. ஜவ்வு 3, 4, 5, காது எலும்புகள்
6, 7, 8, 9, உள் உறுப்புகள் 10, 11, நரம்புகள் 12, உட்குழாய்.

## வெளிக் காது.

ஆகாயத்தில் விரவியிருக்கும் ஒலியைத் தடுத்து உட்கொள்ளும் உறுப்பு. காதைத் திருப்பக் கூடிய மூன்று விதத் தசைநார் நமக்குண்டு. ஆனால் நாம் சில மிருகங்களைப் போல அவற்றை உபயோகிக்கிறதில்லை. சத்தம் எங்கிருந்து வருகிறது என்று அந்த மிருகங்கள் கண்டு பிடிக்கும் அளவு நாம் கண்டுபிடிக்க முடியாது.

## காதுக் குழாய்

வெளிக்காதிலிருந்து காதுக் குழாய் ஜவ்வு மட்டும் செல்லுகின்றது. இக்குழாயினின்று மெழுகு போன்ற வஸ்து வெளியாகி காதிலுள்ள அழுக்குகளைத் திரட்டிக்கொண்டு வெளி யேறு

கின்றது. கூர்மையான வஸ்துக்களைக் கொண்டு காதை சுத்தம் செய்யக் கூடாது. செய்தால் ஜவ்வுக்கு சேதமுண்டாகும். வைத்தியரிடம் போய் வேளா வேளைகளில் காதைச் சுத்தம் செய்யவேண்டும். காதில் தண்ணீர் ஏறியிருந்தால் அது மெழுகுபோன்ற வஸ்துவைப் பெரிதாக்கிக் கேட்கும் சக்தியைக் கெடுக்கும். ஆனது பற்றி நீரில் நீந்தப் போகுமுன் காதை சுத்தம் செய்வது நல்லது.

வைத்தியர் சகாயங் கிடைப்பது கஷ்டமானால் இரவில் இரண்டு சொட்டு நல்லெண்ணெயைக் காதில் ஊற்றிப் படுத்துக் கொண்டால் காலையில் மெழுகு ஊறி வெளியேறும்.

காதில் வேறு சாமான் விழுந்திருந்தால் தண்ணீரோ எண்ணெயோ விடக் கூடாது. வைத்திய சகாயந் தேடவேண்டும்.

## ஜவ்வு

இந்தக் குழாயின் அந்தத்தில் இந்த ஜவ்வு வில் வளைந்து காணப்படும். கூரிய வஸ்துக்களை காது சுத்தம் செய்வதற்கு உபயோகித்தால் அவை இந்த ஜவ்வைச் சேதப் படுத்தும். காதின் மத்திய பாகத்தில் கட்டி வந்தால் மாத்திரம் சுகப்படுத்தும்படி இந்த ஜவ்வில் ஒரு துவாரமிடுவார்கள். வைத்தியர்கள் மிகப் பத்திரமாய்ச் செய்வார்கள். இவ்வாறு ஜவ்வில் துவாரமுண்டான பிறகு காற்றுவது தண்ணீராவது காதுக்குள் செல்ல இடங் கொடுக்கலாகாது.

## மத்திய காது.

இது கடினமான எலும்புக் கூட்டிற்குள்ளிருக்கின்றது. இது $\frac{1}{3}$ அங் நீளமும் $\frac{1}{3}$ அங். உயரமும், 1/16 அங். அகலமுமானது. இங்கு ஒரு சொட்டுத் தண்ணீர் அல்லது சீழ் இருந்தால் கஷ்டமுண்டாக்கும்.

இங்கு 3 சிறு காது எலும்புகள் இருக்கின்றன. இவைகளின் அதிர்ச்சியினால் ஒலி உட்செல்லுகின்றது.

## உள் உறுப்புகள்

ஆகாயத்தை உள்ளே வைத்திருக்கும்படி மூக்குத் துவாரத் தோடே சம்பந்தப் பட்ட ஓர் உட் குழாயிருக்கின்றது. மற்ற உள் உறுப்புகளின் படத்தை கீழே காணலாம்.



இந்த உறுப்புகளிலிருந்து ஒலியானது மூளையோடு சம்பந்தப் பட்ட நரம்பு வழியாய் செல்லுகின்றது. உள் உறுப்புகளிலுள்ள ஜல பதார்த்தமும் ஆகாயமும் ஒலியை மூளை நரம்புக்



கனுப்புவதில் உதவி செய்கின்றன. ஒலி நரம்பின் வழியாய் மூளையோடு சம்பந்தப் படும் போதுதான் நாம் கேட்டு விளங்கிக் கொள்ளுகிறோம்.

செவிப் புலன் மிகவும் அருமையும் ஆச்சரியமு மானதல்லவா?

———:o:———

## சர்க்கரைப் பொங்கல்

$\frac{1}{4}$ படி அரிசிக்கு $\frac{1}{8}$ படி பாசிபயறு நன்றாய் வறுத்து உடைத்து, ஒரு தேங்காய் உடைத்து திருகிப் பாலைப் பிழிந்து முதல் பாலை தனியாகவும், இரண்டாம் பால் மூன்றும் பாலைத் தனியாகவும் எடுத்து வைத்துக் கொள்ளவும். ஈயம் பூசின வாயகன்ற பாத்திரத்தில் பாசிப் பருப்பை கொஞ்சம் தண்ணீர் ஊற்றி அரை வேக்காடு வெந்து எடுத்து வைத்துக் கொண்டு மேற்படி பாத்திரத்தில் பற்று இல்லாமல் சுத்தமாக அடுப்பில் ஏற்றி 1 பலம் முந்திரிப் பருப்பு சுத்தப் படுத்தி $1\frac{1}{2}$ மாகாணிப் படி நெய்யை பாத்திரத்தில் காய வைத்து முந்தியே அதாவது பருப்பு வேகும்போது $\frac{1}{4}$ படி பழைய பச்சரிசியை கழுவி அடுப்பில் காய்ந்து கொண்டிருக்கும் நெய்யில் முந்திரிப் பருப்பையும் $\frac{1}{2}$ பலம் முந்திரி (சைனு) பழம் இவைகளை வறுத்து பருப்பு சிவந்ததும் அரிசியை எடுத்து நன்றாய் வறுத்து வாசனை உண்டாகும் போது தேங்காய் பால் முழுவதும் அதில் ஊற்றி பாசி பருப்பு அரைப் பாகத்தையும் அதில் போட்டு விட வேண்டும். ஒரு தரம் நன்றாய் கிண்டி மூடியால் மூடி விட வேண்டும். தேங்காய் பால் $\frac{1}{2}$ படிக்கு குறையாமலும், கூடாமலும் இருக்க வேண்டும். இவ்வளவும் செய்யும் முன்பே 6 பலம் சர்க்கரை விட்டு பாகு பதமாக்கி வைத்துக் கொள்ளவும், ஏல அரிசி 2 பைஸ், சுக்கு சிறு துண்டு இவைகளை நன்றாய் பொடி செய்து மேற்படி அரிசியையும், பருப்பும் நன்றாய் வெந்து வரும்போது முதல் தேங்காய் பாலையும் சர்க்கரைப் பாகையும் ஏலரிசித் தூளையும் எல்லாவற்றையும் சேர்த்து நன்றாய்க் கிண்டி மூடியால் மூடி பழையபடி தாம்பளத்தில் தணல் செய்து மூடிக்குப் பதிலாகப் பொங்கலை மூடி ஈரத்துணியை இறுக வளையத்தில் கட்டி அடுப்பிலும் தணலிலும் ஆக்கி 20 நிமிஷம் கழித்து பார்த்தால் நன்றாய் ஆவி புறப்படும். அப்போ இறக்கிக் கிண்டி லேசாக மூடிவைக்கவும். தண்ணீர் பதம் இருந்தால் பின்னும் 10 நிமிஷங்கள் வைத்து பின் உபயோகிக்க வேண்டும்.

———

## ரோஜாப் புஷ்பம்

ரோஜாப் புஷ்பம் மிகுதியாய்ப் பூக்குங்காலத்தில் அதன் இதழ்களைச் சேர்த்து காய வைத்தால் நல்ல வெகுமதி கொடுக்க உதவும். எப்படியென்றால், இதழ்களை காற்றுள்ள அறையில் பரப்பி வைக்க வேண்டும். சூரிய வெளிச்சம் படலாகாது. வாசத்தையும் நிறத்தையும் காக்க வேண்டுமானால் உப்புத்தூள் தூவ வேண்டும். ஒவ்வொரு நாளும் அவற்றைக் கிளறி இடம் மாற்ற வேண்டும். ஒரு வாரத்திற்குப்பின் பைகளில் போட்டுத் தைத்துத் துணிப் பெட்டியில் வைக்கவேண்டும். ரோஜாப் புஷ்பத்தின் வாசனை மாறுதிருக்கும். இந்தப் பைகள் சிநேகிதருக்குக் கொடுக்க கூடிய நல்ல வெகுமதி.

## விகடம்.

ராமன். "20 அடி உயரமுள்ள ஏணியில் ஏறி விழுந்து விட்டேன். காயம் ஒன்றுமே யில்லை"

ஸ்நேகிதன்: "நான் நம்பவே முடியாது. 20 அடி உயரமா?"

ராமன்: "நான் விழுந்தது வாஸ்தவம் முதல் ஏணிப் படி ஏறும்போதே தவறி விழுந்தேன்"

தகப்பனார்: "என் மகன் படிக்கிற பள்ளிக் கூடத்தில் வைக்கும் பரீட்சை சரியானதேயல்ல. அநியாயம்!

அயலான்: "ஏன் அப்படி எண்ணுகின்றீர்?"

தகப்பனார்: "சரித்திரப் பாடத்தில் என் மகன் பிறக்குமுன் நடந்த விஷயங்களைப் பற்றி உபாத்தியாயர் கேள்வி கேட்கலாமா? அது நியாயமா?"

கடையில் ஒரு ஜாமான் கிடையாது என்று சொல்லக் கூடாது என்பது முதலாளி கட்டளை. இல்லாத ஜாமானுக்கு உடனே ஆள் அனுப்பி வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பது அங்கு எவருக்கும் தெரிந்த விஷயம்.

"இல்லையம்மா வெகு நாளாய்க் கிடையாது" என்று வேலையாள் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட முதலாளி அவனை மிகவும் கடிந்து கொண்டு அம்மா! ஆள் அனுப்பிக் கொஞ்சம் வாங்கிக் கொண்டு வந்து தரச் சொல்லுவேன். சற்று உட்காருங்கள்? என்று அந்த அம்மாளிடம் சொன்னர்.

அந்த அம்மாள் சிரித்துக் கொண்டுபோய் விட்டார்கள். அவர்கள் என்ன சொன்னர்கள் என்று கேட்டபோது வேலையாள் வெகுநாளாய் மழை கிடையாது என்றார்கள். நானும் வெகுநாளாய் கிடையாது என்றேன். நீங்கள் எங்கே வாங்குவீர்கள்? என்றான்.

"முதல் முதல் பள்ளிக்கூடம் போனயே, என்ன நடந்தது என்று வீட்டார் ஒரு சிறு பையனைக் கேட்டனர். அதற்கு அவன் ஒன்றும் நடக்கவில்லை உபாத்தியாயருக்கே ஒன்றும் தெரியவில்லை இரண்டும் இரண்டும் என்ன என்று என்னைக் கேட்டார். நான்கு என்று நான் சொல்லிக் கொடுத்தேன்" என்றான்.

அனந்தா: "என் பூதக் கண்ணாடியின் உதவியினால் அரைமைலுக்கப்பாலுள்ள வற்றைப் பார்க்க முடியும்"

சிநேகிதன். "அது பெரிய காரியமா? கண்ணாடியில்லாமல் லட்சக்கணக்கான மைலுக்கப்பாலுள்ளவற்றை நான் காண்கின்றேனே"

அனந்தா: "நான் அதை நம்ப முடியாது"



சிநேகிதன்: நம்ப முடியாதா? சூரியன் எவ்வளவு தூரம்?

ஜோன்ஸ். ஜனங்கள் ஒரு மாதரி ஆட்கள்.

ஸ்மித்: ஏன் அப்படி எண்ணுகின்றாய்?

ஜோன்ஸ்: 267543210 நட்சத்திரங்களிருக்கின்றன என்று ஒருவன் சொன்னல் எளிதில் நம்பி விடுவார்கள். இந்தப் பால் சுத்தமான தண்ணீர் கலவாத பால் என்று சொன்னல் பரிசோதனை பார்த்தாலே நம்புகின்றனர்.

சித்தி: "பள்ளிக்கூடம் போவது உனக்குப் பிரியமா?"

பையன்: "பள்ளிக்கூடம் போவதும் பிரியம். பள்ளிக்கூடம் முடிந்து திரும்புவதும் பிரியம். இரண்டிற்கும் இடையிலுள்ள நேரம் பிரியமில்லை."

——:o:——

"சுயஹிம்சைக்குத் தன்னை ஒப்புக் கொடுக்கின்ற சிந்தையுடையான்குற்ற மோன் றிற்கு மாளாகான்" —Bulwere-Lytton.

"உலகை அசைத்தாள ஆசிப்போன் ஆதியில் தன்னை அசைத்தாளட்டும்"—Socrates

"அரசு புரிய ஆசிப்போன் பணி புரிய நேசிப்பான்" —Byron.

காலங் காட்டும் கருவிகள் நாமே!

நம் கோலம் எவ்வாறே காலமும் அவ்வாறே!"— பரி. அகஸ்டின்.


தந்தி: பின்மென்

போன்: 2281

உங்கள் விலை உயர்ந்த உடைகளை தண்ணீரில் நனைக்காமல் அழுக்கை நீக்கவும், சாயம் போடவும், சலவை செய்யவும் வேண்டுமானல்

ஆங்கிலோ பர்மா பின்மென்,

147, பிராட்வேக்கு அனுப்பவும்.

# கிண்டர்க் கார்ட்டன் கதை

## கம்பளிப் பூச்சியும் சிலந்திப் பூச்சியும்.

ஒரு சிலந்திப் பூச்சி ஒரு தோட்டத்தில் ஒரு வலை பின்னிக் கொண்டிருந்தது அதனருகில் ஒரு கிளையில் ஒரு கம்பளிப் பூச்சி ஒரு கூடு பின்னிக் கொண்டிருந்தது. அப்பொழுது சிலந்திபூச்சி கம்பளிப் பூச்சியைப் பார்த்து.

ஓ சிறு புழுவே! எத்தனைமணி நேரமாய் நீ இந்தக் கூடு பின்னிக் கொண்டிருக்கிறாய். "என்னைப்பார் எவ்வளவு சீக்கிரமாய் இவ்வளவு பெரிய வலையைப் பின்னியிருக்கிறேன்." என்றது. அதற்குக் கம்பளிப் பூச்சி சிலந்தியைப் பார்த்து.

"என்னால் செய்யக் கூடியதை நான் ஒழுங்காய்ச் செய்துவருகிறேன். காலதாமதமானாலும் வெகுகாலம் இருக்கும் படி செய்வது என் கடமை" என்றது. பின்னும் சிலந்திப் பூச்சி,

"என் வலையைப்பார். என்ன அழகாயிருக்கிறது! எவ்வளவு ஒழுங்காயும், மெல்லியதாகவும் செய்து முடித்திருக்கிறேன்." என்றது. அதைக் கேட்டுக் கம்பளிப் பூச்சி,

"நீ சொல்வது உண்மை. ஆயினும் உன் வீடு உனக்காக மாத்திரம் கட்டியிருக்கின்றாய். உனக்கு இரையாவோர் எவரும் உண்டானால் அவர்களுக்கும் அங்கே இடமுண்டு" என்றது.

'உன் கூட்டில் நீ வாழும் நாட்கள் நீடித்திருக்காது" என்று குறை கூறிற்று சிலந்திப் பூச்சி. பொறுமையோடு இதைக்கேட்டுக்கொண்டிருந்த கம்பளிப் பூச்சி சொன்னதாவது:—

"பெருமை பாராட்டுவது நல்லதல்ல. விழுதலுக்கு முன்னானது மன மேட்டிமை. ஒரு காற்றடித்தால் உன் வீடு சின்ன பின்னமாகுமே! குப்பையோடு குப்பையாய்ப் போகுமே! அதை எண்ண வேண்டாமா? என்னை இழிவாய் பேசிய உன்னை மன்னிப்பேன் எனினும் உண்மையை நீ அறியவேண்டும். என்னுடைய கூட்டில் நான் பின்னியிருக்கும் மெல்லிய பட்டுநூல் அரசனுடைய ஆடையை நெய்யவும் உதவும். ஏழைகள் அதை விற்றுப் பிழைக்கவும் உதவும், அதில் எனக்கு வாழ் நாட்கள் நீடித்திரா விட்டாலும் பிறருக்கு அதினால் பிழைப்பும் மதிப்பும் உண்டானால் அதுவே எனக்கு போதும். அதுவே எனக்கு ஆனந்தம். அதுவே எனக்கு வாழ்வு. அதுவே எனக்கு மேன்மை."

(இந்தக் கதையை சம்பாஷணைப் பாடமாகவும் நடத்தலாம். கதைக்குப் பின்னால் சித்திரம் வரைதல் நேரம் வரும்போது சிலந்திப் பூச்சி வலையை வரையச் சொல்லலாம். கரும் பலகையில் உபாத்தியாயர் எழுதின மாதிரிப் படம் ஒன்று வரைந்து காட்ட வேண்டும்.)

T. A. Fenn.

# பிள்ளைகள் கைவேலை




இப் படத்தை அட்டையில் ஒட்டி வெளியே வெட்டி பாதம் இருக்கும் இடத்தில் மடித்து நிமிர்த்தி தலையிலும் முதுகிலும் உள்ள பிளப்பில் கார்ட் சொருகினால், இந்த யானையை மேசையின் மேல் நிறுத்தி வைக்கலாம்.



நேப்பாள தேசப் பெண்பாலர்.

Rejistered No. M. 3804.



லாகூர் – இன்ப இல்லம்.

Printed by S. T. Rhenius at the N.M.S. Press, 48-B, Peters Road, Royapettah and
Published by Rev. T. A. Fenn, College Church,
12, Venkata Maistry Street, George Town, Madras.

28 / 128

# வித்யாதனம்

## TAMIL TREASURE CHEST

தொகுதி 2 அக்டோபர் 1938ஹு பகுதி 7

OFFICE OF THE REGISTRAR OF ... 7-OCT 1938 MADRAS



## பொருளடக்கம்.


| | | பக்கம். | | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்பு | 1 | 5. | ரவீந்தரநாத் டாகோர் | 15 |
| 2. | நளன் தமயந்தி நாடகம் | 2 | 6. | தொனிப் பெட்டி | 18 |
| 3. | பிரீதிக்குப் பிரீதி | 9 | 7. | நாடாப் பூச்சி | 22 |
| 4. | களிப்பு அளிக்கும் காஷ்மீரத்துப் பள்ளத்தாக்கு | 13 | 8. | வர்த்தமானம் | 23 |


### பத்திரிகையின் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| பிரதி ஒன்றுக்கு | ... | அணு 1 |
| வருஷ சந்தா | ... | ரூ. 1—0—0 |
| வெளி நாடுகளுக்கு | ... | ரூ. 1—8—0 |


REV. T. A. FENN,
Editor, Vidyadhanam,
12, Venkata Maistry Street,
George Tow..
MADRAS.



# வித்யாதனம்
VIDYADHANAM
TAMIL TREASURE CHEST

தொகுதி 2 அக்டோபர்மீ 1938ஞு பகுதி 7



OFFICE OF THE ... MADRAS
7-OCT 1938


## பத்திராதிபர் குறிப்பு

நேயர்களில் அநேகர் தங்கள் சந்தாக்களைப் புதிப்பித்திருக்கின்றதற்காக மிகவும் நன்றி பாராட்டுகின்றோம். இன்னு மனேகர் நமது பத்திரிகையின் நேயர்களாகும் பொருட்டு நம்மு டன் எவரும் ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம். பத்திரிகையைப் பற்றி எவ் வித அபிப்பிராயம் இருப்பினும் அதை எமக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம். எழுதுவோரும் படிப்போரும் நன்மை பெற அது உதவுமெனக் கருதுகின்றோம்.

### அக்டோபர் மாதம்.

லத்தீன் பாஷையில் " அக்டோ " என்பதற்கு எட்டு என்பது பொருள். ரோமாபுரி வருஷத்தின் மாத வரிசைக் கிரமத்தில் இது எட்டாவது மாதம். அவர்கள் வருஷம் மார்ச்சு மாதத்தில் துவங்கும். நமது வருஷத்தின் மாத வரிசைக் கிரமப்படி இது பத்தாவது மாத மாகும். எனினும் பழைய பெயரையே மாற்றாமல் வழங்கி வருகின்றோம்.

### நளன் நாடகம்.

நளன் தமயந்தி நாடகத்தை சுயவர காண்டத்தோடு முடிக்கின்றோம். பாடசாலை மாணவர் நடித்துக் காட்டக்கூடிய நல்ல பாகமிது. அதோடு மங்கள காரியத்தில் முடிப்பது மாணவருக் கேற்றது. இப்பாகத்தின் பின் நான்கு காட்சிகளும் இதில் வெளியாகி யிருக்கின்றது.

### சரீர சாஸ்திரம்.

சரீர சாஸ்திரப் பாடங்கள் மாதந்தோறும் இதில் வெளி வரும். இம்மாதம் சுவாச உறுப்புகளைப்பற்றிப் படிப்போம். அடுத்த மாதம் ஜீரண உறுப்புகளைப்பற்றிப் பார்ப்போம். அழகான படங்களுடன் வெளியாகும். எதிர் பாருங்கள்.

T. A. Fenn.

# நளன் தமயந்தி நாடகம்.

(தொடர்ச்சி)

## III காட்சி

(தோழிப் பெண்கள் தமயந்திக்குப் பூ முடிக்கின்றனர்)

1

புஷ்பம் சூடுவோம் நாம் நன்றே
புஷ்ப ராணிக்கே யின்றே
இஷ்ட தமயந்தியின் அ
திஷ்டம் ஓங்கவே கஷ்டம் நீங்கவே—புஷ்.

2

மல்லிகை ரோஜா பிச்சி
வில்லி சிவந்தி இருவாச்சி
நல்லோர்க் கென்றும் தொல்லை நீக்கும்
முல்லைப்பூ, அல்லிப்பூ, செல்லிப்பூக் கொய்துமே—புஷ்.

(பந்து விளையாடுகின்றனர்)

(அன்னம் ஒரு பக்கம் ஒதுங்கி நிற்பதைக் கண்ட தமயந்தி அன்னத்துக் கருகிற் சென்று)

தமயந்தி: சொன்னம் போல் விளங்கும் அன்னமே! என்னை நீ எற்றிற்கு நாடினை?

அன்னம்: மான் விழியாய்! உன்னை யான் அடைதற்குரிய காரணமுளது. உன் காதற் கியைந்த ஒரு நாதனைக் குறித்து இங்கு வந்துளேன்.

தமயந்தி: அவர் யாவர்? எவ்வூர்?

அன்னம்: அவன் செம்மனத்தான், தண்ணளியான், செங்கோலான், மங்கையர் தம் மனத்தை. வாங்கும் தடந்தோளான், நளன் எனும் நாமத்தான்! மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான், உளன் என்பான் வேந்தன் உனக்கே!

தமயந்தி: ஆ, ஆ, அப்படியா? சரி, சரி

அன்னம்: பின்னும் அவன் அறம் கிடந்த நெஞ்சுடையான், அருள் ஒழுகும் கண்ணுடையான்; மறங்கிடந்த திண்தோளான்; நிடத நாட்டினை ஆளாநிற்கும் இந்நில வேந்தனுக்கு நீல வர்ணனே நிகராகானென்றால் மற்றெந்தத் தேர் வேந்தர் நிகராவர்?

தமயந்தி: வாவியுறையும் மட அன்னமே! என் ஆவி உவந்தளித்தேன். காவினிடைத் தேர் வேந்தர்க்கு என்னிலைமை இன்றே நீ சென்றுரைத்தி. காலங் கடத்துவாயாகில் ஞாலத்தில் என்னுவி நிற்பது இனி அரிது.

அன்னம்: அடையாத வாயில் அகம் உடையானை உனது அகமுடையான் ஆக்கும் வகை புரிவேன்.



(அன்னம் பறந்து செல்ல, அப்பக்கமாய்த் தமயந்தி ஏறிட்டுப் பார்த்துப் பாடுகின்றனள்)




தமயந்தி:

மா நளா வாரதென்ன காரணம்?
மணாளா வாரதென்ன காரணம்?
குணாளா தயாளா என்ன தாமதம்?—மா நளா

1

என் முகம் மயங்குதே
என் அகம் ஏங்குதே
என் புறம் தயங்குதே
என் இன்பமும் மங்குதே
என் துயர் ஓங்குதே!—மா நளா

2

அன்னம் உன் தூதனோ
மின் மேகம் ஓர் தூதனோ
என்னென்ன தூது உண்டோ?
மன்னா இதில் சூதுண்டோ?
உன்னைச் சேர ஏதுண்டோ?—மா நளா

## IV காட்சி

(நளன் வீதியில் நடந்து வருகின்றான்)

நளன்:—தமயந்தி என்மீது காதல்கொண்ட நற்செய்தியை யான் அனுப்பிய அன்னத்தின் மூலமாய் அறிந்துகொண்டேன். எனினும் என் துயரம் நீங்கவில்லை. நளனாகிய யானே நேரில் சென்று அக் காதற் கியைந்த மாதைக் கண்டாலன்றி உள மகிழ்ந்திருக்க முடியாது.

(தேவர்கள் பாடி வருகின்றனர்)

தேவர்கள் :

வந்தோம் வானோர்கள் யாம்
சொந்தத் தமயந்தி சுயவரத்திற்கு—வந்
தந்திரமாய்க் கன்னி சுந்தர மாடம் சென்
றிந்த நற் செய்தி கொண் டெந்த ஆள் செல்லுவன்—வந்

தேவேந்திரன் : நாரதன் சொன்னது உண்மையே! வீம ராஜன் தவப் புதல்விக்குச் சுயவரம் என்று எங்கும் பறை சாற்றப் பட்டிருக்கின்றதாம். வேந்தருக் கெல்லாம் தூது போக்கி யிருக்கின்றனனும்.

அக்கினி பகவான்: அன்னது நாரதன் சொன்னது. ஆயினும் அவரை நமது பால் தமயந்தியிடம் தூது விடுக்கக் கூடாது. ஏனெனில் அவன் அங்கு மிருப்பான், இங்கு மிருப்பான், ஆக்கின சோற்றுக்குப் பங்கு மிருப்பான்.

இயமன் : தமயந்தி நம் நால்வருள் ஒருவரை மணந்து வாழ இணங்கச் செய்ய வேண்டுமே யொழிய மண் ணரசருள் ஒருவருக்கு மாலையிட விடக்கூடாது.

வருணன் : இதைப் பற்றிப் பேசிப் பயன் யாது? ஆகவேண்டிய காரியத்தைப் பார்க்க வேண்டும். அதற்கேற்ற ஓர் ஆள் வேண்டும். அதோ! அங்கு வருகின்றவன் யாவன்?

(நளன் வருகின்றான்)

தேவேந்திரன் : காவற் குடை வேந்தே! எமது ஏவற்றொழிலுக்கு இசைதியோ?

நளன் : இந்திரனது ஏவற் றொழிலுக்கிசைபவன் நளனேயன்றி இவ்வுலகில் வேறு எவன் உளன்?

தேவேந்திரன் : வீமன் திருமகளின் மண மாலையை எங்களில் ஒருவன் பெறும்படி நீ அவள் பால் தூது சென்று எம் எண்ணம் தெரிவித்தல் வேண்டும்.

நளன் : காவல் கடந்து கன்னிபாற் செல்லுமாறு எவ்வாறு?

தேவேந்திரன் : பிறர் பார்வைக்கு உன் உடல் மறையும்படி மந்திர மொன் றுபதேசிப்பேன். அதை உபயோகித்தால் உட் பிரவேசிக்கலாம்.

நளன் : அப்படியே ஆகட்டும்.

தேவர்கள் : மங்கள முண்டாவதாக!



## V காட்சி

### கன்னி மாடம்

(நளன் எதிரில் நிற்க தமயந்தி பாடுகின்றாள்)

தமயந்தி :

காவல் கடந்தது யார்? யார், யார், யார், யார், யார், யா—ர்
காவல் கடந்தது யார்?
தேவனோ, இறைவனோ, யாவனோ, அறியேன்
ஏவலால் உரைப்பாய் உன் பேர்
தேவனோ, இறைவனோ, யாவனோ, தெரியேன்
காவல் கடந்தது யார்—காவல்.



நளன் :

பூவில் நளன் என்பார்—பார்...........
பூவில் நளன் என்பார்

ஆவி சோர மேவி வந்தேன்
மாவிந்தம் என்பதென் ஊர்
ஆவிசோர மேவி வந்தேன்
பூவில் நளன் என்பார்—பூவில்

தமயந்தி : நீர் வந்த காரணம் யாது ?

நளன் : ஒளியா துரைப்பேன் மாது

தமயந்தி : அதில் உண்டோ ஏதும் சூது ?

நளன் : ஆம், தேவர்கள் பால் ஒரு தூது

தமயந்தி : அவர் பால் வந்தது ஏது ?

நளன் : மன்னர் மகள் மானே இம்
மன்னன் எழுந்தேனே
என்னுரை யாதென் றிகழேல்
சொன்னபடி கேட்டு-அப்
பொன்னுட்டைக் கூட்டு-உன்
மென் மாலையைச் சூட்டு— மன்னர்

தேவர் பொருட்டு நின் பால் தூதாக வந்தேன். என்னுரையை இகழாது விண்ணவர்க் கிறைவனை இமையவரில் ஒருவனை மணந்து புகழுடைவாயாக!

தமயந்தி : வெற்றி மாலை வேந்தே-பி
தற்றி மொழியேனே.
சுற்றிச் சுயவரம் நாட்டப்
பெற் றிருப்பது தானே-வெண்
கொற்றக் குடையோனே-நீர்
வெற்றி யுறத்தானே— வெற்றி

வெற்றிமாலை யுடைய வேந்தரே!

இத்துணை வைபவங்களுடன் நாட்டப் பெற்றிருக்கும் சுயவரம் நும் பொருட்டென்றே நினைக-வெண் கொற்றக் குடையோரே! என் மண மாலையை விரும்பி வந்த தேர் வேந்தரோடு நீரும் எழுந்தருள்வீர். உம்மைத் தூதாக ஏவிய அத் தேவர்களும் நாளைக் காலையில் சுயவர மண்டபத்திற்கு வருவார்களாக!

(மயங்கி விழுகின்ருள். தாதிப்பெண்கள் வீசுகின்றனர், தண்ணீர் தெளிக்கின்றனர்)

## VI காட்சி

### சுயம் வர மண்டபம்

(மண்டலாதிபரும் விண்டலாதிபரும் குழுமினர். தமயந்தி தாதியர் சூழ மாலையேந்தி வருகின்றனள். வாத்தியம் முழங்க தாதி அரசரை அறிமுகப் படுத்துகின்றனள்)



தாதி : 1. வேற்றரசரை வீழ்த்துதற்கேதுவான வேலாயுதத்தை யுடைய சோழ நாடனிவர்.
2. பாருட் பருத்த மேருவை பண்டொருகால் நிலைகுலைந்து பெயரச் செய்த பாண்டிய நாட்டரசனிவர்.
3. அருவிபாயும் பெருமை பொருந்திய குடநாடன் கொடியில் சிலை வடிவம் ஒற்றப் பெற்ற சேரன்.
4. இவர் மந்திர நாட்டரசர்.
5. மச்ச நாட்டரசர்.
6. அவந்தி நாட்டரசர் இங்குளர்.
7. இவரோ தேன் பாயும் பாஞ்சால மன்னன்.
8. ஆமை முதுகில் அரிவாள் தீட்டும் கோசல நாட்டரசரன்றே?
9. எண்டிசையில் போர்வேந்தர் கண்டறியாப் பொன்னுவம் பின்னுடைய தேர் வேந்தர் கண்டாயிச்சேய். இவர் மகதத் தேசத்தரசனுவர்.
10. அங்க நாட்டதிபன்.
11. கலிங்க நாட்டதிபன்.
12. கேகய நாட்டதிபன்.
13. காந்தார தேசத்தரசன்.

தமயந்தி : அதோ, அங்கு வேறு நால்வரும் நளனுருவில் நன்கனம் வீற்றிருக்கின்றனர். இவ்வைவருள் யான் விரும்பிய நளன் யாவரோ ? எவ்வாறு யானவரைத் தெரிந்து மாலையிடுவது ?

(ஜெப நிலையில் நின்று பிரார்த்திக்கின்ருள்)

கன்னிக் கருள் செய் கர்த்தனே—கடிமாலை
அன்னம் முன்னே சொன்ன மன்னவனுக்குச் சூட்டக்
கன்னிக் கருள் செய் கர்த்தனே—மென்மாலை
அன்னம் எனக்குச் சொன்ன மன்னவனுக்குச் சூட்டக்—கன்னிக்

1

முன் னிருப்பாரில் நால்வர் பொய் யுரு வானதால்
இன்னு ரம் மன்னவர் என் றுணராததால்
மின்னுந்தார் வீமன் றன் மெய் மகளானதால்—கன்னிக்

2

விண்ணவர் யாவரும் வெட்கியே வாடிட
மண்ணரசரில் மற்றோர் வன்மாலை சூடிட
கண்ணகல் ஞால முளோர் களி கூர்ந்திட—கன்னிக்

3

கண்ணிமைத்தலா லடி காசினி தோய்தலால்
வண்ண மலர் மாலை வாடி யுதிர்தலால்
எண்ணி நளனிடம் ஏகி வருதலால்—கன்னிக்

## நளனுக்கு மாலை யிடுதல்

(நளன் எழுந்து கைகோத்து இருவருமாய் எதிரில்வந்து நிற்கின்றனர்)

(நளன் தமயந்தி வீற்றிருக்கத் தாதிப் பெண்கள் மலர் தூவ, மற்றவ ரனைவரும் பின்பக்கம் நிற்கின்றனர்.)

### மங்களம்

மங்களம் சுப மங்களம்—மணாளருக்கு
மங்களம் சுப மங்களம்.

1

சிங்காதன ஞகத்தும் செந்திரு தமயந்தி
அங்கத்தினும் உருவ மன்மதன் அம்பெய்தான்—மங்

2

புனற்கே புனற் கலந்தாற் போன்றே இப் பூவுலகில்
கனற்கேயும் வேலானும் காரிகையும் சேர்ந்தார்—மங்

3

இருவர் தோற்ற மின்றி இதயத்தில் இருபேரும்
ஒருவராய் கூடிட உடலும் உயிரும்போல்—மங்

4

தையல் தளிர்க்கரம் தன் தடக்கையாற் பற்றி நளன்
வையம் முழுதும் எங்கும் மகிழ் தூங்க மணஞ் செய்தான்—மங்

5

ஜோடி யிவரைப்போல் நாடெங்கும் காணோமென்று
கோடி மயி லினங்கள் ஓடி நடித்திடவே—மங்

6

வெற் பொழிந்தாலு மிவர் நட் பொழியாது வென
கற்புடை கன்னியரும் கரகோஷம் செய்திடவே—மங்

7

உல்லாசமாய் இவர்கள் உலாவப் போகும் பொழுது
நல்லார் பொல்லார் எல்லாரும் நமஸ்காரம் செய்திடவே—மங்

T. A. Fenn.

---

" செய்யுங் கடமையைச் சீராய்ச் செய்
செய்யுஞ் சக்தியை அறிவது மெய் " —Goethe

" கீழ்ப்படிதலின் அவசியம்
கீழடக்குதலின் இரகசியம் " —Carlyle.



# பிரீதிக்குப் பிரீதி

S. V. ANANDAN.

சத்திய புரியில் ஒரு திருவிழா நடந்தது. மூன்றும் நாள் கூட்டம் ஏராளம் ரெயில்வே ஸ்டேஷனில் வேலை யதிகம். டிக்கெட் வாங்குகிறவர்களும், விபரம் விசாரிக்கிற வர்களும் கொடுத்த தொந்திரவும் மிகுதி. ஆட்கள் பொறுமையைக் கையாடுவது கூடாத காரிய மாயிருந்தது. எனினும் உத்தியோகஸ்தரிடம் முறு முறுத்துக் கோபப்பட்டுப் பேசின ஆட்கள் அங்கு வேலை செய்யும் ஒரு பையனிடம் வந்தபோதோ மனநிலை மாறி இன்பமாய்ப் பேச ஆரம்பித்தனர். அந்தப் பையனோ மிகவும் சுறு சுறுப்புள்ளவன். எவருடைய பிரியத் தையும் கவரும் இயல்பு வாய்ந்தவன். சதா சந்தோஷமாகவே யிருப்பான். அவனுக்கு வயது பத்து. கூலினோர் ஏவின வேலை செய்யும் கூலிப் பையன். சுத்த உடையினன். கந்தையாயினும் கசக்கிக் கட்டிக் கொள்வான். அழிந் ததவாதெனும் கிழிந்த துணியையும் தைத் துடுத்துவான் கண்டவர் களிப்புறக் கைவேலை செய்வான். பிறர் பால் பிறக்கும் பெருந்தன்மையைப் பெரி தாகக் கருதுவான். ஆனதுபற்றி அவனுக்குப் பிறர் பாற் பிரீதியுண்டாயிற்று. பெரியார் பிரீதிக்கும் உரியான் ஆயினன்.

" அவர் அன்புக்கு என்ன ஈடு செலுத்துவேன். எனக்கு அவர் எவ்வளவு கொடுத் திருக்கின்றார் பாருங்கள் " என வியந்து கூறுவான்."

" நீ எவ்வளவு பெரிய சுமையை எடுத்துக் கொண்டு போனாய்." என்று ஒருவர் சொன்னபோது, ராஜா " நான் ஒன்றும் கேட்காமலே அவர் கொடுத்தது அவருடைய பிரியத் தைக் காட்டுகின்றதல்லவா ?" என்றனன்.

வீதியிற் சில காரியங்களைக் கண்டு, மகிழ்ந்து, சத்தமிட்டு சிரித்தனன்.

" அதோ, திருவிழாவிற்கு தனவந்தர் ஒருவர் யானைமேலேறி வருகின்றார். அவர் பின்னால் ஒட்டகத்தின் மேல் ஒரு போலீஸ்கார னிருக்கின்றான். வண்ணான் மகன் கழுதைக்குப் பின்னால் வருவதைப் பாருங்கள். மோட்டார் வண்டியும் கழுதைக்கு முந்திப் போகலாம் என்று



எண்ணி சத்தங் கொடுக்கின்றது. இப்பெரும் பவனியில் சேர கழுதைக்கு வந்த பெருமை என்ன என்று திட்டுகின்றது." என்று ராஜா சொன்னான்.

மோட்டார் வண்டி ஸ்டேஷன் பக்கத்தில் வந்து நின்றது. ராஜா அளவுள்ள பையன் அதிலிருந் திறங்கினன். அழகிய விலை யுயர்ந்த உடை உடுத்தியிருந்தனன். பொன் ஆபரணங் களும் அணிந்திருந்தனன். அழ கிருந்தும் அகத்தில் ஆனந்தமில்லை. அவன் பெயர் சுந்தர். அவன் தந்தை பக்கத்து ஊரில் உள்ள பெரியவர்.

ராஜா அவ்விடம் ஓடி சாமான்களை இறக்கி வைப்பதில் உதவி செய்தனன். சுந்தர் கழுதையைத் திட்டினன். ஒட்டகம், யானை ஒன்றும் அவனுக்கு விருப்பமில்லை. ஏனெனில் மோட்டார் வண்டி அவைகள் விலகுவதற்காகக் காத்திருக்கவேண்டிய திருந்தது. இந்தப் பாதை வழியாய் வண்டியைக் கொண்டு வந்த டிரைவர் மீதுங் கோபங்கொண்டு அவரை அடித்தனன். தொண்டை கிழியக் கத்தினன். தூசும் அவனுக்கு வெறுப்பாயிருந்தது. பெற்றோரும் என்ன செய்வது என் றறியா திருந்தனர்.

சுமையைத் தலையில் எடுத்துக் கொண்டு சுந்தரிடம் சென்று "உனக்குப் பாடும் சக்தி யுண்டு. நல்ல தொனியிருக்கின்றது நாடகம் போடலாமா?" என்றழைத்தனன்.

சுந்தர் ராஜாவை மேலும் கீழும் பார்த்தனன். கூலிப் பையன் தன்னுடன் இவ்வளவு தூரம் பேசினது விருப்பமில்லை யாயினும் அவன் சொன்ன வார்த்தைகள் தன் மீது அவனுக் கிருந்த பிரீதியை வெளியாக்கிற்று. நாடகத்தில் பாட அவனுக்குப் பிரீதியுண்டு. ஆகையால் ராஜாவின் பேச்சைக் கேட்க ஆசைப்பட்டான்.

"எனக்கு நல்ல பாட்டுகளெல்லாம் தெரியும். நீங்கள் போகும் வண்டி போய்விட்டது. அடுத்த வண்டி வரும் வரையில் அவற்றை யுனக்கு சொல்லிக் கொடுப்பேன். இன்னும் பன்னி ரண்டு மணிநேரம் இருக்கின்றது. ஒரு நாடகம் போடலாம். நீ பாடலாம்." என்று சுந்தரைக் கூட்டிச் சென்றனன்.

பெற்றோருக்கு பெரிய விடுதலை. தனவந்தராயினும் மனச் சந்தோஷங் கிடையாது. சுந்தர் அவர்களுக்கு ஏக சுதன். செல்லமாய் வளர்க்கும் மகன். சிறுவர் இருவரையும் பெற்றோ ரிருவரும் கவனித்தனர்.

ஏழைப் பையனாயினும் அச்சிறுவன் நல்லபையன். சுத்தமான உடை நடை யுடையவன் என்று சொன்னதற்குத் தாயாரும் சேர்ந்து என்ன அருமையான பையன்! அவ்வாறு பிறருக் குதவும் பெருந் தன்மையும், மலர்ந்த முகமும், மனிதர் மேல் பிரியமும் சுந்தருக்கு உண்டானால் எத்தனை இன்பமா யிருக்கும்!" என்றனள்.

தாயாரை அவ்விடத்தில் உட்கார வைத்து விட்டு தந்தை ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்று அப்பையனைப் பற்றி விசாரித்தனர். அப்போது அந்தப் பையன் எதிரில் உட்கார்ந்து பிறருக் குதவி செய்த பெரியாரைப் பற்றிய பாட்டு ஒன்றை சுந்தருக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தனன். அதற்கு ஸ்டேஷன் மாஸ்டர் "அந்தப் பையனா? ராஜா ஒரு நல்ல பையன். உங்கள் மகன் அவனோ டிருப்பதைப் பற்றி அஞ்சவேண்டாம். ஏழை யாயினும் பெருந் தன்மை யுள்ள குலத்தி லுதித்தவன். அவன் தாயார் எவ் வேலையாயினும் செய்வாள். ராஜா இங்கு கூலி வேலை செய்கின்றனன். இங்குள்ள உத்தியோகஸ்தர் நேரங் கிடைக்கும் போதெல்லாம் அவ னுக்குக் கற்றுக் கொடுக்கின்றனர்" என்றனர்.

"முக மலர்ச்சியுள்ள பையனாகவே காணப்படுகின்றனன்" என்று தந்தை சொன்னார்.



ஸ்டேஷன் மாஸ்டரும் "அது உண்மையே. பிரீதிக்குப் பிரீதி எனும் பிரமாணங் கொண்டவனாகவே விளங்குகின்றனன். பெரிய வேலையையும் பிரீதியோடே செய்கின்றனன். கஷ்டமான வேலையையும் இஷ்டத்தோடே செய்கின்றனன். இங்கு வேலை செய்வோர் அனை வரையும் சீர்ப்படுத்தக் கூடியவனா யிருக்கின்றனன். தன் தாயார் தனக்குக் கற்பித்தபடி ஜனங் கள் முகக் கண்ணாடிகளாம். அக்கண்ணாடிகளிடம் புன்சிரிப்புடன் போனால் புன்சிரிப்பு தோன்றுமாம். வெறுப்புக்கு வெறுப்பு, விருப்புக்கு விருப்பு, கோபத்துக்குக் கோபம், பிரீ திக்குப் பிரீதி கிடைக்குமாம். ஆகையால் மற்றவர்கள் தன்னோடு பிரியமாயிருக்கும்படி தான் மற்றவர்களுடன் பிரியமா யிருக்கின்றானாம்" என்று கூடினார்.

"அது ஒரு நல்ல பிரமாணம் என்று எண்ணுகின்றேன்" என்றனர் தந்தை.

"ஆம். அதின்பலன் விளங்குகின்றது. உத்தியோகஸ்தரில் அனேகர் அதைக் கொண்டு செலுத்துகின்றனர். அதின் பலனை அடைந்து வருகின்றனர். பட்சமாய்ப் பேசு கின்றவர்கள் வரும்போது பெரும் வேலையின் பாரமும் தோன்றாமல் மறைகின்றது" என்று ஸ்டேஷன் மாஸ்டர் கூறினர்.

தாயாரிடம் சென்று தந்தை தான் கேட்டதைக் கூறினர். பிறகு மகனைக் கவனிக் கும்படி அங்குமிங்கும் உலாவினர். தன் மகன் பட்சமான பதங்களை உபயோகித்து விளையாடு வதைக் கண்டு அதிசயம் பூத்தனள். பையன்கள் வழிப் போக்கரைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தனர். பட்சமான காரியம் செய்பவர் யாவர் எனக் கவனித்தனர்.



"அந்தப் பணக்காரன் எவ்வளவு நல்லவன்! புன்சிரிப்புடன் அப்பையனிடம் பேசி அவனுக்குப் பசியாற்றப் பணங் கொடுக்கின்றான் பார்" என்று ராஜா சொல்லும்போது, தன் தாயாரோடு கை கோத்துப்போன பிள்ளைகளுக்கு இடங் கொடுக்கும்படி அந்தத் தொந்தி பெருத்த மனிதன் விலகினன். தெருப் பெருக்குகின்றவன் ஆள், பார்த்து வேலை செய்தனன். இடுப்பிலுள்ள குழந்தைக்கு வெயில் படாமல் தடுக்கின்றாள் அத் தாயார். பொதி சுமந்து செல் லும் வண்ணான் முன் செல்லும் மனிதன் தவற விட்ட கைக்குட்டையைக் குனிந் தெடுத்துக் கொடுக்கின்றனன். நாக்கை நீட்டிக் கொண்டலையும் நாய்க்கு தாக சாந்தி செய்கின்றார் ஒருவர்.

"ஜனங்கள் இவ்வளவு பிறர்பால் பட்சமாயிருப்பார்களென்று நான் கவனித்ததே யில்லை" என்று தந்தை சொன்னதற்குத் தாயார் பிரதியுத்தரமாக "வண்டி தவறி பன்னிரண்டு

மணி நேரம் காத்திருப்பதற்காக எனக்கு விசனமேயில்லை. பிரீதிக்குப் பிரீதி என்னும் பாடம் சுந்தர் கற்றுக் கொள்ளட்டும்'' என்றனள்.

பையன்களிருவரும் தங்கள் பாட்டைப் பெரியாருக்குப் பாடிக் காட்டினர். ராஜாவிடம் அமைதலாய் சுந்தர் கற்றுக்கொண்டது பெரும் வியப்பை யளித்தது. அப்பையனைத் தந்தை தங்களோடிருக்கும்படி கேட்டுக் கொண்டனன். தாயாரிடம் உத்தரவு கேட்டு ரெயில் வண்டி வரும் வரையிலிருப்பதாக ராஜா வாக்குப் பண்ணினன்.

மறுபடியும் இருவரும் விளையாடும்படி சென்றனர்.



அங்குமிங்கும் திரும்பாமல் எதிரில் எத்தனை அழகான காரியங்களிருக்கின்றனவென் றறியப் பிரயாசப்பட்டனர், இவ்விரு பையன்களும். புஷ்பங்களின் வர்ணத்தையும், புற்றரையின் பசுமையையும், ஆட்களின் ஆடை ஆபரணத்தின் அழகையும் வர்ணித்துப் பேசினர். அழகான தொனிகளையும் கவனித்தனர். மலர்ந்த முகங்களையும், சிறந்த கிரியைகளையும் பற்றிப் பேசினர். கொஞ்ச நேரம் ராட்டின மாடப் போயினர்.

ஆறு மணிக்கு ராஜாவின் தாயார் மகனை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டுபோக வந்தனள். அப்பொழுது சுந்தரின் பெற்றோர் அவளை நோக்கி தன் மகனுடன் தங்கள் வீட்டிற்கு வந்து உதவிசெய்ய முடியுமா என்று கேட்டனர். ராஜாவும் சுந்தரும் விளையாடலாம். சேர்ந்து பள்ளிக் கூடம் போய்ப் படித்து வரலாம். நல்ல சம்பளம் பெறலாம்'' என்று சொன்னபோது நன்றியோடு ராஜாவின் தாயார் சம்மதித்தனள்.

“நாங்கள் உனக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம். உன் மகனுடைய நற்குணத்தை சுந்தர் கற்றுக்கொள்ள கூடுமானால் அதுவே போதுமானது. வேறு செல்வம் வேண்டாம். அவனுக்கு நல்ல பயிற்சி கொடுத்திருக்கின்றாய்'' என்று சுந்தரின் தாயார் மெச்சிப் பேசினள்.

“வெள்ளியும் பொன்னும் என்னிட மில்லை. பிறர்பால் காணப்படும் அழகு, அன்பு முதலிய, நற்காரியங்களைக் கவனிக்கும்படி பழக்கி யிருக்கின்றேன் என்றனள் ராஜாவின் தாயார்.

“உண்மை யுள்ளவைக ளெவைகளோ, ஒழுக்க முள்ளவைக ளெவைகளோ, நீதி யுள்ளவைக ளெவைகளோ, தூயவைக ளெவைகளோ, அன்புக் குரியவைக ளெவைகளோ, நற்கீர்த்தி யுள்ளவைக ளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக்கொண் டிருங்கள்.''

——: o :——



# களிப்பு அளிக்கும் காஷ்மீரத்துப் பள்ளத்தாக்கு

இமயமலைச் சரிவுகளில் எண்ணிறந்த பள்ளத் தாக்குகளுண்டு. அவைகளுள் காஷ்மீரம் ஒன்று. பஞ்சாப் நாட்டிலிருந்து வட கிழக்காய் பிரயாணம் செய்வோமானால் உயரமான பர்வதங்கள் எங்கும் ஓங்கி நிற்க, அழகிய சிறு நாடு காணப்படும். இந்த பள்ளத்தாக்கு ஒரு காலத்தில் ஒரே ஏரியாக இருந்தது. ஜீலம் நதியின் பெருக்கே இவ்வேரி. தற்காலம் ஏரி மண்ணினால் நிரம்பி ஆழமான செழிப்புள்ள வண்டல் தரையாக மாறி இருக்கிறது. பழைய ஏரியில் ஒரு பாகத்திற்கு ஒல்லூர் ஏரி எனவும் பெயர் வழங்கி வருகிறது. இதுவே இந்தியாவின் சுத்த ஜல ஏரிகளில் பெரியது.



காஷ்மீரத்து ஏரி

சுற்றிலும் பனி கட்டிகளால் சூழப்பட்ட இந்நாட்டின் தலைநகர், ஒரு திலகமென கண்ணை கவரத்தக்கதாய் ஜீலம் நதிக் கரையில் ஸ்ரீ நகர் என நாமத்துடன் நிற்கிறது. பட்டணத்தின் உள்ளும் வெளியிலும் கால்வாய்கள் நிறைந்துள்ளது. ஜனங்கள் வனப்பிலும் வேலையிலும் திறமையுள்ளார். காஷ்மீர சால்வைகளை நெய்கின்றவர் இவரே. இவ்வூர் ஆட்டின் ரோமத்தால் அவ்வளவு சிறந்த உயர்வுற்ற போர்வை கிடைக்கிறது. பட்டு, ஜமுக்காளம், காகிதம் செய்யும் கைத்தொழில்கள் நடைபெற்று வருகிறது. அழகான மசூதி ஒன்று ஏரிக்கரையில் இருக்கிறது. ஜீலம் ஆற்றின் மேல் ஒரு நல்ல பாலம் பார்க்கலாம்.

காஷ்மீரத்தில் லே என்ற பட்டணம் மிகவும் உயரத்திலிருக்கிறது. அது ஒரு வியாபார ஸ்தலம். இப்பட்டணங்களும் சிகரங்களும் யாவரின் கண்களை இழுக்கத்தக்க அழகுடையவை. எவ்வளவு பாடு பட்டாகிலும் இவ்வுயர்ந்த சிங்கார வனங்களைப் பார்த்து, மனமகிழ்ச்சியடைய பிரயாசை எடுக்க வேண்டும். இவை கடவுளின் இயற்கை அமைப்பின் சிறப்பை எடுத்து காட்டும் விநோதங்கள்.

இந்நாட்டின் நீளம் சுமார் 100 மைல். அகலம் 25 மைல். சிந்து, ஜீலம், ஜம்மு முதலிய நதிகள் நீர் பாச்சும் பூமி. ஜனத் தொகை சொற்பம். காஷ்மீரம் கடல் மட்டத்துக்கு ஐயாயிரம் அடி உயரத்திலிருக்கிறது. அங்கு கோடையிலும் மாரியிலும் சீதோஷ்ண நிலை இன்பகரமாயிருக்கும். ஐரோப்பியரும் இந்தியரும் போக மிக்க ஆவலுடன் நிற்கிறார்கள். இவ்விடத்து சமுசாரிகள் முதல்தரமான பலவித கனிகள் ஈயும் தோட்டங்களை வைத்து ஜீவனம் செய்கிறார்கள். இவ்விடத்து சீதோஷ்ண நிலையே இப்பழங்களுக்கும், அழகிய புஷ்பங்களுக்கும் காரணமாகும். நமது பழக் கடைகளில் காஷ்மீர ஆப்பிள் பழங்கள், முந்திரி பழங்கள் ஏராளம். ஆனால் தென் இந்தியாவைப் போல விஸ்தாரமான பூமி பயிரிட கிடையாது. சொற்ப நிலத்தில் மாற்றி, மாற்றி பலவிதமான பயிர்கள் பயிரிட வேண்டியதாகிறது.

இவ்விடத்தில் நமக்கு தெரியாத ஆச்சரியமான தோட்டங்கள் காணப்படுகின்றன. சமுசாரிகள் ஆற்றின் அல்லது ஏரியின் வளரும் ஒருவித நாணல்களைச் சேர்த்து முடிந்து அடியில் அறுத்து விடுவார்கள் பின்பு அதின்மேல் மண்ணைப் போட்டு, சிறு தோட்டமாக்கி, பத்திகள் பிரித்து, வெள்ளரி, தர்பூஸ் இன்னும் அநேக பயிர்களை முளைக்கப் போடுவார்கள். விதை முளைத்து வளர்ந்து நல்ல கனி கொடுக்கிறது. ஆகவே தோட்டங்கள் ஏரிகளில் மிதக்கும். இத்தோட்டங்களில் பயிர் பச்சை செழித்து வளரும். தோட்டத்தில் கொடி செடிகள் படர்ந்து கிடப்பதையும், செடியின் மத்தியில் சமுசாரி உலாவுவதும், காய்கனி சேர்ப்பதும், படகு போல் அவைகள் மிதப்பதும் எவ்வளவு விந்தை! சில சமயம் சமுசாரியின் சத்துரு தோட்டத்தை படகுபோல் ஓட்டவும் கூடும். ஆனால் அங்கங்கே கம்பு கழிகளில் செடிகளை கட்டி வைப்பார்கள்.

சரித்திர சம்பந்தமாகவும் இந்நாடு மாட்சிமை பொருந்தியதே. மொகலாய அரசனாகிய ஜீகாங்கியரும் தம் மனைவி நூர்ஜஹான் என்னும் அம்மையாரும் அங்கு சென்றதாகவும் அந்த ராணியார் ஒரு அழகிய சோலை உண்டாக்கி பலவித உயர்ந்த ஜாதி மரங்களை அதிக ஒழுங்காய் வைத்து செழிப்பான சிங்கார வனம் உண்டாக்கினதாகவும் பேச்சு. இப்போது அச்சோலை சரியான நிலையில் இல்லையாம்.

இன்னொரு மசூதி பஞ்சாப்பிற்கும் காஷ்மீரத்திற்கு மிடையிலுள்ளது. அது மகம்மதியரின் புண்ணிய ஸ்தலம். மகம்மது நபியின் ரோமம் ஒன் றிருப்பதாக வதந்தி. காஷ்மீரத்து மலைகளின் மேல் வெயிற் காலம் நடந்து திரிந்தால் ஒரு விசேஷித்த அனுபவம் நமக்குக் கிடைக்கக் கூடும். கால்பட்ட இடமெல்லாம் தாங்கற்கரிய குளிர் உண்டாகும். அதே சமயத்தில் மேக மந்தாரமில்லாதபடியால் சூரியன் தன் கதிர்களை நம்மேற் ஓங்கி வீசும்.

—— ——: o :—— ——

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.



# ரபீந்தரநாத் டகோர்

## இந்திய கவிச் சக்கரவர்த்தி

MARCUS SRINIVASAN.

இந்தியாவி லுதித் திருக்கும் ரபீன்தரநாத் டகோர் இப்போது உலகில் தோன்றியிருக்கும் சிறந்த கவிஞருள் ஒருவர். 1861௵ மே௴ 6௳ கல்கத்தாவில் பிறந்தவர். வங்காள தேச வாழ்க்கையில் பெரும் செல்வாக்குச் செலுத்திய பேர்பெற்ற குலத்தில் தோன்றியவர். இளவரசு துவாரகநாத் டகோரின் பேரனிவர். தேபேந்திரநாத்தின் புதல்வர். இவரது முன்னோர் மார்க்க சமுதாய சீர்திருத்தஞ் செய்வதில் பேர்பெற்றவர். இவரது தந்தை ஒரு சிறந்த பக்தன். மகாரிஷியென அழைக்கப்பட்டவர். தன தந்தை பட்ட கடனைக் கொடுத்துத் தீர்த்த பின் பொருள் சேர்த்தவர். அவரது மக்கள் பேர்பெற்று விளங்கினர். ஒருவர் தத்துவ சாஸ்திரியானார், ஒருவர் சித்திரக்காரரானார். ஒருவர் பெரிய உத்தியோகம் வகித்தனர். ரபீன்தரநாத் பிறந்த வீட்டில் கலைமகளும் திருமகளும் குடிகொண்டிருந்தனர்.



இவரது பெற்றோர் இவர் இளம் பிராயமா யிருந்தபோதே உயிர் துறந்தனர். பட்சமுள்ள பணியாளரால் பராமரிக்கப்பட்டனர். பள்ளிக் கூட ஜீவியத்தை அவர் விரும்பவேயில்லை.

இவர் சுய முயற்சியால் கல்வி கற்றவர். சுற்றுப்புரத்தின் உதவியாலும் கற்ற மற்றவரின் சேர்க்கையாலும் ஞான மடைந்தனர்.

சிறு வயதிலேயே கவி கட்டுவதற்குத் தூண்டப்பட்டனர். சகோதரர் உதவி புரிந்தனர் சங்கீதமும் நாடகமுமுள்ள சுற்றுப்புரத்தில் வளர்ந்தனர்.

சிறுபிராயத்தில் இவர் கல்வி கற்பதற்கு ஏற்ற பயிற்சி இருந்தது. தன் தந்தையுடன் இமயமலை யடிவரை சுற்றுப் பயணம் செய்திருக்கின்றனர்.

இக்காலத்திலேதான் இவர் கவி கட்டப் பழகினது. இவர் பதினைந்து வயதுப் பையனா யிருந்தபோது தன் சகோதரன் பிரசுரித்த பாரதி என்னும் பத்திரிகையில் தன் கவிகளை வெளிப்படுத்தினார். ஆதியில் கவி யுருவத்தில் கதைகள் எழுதினார்.

1877ஆம் செப்டெம்பர்மீ இவர் இங்கிலாந்துக்குப் போனார். அங்கு அவர் சந்தோஷமாய்க் காலம் கழிக்கவில்லை. 18 வயதில் அவர் திரும்பின பின் "பிளந்த இருதயம்" என்ற கவி நாடகம் எழுதினர். இன்னும் அநேக கவிகளும் வெளிவந்தன.

24 வயதில் தன்னை அதிகமாய் நேசித்து கவனித்து வந்த மதினியார் இறந்துபோனதால் மிகவும் துக்கத்துக் குள்ளானார். இதுதான் அவர் துன்பத்தின் ஆரம்பம். அக்காலத்தில் அவர் அநேக கவிகள் எழுதினார். பின்னால் நாடகம் எழுதினார். 'சித்திராங்கதா' அவற்றுள் விசேஷித்தது.

இவர் 'சாதனா' எனும் மாதப் பத்திரிகை ஒன்று வெளியிட்டனர். "இந்திய அரசியல் சம்பந்தமான சீர்திருத்தங்களுக்கு இவரே ஆதி காரணர். அநேக தேசிய இயக்கங்கள் இக்காலத்தில் உதயமானது" என இவரைப் பற்றி சொல்லப்படுகின்றது.

1895ஆம் இவர் அரசியல் சம்பந்தமாய் தமது அபிப்பிராயத்தை வெளியிட ஆரம்பித்தனர். முற்கால இந்தியாவின் நற்காலத்தை ஞாபகப்படுத்தினர். 'காசினி கதா' எனுங் கவியில் சரித்திரக் கதைகளை எழுதினர். 'சாந்தினிக்கெதன்' எனும் பாடசாலையை ஏற்படுத்தினர். இயற்கை யழகின் மூலமாய் இயற்கையின் கடவுளைக் காணும் முறையைக் கையாடினர்.

இருபதாம் நூற்றாண்டில் நவீனம் எழுத ஆரம்பித்தனர். சிலகாலம் அரசியல் சம்பந்தத்தை யகற்றி சாந்தினிக்கெதனுக்குச் சென்று தனித்தியான ஜீவியம் செய்தனர். அவ்விடத்தில் அநேக புஸ்தகங்கள் எழுதக் கூடியவ ரானார்.

உலக பிரசித்தி பெரும்படியாக எழுதின புஸ்தகம் 'கீதாஞ்சலி' என்னும் கவி பாலை. மூன்றாம் முறை இங்கிலாந்துக்குச் சென்றபோது கீதாஞ்சலியைத் தாமே மொழி பெயர்த்துக் கொண்டு போயிருந்தனர். அங்கே அவரது சகோதரனின் சிநேகிதர் அதைப் படித்துப் பார்த்து பலரும் பயன் பெறுமாறு பிரசுரித்தனர். அதனால் உலகமெங்கும் புகழ்பெற்று விளங்கினர். இவர் அமெரிக்காவுக்கும் சென்று திரும்பினர். 1913ஆம் நோபல் வெகுமதிக் குரியவரானார்.

அது முதல் அவர் உலகுக் கூழியஞ் செய்யக் கூடியவரானார். பிரிட்டிஷ் சர்க்கார் அவருக்கு ஒரு கௌரவப் பட்டம் கொடுத்தனர். கல்கத்தா சர்வகலாசாலை அவருக்குப் பண்டிதர் பட்டம் அளித்தது. 1916ஆம் ஜப்பான் தேசம் சென்றனர். அங்கிருந்து அமெரிக்கா ஐக்கிய மாகாணஞ் சென்றனர். விசேஷமாய் ஆள் தத்துவத்தைப் பற்றி அங்கு பேசினர்.



1917 ஆம் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தனர். இரு வருஷங்களுக்குள் அம்ரிட்சாரில் அமளி அதிகம். இரக்கமில்லாமல் ஜனங்கள் சர்க்காரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். வைஸ்ராயிக்கு ஒரு கடூரமான கடிதம் எழுதித் தனக்குச் சர்க்கார் அளித்த கௌரவப் பட்டத்தையும் வேண்டாமென்று தள்ளிவிட்டனர்.

இவர் தேசாபிமானியாயினும் ஒத்துழையாமையை ஒரு முறையாகக் கையாடினவரல்ல. மகாத்மா காந்தியின் கொள்கைக்கு இணங்கவில்லை. இவர் தேசாபிமானி; அரசியல் வாதியல்ல.

1920 ஆம் இங்கிலாந்துக்குப் போய், பிறகு பிரான்ஸ், அமெரிக்கா முதலிய இடங்களுக்குச் சென்று திரும்புகையில் டென்மார்க், ஸ்வீடன், ஜெர்மனி வழியாய் வந்ததனலாய் சாந்தினிக்கெதனில் சர்வலோக கலாசாலை ஏற்படுத்தும் எண்ணம் உதித்தது. 'விஸ்வ பாரதி' எனும் நாமத்தில் 1921 ஆம் டிசெம்பர் மீ 23உ இந்த இடத்தில் இந்திய சர்வலோக கலாசாலை உதயமாயிற்று. அதன் நோக்கம் மூவகைப்பட்டது:—

சத்தியத்தின் பல அம்சங்களை ஆராய்ச்சி செய்து கண்டறியும் மானிட மனதின் தன்மையைப் படிப்பது ஒன்று; யூதேயா முதல் ஜப்பான் வரையுள்ள கீழ் தேசங்களின் மத ஆராய்ச்சி ஒன்று; மேல் தேச நாகரிகத்தையும் கீழ்தேச நாகரிகத்தையும் வேற்றுமை நீக்கி ஒற்றுமைப் படுத்தும் முயற்சி ஒன்று.

எண்ணங்களிலும் குறிக்கோள்களிலும் சர்வதேச சிந்தை யுடையவர்களா யிருக்கும்படி செய்வதற்கே டகோரின் காலம் செலவிடப்பட்டது.

இக்கவிச் சக்ரவர்த்தி தன் மீதி நாட்களை சாந்திக் குறைவிடமாகிய சாந்தினிக்கெதனில் செலவிடத் தீர்மானித் திருக்கின்றனர். லௌகீக சிந்தையை யொழித்து வைதீக சிந்தையோடு விளங்குகின்றனர்.

———:(o):———

" ஒரு கதவு அடைக்கப்படும்
மறு கதவு திறக்கப் படும் " —Cervantes.

" நேசிப்பாய்; நேசிக்கப் படுவாய்
நேசத்துக்கு எதிர் நேசம் குறைந்ததன்று " —Emerson.

" யோசனை யில்லாக் கல்வி நாசம்
கல்வி யில்லா யோசனை மோசம் " —Confucius

" இன்ன விழைப்பதிலும் இன்னலுறுவது நன்றே
நம்பாதிருப்பதிலும் நம்பிக்கை மோசமடைவது நன்றே " —Johnson

# தொனிப் பெட்டி

இதற்கு குரல்வளை யென்றும் பெயர். குரல்வளை சின்ன சின்ன குருத்தெலும்புகளால் அமைக்கப் பட்டுள்ளது. மானிடருக்கு வயது செல்லச் செல்ல, குரல்வளை குருத்துகள் முற்றி சரியான எலும்பு போலாகுகின்றன. காற்றுக் குழாயின் தலைப்பிற்கு அடுத்து இரண்டு ஜவ்வு மடிப்புகள் வலது இடது பக்கங்களில் உண்டு. இந்த ஜவ்வு மடிப்புகள் ஒன்றுடன் ஒன்று நெருங்குவதாலும், விரிவதாலும் இவைகளின் இடையில் ஓடுகின்ற காற்று இவைகளின்மேல் தாக்குவதால், தொனி உண்டாகின்றது.

## நுரையீரல்

ஆகாயமானது குரல்வளையை கடந்து ஆகாயக் குழாய் வழியாய் சுமார் 4 அங்குல தூரம் செல்லுகின்றது. பின்பு இக்குழாய் இரண்டு குழாய்களாக பிரிகின்றது. ஒவ்வொரு கிளையும் (Bronchus) நுரையீரலின் ஒவ்வொரு பகுதிக்குப் போகின்றது. மறுபடியும் இவை சிறு சிறு கிளைகளாகப் பிரிந்து, நூற்றுக் கணக்கான கிளைகள் நுரையீரல் உள்ளுறைக்குட் பிரவேசிக்கின்றது.

நுரையீரல் இரண்டு பெரிய கடற் பஞ்சுபோலிருக்கின்றன. அதனுள் ஏராளமான காற்று குழாய்கள் நிறைந்திருக்கின்றன. சிவந்த ரோஜா இதழ் நிறமாகவும், தொடுவதற்கு மிருதுவாயும், இருக்கும். ஆகாயம் நிறைய இருக்கும்போது விரியவும், ஆகாயம் வெளியேறும்போது சுருங்கவும் கூடும். நுரையீரலுக்கு வரும் ரத்தம் கருப்பு நிறமாயிருக்கும். ஏனெனில் அதற்குள் கரியமில வாயும் தண்ணீரும் கலந்திருக்கின்றன. இவ்விடத்தில் இரத்தம் பிராண வாயுவை பெற்று, இரத்தம் சுத்திகரிக்கப் பட்டு, இருதயத்துக்குத் திரும்பச் செல்லுகின்றது.

## காற்றுக் குழாய்

நாம் சுவாசிக்கும் ஆகாயமானது நாசித்துவாரங்களைக் கடந்து, தொண்டை வழியாய் ஆகாரக் குழாயினுள் சென்று, இரண்டு மூன்று அங்குலதூரம் சென்றதும், காற்றுக் குழாயினுள் பிரவேசிக்கின்றது. இக்குழாய் கழுத்தின் முன்பக்கத்திலுள்ளது. இதற்குப் பின்னால் ஆகாரக் குழாய் இருக்கின்றது. தண்ணீர் குடிக்கும்போது கழுத்தின் முன்பக்கம் விரலை வைத்து பரிசோதனை செய்யலாம். காற்றுக் குழாய் குருத்தெலும்பு வளையங்களால் அமைந்தது. நாம் உண்ணும் உணவு எல்லாம் தொனிப் பெட்டி (The Voice Box) கடந்துதான் செல்லவேண்டியதிருக்கின்றது. ஏனெனில் காற்றுக் குழாய் ஆகாரக் குழாயின் முன்னுக்கு அமைக்கப் பட்டுள்ளது. நாம் விழுங்கும்போது சதையினாலாகிய ஒரு மூடி நாக்கின் அடிபாகத்திலிருந்து தொங்கிக் கொண்டிருக்கின்றது. ஆகாரம் உட் செல்லும்போது இந்த மூடியானது காற்றுக் குழாயின் பாகத்தை மூடிக்கொள்ளுகின்றது. (இப்பாகம் தொனி உண்டாகும் இடம்) நாம் சுவாசிக்கும்போது இந்த மூடி திறந்து காற்றை உட்செல்ல விடுகின்றது. ஆகையால்தான் ஒரே சமயத்தில் நாம் சுவாசிக்கவும், ஆகாரத்தை விழுங்கவும் முடியாதவர்களாயிருக்கின்றோம்.



சில சமயம் ஏதாவது ஒரு பொருள் [illegible] காற்றுக் குழாயாகிய தொனிப் பெட்டிப் பாகத்தில் சென்று ஆகாயம் உட்புக விடாமல், தடுக்கும்போது, [illegible] அடைத்து மரிக்க நேரிடுகின்றது.

வாயின் வழியாய் மூச்சு எடுப்பது நமக்கு தெரிந்தபடி தொண்டையில் சதை வளரச்செய்யும். சுவாசப் பைகளையும் கெடுக்கும் தன்மை யுடையது. மற்றும் வியாதிகளையும் கொண்டுவரக் கூடியது.



## சாதாரண ஜலதோஷம்

நாசியின் உட்பாக சவ்வுகளில் வீக்கம் உண்டாகுதலே ஜலதோஷம். கிருமிகளால் ஏற்படுகின்றன எனவும் சொல்லலாம். இக்கிருமிகள் ஜலதோஷம் நிறைந்த பிள்ளையின் தொண்டையிலும் மூக்கிலும் நிறைய இருக்கின்றன. இப்பிள்ளைக்கு இருமல், தும்மல் உண்டாகும்போது எண்ணிறந்த கிருமிகள் ஆகாயத்தில் வெளியேறுகின்றன. இப்பூச்சிகள் சுக தேக முள்ள பிள்ளையின் நாசித் துவாரத்தினுள் பிரவேசிக்கின்றன. ஆனால், நாசித்துவார ரோமங்களும், அங்கேயுண்டாகும் பசைபோன்ற வஸ்துவும், அவைகளை உட்புக விடாமல், அகப்படுத்தி, வெளியே தள்ளக்கூடிய சக்தி வாய்ந்திருக்கின்றன. ஆனால் சுக தேக முள்ள பிள்ளை களைப்படைந்திருந்தால் நாசித்துவாரம் தான்செய்யக் கூடியவேலையை செய்யக்கூடாமல் பின் வாங்கிப்போகின்றன. உடனே ஜலதோஷம் உண்டாகக்கூடும்.

மோப்பமும், ருசியும் பௌதிக அல்லது ரசாயன சக்தி வாய்ந்தவை என அழைக்கலாம். நாசித்துவாரத்தின் கடைசி நரம்புகளை ஒரு வஸ்து கிட்டினால் மாத்திரம் நமக்கு ருசியும் மோப்பமும் தெரிய வருகின்றது. வயதுசென்ற காலத்தில் இந்நரம்புகள் தளர்ச்சியடைகின்றன. சில சமயம் பொடிப் போடுவதாலும், நஞ்சு புகையை அடிக்கடி முகர்வதாலும் இந்நரம்புகள் தளர்ச்சி அடையக் கூடியது. நாசியில் ஏதாவது கெடுதி நேரிட்டாலும் முகரும் சக்தி குறைவுபடும்.

நாசியின் அமைப்பில் ஏதாவது குறைவு ஏற்படின், தலைவலி, ஜலதோஷம், தும்மல், படபடப்பு, நீர்வடிதல், இரத்தம் ஒழுகுதல், மோப்பம் குறைதல், ருசி கெடுதல், கண் வியாதி, காது வலி முதலிய வியாதிகள் வரக்கூடியது.

இவ்வகை அமைப்புக் குறைவு சில சமயம் இவ்வுறுப்புகள் சரியானபடி வளராமல் இருப்பதாலும், பிள்ளையை தண்டிக்கும்போது பலமான அடிகள் மூக்குத் தண்டின்மேல் படுவதாலும், பிள்ளை தவறி விழும்போது பலமான அடிகள் ஏற்படுவதாலும் உண்டாகின்றன.



1. நாசியின் உட்பாகம் 2 வாய் 3 நாக்கு 4 வாசல் 5 ஆகாரக்குழாய் 6 சத்தக் குழாய் 7 குரல்வளை 8 ஆகாயக் குழாய் 9 சுவாச அறை 10 ஆகாரக் குழாயின் தொடர்ச்சி 11 ஆகாயக் குழாயின் பிரிவுகள்.

சில வேளைகளில் நாசியின் உட் பாகத்தில் சதை (Polypus) வளர்ந்து, மூச்சு எடுக்கிறதில் கஷ்டம் உண்டாக்கக் கூடியது. இதை டாக்டர் எடுத்து விடக்கூடும். நாசியின் உட்பாகம் மிருதுவான பசை போன்ற சவ்வுகளால் மூடப் பட்டிருக்கின்றன. இந்த உள் ளுறை ஒரு வகை பசையை உண்டாக்கி, நாசித் துவாரத்துள் வரும் கிருமிகளையும் மற்றும் வஸ்துக்களையும், இப் பசையில் சிக்கிக்கொள்ளுமாறு செய்கின்றனவாம், இப்படி ஏதாவது உட்புகுந்தால், நாசியில் நமக்கு கஷ்டம் உண்டாகும். அப்போது, இப்பசை ஏராளமாக வடிய ஆரம்பிக்கும். இதை நாம் நீர் வடிதல் என்கின்றோம். இந்த நீர் வடிதல் நாசித் துவாரத்தில் நுழையக் கூடாதவை நுழைந்தால் வெளியேற்றுவதற்கு உதவும் கருவியாம்.

நாசியானது விசித்திரமாக உண்டாக்கப் பட்டு, தன்னில் உட்புகும் ஆகாயத்தை, தேக உஷ்ண நிலைமைக்குச் சரிப்படுத்தும் தன்மை வாய்ந்தது விநோதமே. உலர்ந்த ஆகாயம் சுவாச அறைகளுக்கு ஏற்றதல்ல. உலர்ந்த ஆகாயம் பசையான நாசித்துவாரங்களை கடந்து செல்லும்போது தனக்கு வேண்டிய ஈரத்தை பெற்றுக் கொள்ளுகின்றது.

## முகரும் சக்தி

ஐம்புலன்களில் ஒன்றாகிய முகரும் சக்தி நாசித்துவாரத்தின் நடுச்சுவற்றிலும் பின் பாகங்களிலும் அடங்கியுள்ளது.

நாம் முகரும் சக்தியை உடைய நரம்புகளை அதிகமாக உபயோகிக்கின்றோம். நமது வாயானது இனிப்பு, புளிப்பு, கசப்பு, எரிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு முதலிய சுவைகளை உணரும் சக்தியுடையது. மற்ற சுவைகளை நாசியின் முகரும் சக்தியால் தான் கண்டு பிடிக்கக் கூடும்,



ஜலதோஷம் இருந்தால் சாப்பாடு நமக்கு வாய்க்கு ருசியாக இல்லை. ஏன்? முகரும் புலன் தன் வேலையை செய்யக் கூடவில்லை.

## நுரையீரல்



1. காற்றுக் குழாய், 2. தொனி உண்டாகுமிடம். 3. ஆகாயம் நுரையீரலுக்குச் செல்லும் வழி. 6. காற்றுப் பைகள். 7. இரத்த நரம்பு. 8. இருதயம். 9. சுத்த இரத்தம் ஓடும் நாடி 10. நாளங்கள். 11. டையாப்ரம். இடைச்சுவர்.

## நாசி

நமது நாசித்துவாரங்களில் புகுந்து செல்லும் ஆகாயமானது தூசு படிந்ததாயும், கிருமிப் பூச்சிகள் நிறைந்த தாகவுமிருக்கின்றது. இன்னும் சில சமயம் அதிக உஷ்ணமாயும், அதிக குளிர்ந்த தாகவுமிருக்கின்றது. சில சமயம் உலர்ந்த தாகவும் மிகவும் ஈரமுள்ள தாகவு மிருக்கின்றது. இப்படிப்பட்ட ஆகாயம் நமது சுவாச அறைகளில் செல்ல தகுதி அற்றவை. நமது மூக்கு விசித்திரமாக உண்டாக்கப்பட்டு ஆகாயத்தின் தன்மையை மாற்றும் சக்தி வாய்ந்திருக்கின்றன. ஆகாயம் சுவாசப் பைகளில் செல்லும்போது தூசு, கிருமி, முதலியவை இல்லாமலும் நமது தேக உஷ்ணத்திற்கு ஒத்ததாகவும் இருக்கின்றது. நமது நாசித்துவாரங் களில் இருக்கும் ரோமம் வடிகட்டுங் கருவிபோல் உழைக்கின்றது. அவைகள் சதா காற்றில் அசைவாடிக் கொண்டிருக்கிற படியால், நாசித்துவாரத்துக்குள் உட்புக பிரயாசப்படும் தூசு, கிருமிகளை வெளியே தள்ளுகின்றன.

——: o :——

## நாடாப் பூச்சி

நாடாப் பூச்சி என்னும் கிருமி விசேஷமாய் மாட்டுக் குடல்களில் வசிக்கின்றது. மாட்டு இறைச்சி மூலமாக மனிதர் குடலுக்கும் வரக்கூடியதாயிருக்கின்றது. ஆசியா, ஆப் பிரிக்கா, ஐரோப்பாவின் கீழ் பாகத்தில் இது காணப்படுகின்றது. அபிசீனியாவில் ஏறக்குறைய எல்லா மனிதரிடத்திலும் வசிக்கின்றதாம்.

இப்பூச்சியானது தட்டையாகவும், வெள்ளை நிறமாகவும் இருக்கும். தோற்றத்தில் நாடாவைப் போல் காணப்படுவதால் இப் பெயர் வந்ததுபோலும்.

நாடாப் பூச்சி என்று சொல்லும்போது ஒரு கூட்டமான வஸ்துவைப் பற்றிப் பேசு கின்றோம். அவை கூட்டமாய் வசித்த போதிலும், தனித்தனியாய் இருக்கின்றது. ஒவ்வொரு பிரிவிலும் ஆண், பெண்ணுக்குரிய அம்சங்கள் உண்டு. ஒவ்வொன்றும் தனியாய்ப் பலுகி பெரு கும் தன்மை பொருந்தியது.

நன்றாய் பக்குவ மடைந்த தனி பகுதிகள் ஒரு அங்குலத்தில் 8/10 பங்கு வரை நீள மும், அங்குலத்தில் 3/10 பங்கு வரை அகலமுமாயிருக்கின்றன ஒரு நாடாப் பூச்சி என்பதில் ஆயிரம் தனி பகுதிகள் இருக்கக் கூடுமாம். படத்தில் பார்க்கும் போது விளங்குகின்றதல்லவா? தலையிலிருந்துதான் புது பகுதிகள் வளர்ந்து வருகிறது. தலையில் நாலு கொம்புகள் போன் றவை உண்டு. ஆகாரத்தை உருஞ்சி எடுக்கும் உருப்புகள். இவை கொக்கிகளாக உபயோகப் படுகின்றன். இக் கொக்கிகளால் குடலின் உட் பாகத்தைக் கெட்டியாய்ப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

1. நாடாப் பூச்சியின் தலையும், பற்பல பகுதிகள் வளர்ந்துகொண்டு போவதும்.



2. தலையிலிருக்கும் 2 கொக்கிகள், நாலு கொக்கிகள் உண்டு.

இப்பூச்சியானது ஒரு மாட்டுக் குடலில் தங்கியிருக்கின்றது தற்செயலாய் அந்த மாடு அடிக்கப்பட்டு, அதின் மாமிசத்தை நன்றாய் வேகவிடாமல் யாதொருவன் புசிப்பானாகில், இப் பூச்சியானது மனிதனின் வயிற்றுக்குள் சென்று, குடலில் குடியிருக்க ஆரம்பிக்கின்றது. இரண்டு மாதம் செல்லுமுன் நாடாப் பூச்சிப் பகுதிகள் பெரிதாகி, முட்டைகளிடத் துவக்கும். இம் முட் டைகள் மனிதரின் குடல் வழியாக வெளியே வருகிறது இவை எப்படியாகிலும் ஒரு பசு அல்லது எருதின் வயிற்றுக்குள் ஆகாரத்துடன் சேர்ந்து செல்லுகின்றன. மாட்டின் குடலே அதின் இருப்பிடம்.

சிகிச்சை: பிள்ளைகளுக்கு அல்லது பெரிய மனிதருக்கு இப்பூச்சி குடலில் இருக்கு மானால், அவர்கள் வர வர மெலிந்து, பசியற்று, குடலில் ஒருவித வலியும் உண்டாகி, அஜீரண மும், நரம்பு தளர்ச்சி முதலிய வியாதிகள் வர இடமுண்டாகும். இப் பூச்சியின் பகுதிகளும் அசுத்தத்தில் காணப்படலாம், உடனே டாக்டரிடம் காட்டி அல்லது ஆஸ்பத்திரி சென்று மருந்து சாப்பிட்டு சுகமடைவது நல்லது. சிலர் மாதுளம் பழத்தின் வேரின் பட்டைச் சார் சாப்பிடுவது நல்லது என்றும், பூசணிக்காய் விதை நல்லது என்றும் சொல்லுவார்கள்.

———:o:———



## வர்த்தமானம்

ஐநதிய செய்தி :—

### அய்யலூர் ரெயில் விபத்து

அய்யலூருக்கும் வட மதுரைக்கும் இடையில் பெரும் மழையினால் கண்டவாளம் இடம் பெயர்ந்ததினிமித்தம் செங்கோட்டை பாசென்ஜர் வண்டித் தொடர் கீழே சரிந்து விழுந்து ஒன்றோடொன்று மோதி உடைந்து போனது. 35 பேர் உயிர் துறந்தனர். அநேகர் காயமடைந்து வைத்திய சகாயம் அடைந்து வருகின்றனர். அது விஷயமான விசாரணை நடந்து வருகின்றது.

### திருவாங்கூர் இளவரசியின் திருமணம்

திருவாங்கூர் சமஸ்தான இரண்டாவது இளவரசி திருமதி லலிதாம்பா பாயும், அரச குலத்தி லுதித்த திருவாளர் கேரள வர்மா தம்புரானும் செப்டெம்பர் 12உ விவாக சம்பந்தத் தில் இணைக்கப்பட்டனர். விவாசம் வெகு விமரிசையாய் நடைபெற்றது.

### இந்திய ஜூனியர் செஞ்சிலுவைச் சங்கம்

ஜூனியர் செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் காப்டன் M. ஹாபிஸுடின் மைசூரில் இது விஷயமாய் உபந்நியாசம் செய்தபோது சொன்னதாவது :—

கடந்த வருஷக் கடைசியில் இந்தியாவில் குறைந்த பட்சம் 11,000 ஜூனியர் செஞ் சிலுவைச் சங்கங்களிருந்தன. அதில் 4,60,000 அங்கத்தினருக்குக் குறையாமலிருந்தனர். அங்கத்தினருக்கு சுகாதார விதிகளைப் பற்றியும், சுய சுத்த முறைகளைப் பற்றியும் அறிவு புகட் டப்படுகின்றது. அதோடு சங்கங்கள் சர்வதேச சிநேக சம்பந்தத்துக்குள் கொண்டு வரப்பட்டி ருக்கின்றனர். படப் புஸ்தகங்களும் முத்திரைப் புஸ்தகங்களும் சங்கத்துக்குச் சங்கம் கொடுத்து மாற்றுவதின்மூலமாய் சர்வதேச ஐக்கிய சிந்தையுண்டாவதற்கு ஏது உண்டாகின்றது"

### திருவாங்கூரும் காங்கிரஸும்

திருவாங்கூர் மகாராஜா பொதுஜன சமாதான நிலைமைக்குக் கெடுதி விளைவிக்கும் சங்கங்களையும் கூட்டுறவுகளையும் தடுத்து ஒரு விளம்பரம் செய்திருக்கின்றனர். அதில் மாகா ணக் காங்கிரஸும், வாலிபக் கூட்டுறவு சங்கமும் சட்டவிரோதமான சங்கங்களெனக் குறிப்பிட் டிருக்கின்றது. இதற்கு மீறிக் கூட்டம் வைத்து உபந்நியாசம் செய்கின்றவர்கள் தண்டனைக் குள்ளாகின்றனர்.

### அகில இந்திய கி. மு. ஐக்கிய சங்க மகாநாடு

இந்தமாதம் 4உ--9உவரை அகில இந்திய கி. மு. ஐக்கிய சங்க மகா நாடு இண்டோர் பட்டணத்தில் கூடும். அதில் பேசப்படும் பொருள் "சிக்கலான தருவாயில் கிறிஸ்துவின் செய்தி". அநேக பெரியார் அரிய பிரசங்கங்கள் செய்வார். இந்தியாவின் பல பாகங்களிலிருந் தும் இம்மகாநாட்டிற்குப் பிரதிநிதிகள் வந்து சேருவார்.

<u>புறதேச செய்தி:—</u>

## சீனா ஜப்பான் யுத்தம்

இந்த யுத்தம் ஒழிந்தபாடில்லை. ஹான்கௌ பட்டணத்தைச் சுற்றிலும் பலத்த யுத்தம் நடக்கின்றது. எனினும் ஹான்கௌ பிடிபடவில்லை.

சேனைகள் பின்வாங்கின போதிலும், ஹோநான் என்ற இடத்தில் பலத்த சேனை திரட்டி ஜப்பான் முன்னேறுவதைத் தடுக்கத் திறமையுள்ள ஒரு சீனச் சேனாவீரர் பெரும் முயற்சி யெடுத்துக்கொண்டிருப்பதாக சொல்லப்படுகின்றது. 40,000 பேரடங்கிய சேனை பட்டணத்தைக் காக்க அணிவகுத்து நிற்கின்றது.

இயான்சி மாகாணத்தின் தலைநகரமாகிய டையான் பட்டணத்தில் யுத்தம் பலமாய் நடக்கின்றது. 2,00,000 சீனர் பின்னடைந்து இப் பட்டணத்துக்குள் இருப்பதாக ஜப்பானியர் கூறுகின்றனர்.

## ஸ்பெய்ன்

கலகக்காரர் இழந்துபோன பாகங்களைத் திரும்ப கைப்பற்றி யிருக்கின்றனர். அதில் அவர்களடைந்த நஷ்டம் அதிகமாம். சர்க்கார் எவ்வளவுதான் எதிர்த்துப் போராடின போதிலும் கலகக்காரர் கை மேற்கொண்டு வருகின்றது. கைச் சண்டை செய்து வெற்றியடைகின்றனராம்.

"புறதேச சகாயம் இருக்கும் வரை கலகம் ஒழியாது. கலகக்காரர் கட்சி ஜெயங்கொள்ளும் வரை புறதேச சகாயம் ஒழியாது. ஜெர்மனியும் இத்தாலியாவும் சதா தலையிட்டுக் கொண்டே இருக்கும். பிரிட்டனும் பிரான்சும் தலையிடாக் கொள்கையைத் தலைமேற்கொண்டிருக்கும். ஸ்பெய்ன் தேச சர்க்கார் சதா துன்பப்பட்டுக்கொண்டே யிருப்பார்." என மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகை கூறுகின்றது.

## பிரஜாதிபதி ரூஸ்வெல்ற் செய்த பிரசங்கம

கடந்த மாதம் கனடா தேசம் சென்றிருந்தபோது கிங்ஸ்டன் பட்டணத்தில் அமெரிக்கா ஐக்கிய மாகாணப் பிரஜாதிபதி செய்த பிரசங்கத்தின் சாராம்சமாவது:—

"கனடா தேசம் பிரிட்டிஷ் ராஜ்யத்தின் ஒரு பாகமென்பதை உணர்ந்து இதர ராஜ்ஜியங்களால் அதற்கு அபாயம் நேருங்கால் அமெரிக்கா ஐக்கிய மாகாணம் சும்மா இருக்காது. கடலுக்கப் பாலுள்ள இதர ராஜ்ஜியங்களில் எழும்பும் குழப்பத்தினலைகளால் தாக்கப்படாதபடி அமெரிக்காக் கண்டங்கள் இனித் தூரமானவைகளல்ல. நன்மையோ தீமையோ நம்மை தாக்கியே தீரும். மிதமிஞ்சின மிருகத்தன்மையைப் பற்றியும், குடிகளனுமதிபெறா சேனைத் திரட்சியைப் பற்றியும், தேசங்கள் சகாயமின்றி நாசமடைவதைப் பற்றியும், தனித்தாள் உரிமைகளை மீறி யாட்கொள்வதைப்பற்றியும் ஜனங்கள் கொள்ளும் அபிப்பிராயத்தை வெளியிடாதபடி தடுக்க முடியாது."

## ஐரோப்பிய தேசங்கள்

செக்கோஸ்லோவக்கியா விஷயமாய் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஹெர் ஹிட்லரைச் சந்தித்து பேசின பின்பு பிரிட்டிஷ் பிரான்சு ஆகிய இரு தேசத்தவரும் கலந்துபேசி நூற்றுக்கு 75 பேருக்கு அதிகமான ஜெர்மானியர் இருக்கும் பாகத்தை ஜெர்மனிக்கு விட்டு விடவேண்டுமென ஆலோசனை கொண்டுவந்திருக்கின்றனர். உலகத்தை இன்னொரு பயங்கர யுத்தத்திலிருந்து இரட்சிக்கவேண்டுமானால் செக்கோஸ்லோவேக்கியா தன்னை சுயஹிம்சைக்கு ஒப்புக் கொடுக்கவேண்டும் என்பதே இதன் கருத்து.

அன்று ஆஸ்திரியா ஜெர்மனியின் புஜபலத்துக்கு இணங்குகின்றோம் என்றது. இன்று செக்கோஸ்லோவேக்கியா பிரிட்டிஷ் பிரான்சு தேசத்தாரின் பலவந்தத்திற்கு இணங்குகின்றோம் என்கின்றது. மெய் சமாதான முறை இதுவோ?

அக்டோபர் மாதம் 1௳ யுத்தமா? சமாதானமா? என்ற கேள்விக்கு விடை கி[illegible]கும்.

———:o:———

உ சௌமிய, ௧௨ 30
ப 38-2-5—7

## பிள்ளைகளுக்கேற்ற கைவேலை.

### படம் வெட்டுதல்.



தமிழ்நாடு
சென்னை-600 008
ஜ09390



ஸ்ரீநகரம் மார் கால்வாய்.

Registered No. M. 3804.



Printed by S. T. Rhenius at the N.M.S. Press, 48-B, Peters Road, Royapettah and
Published by Rev. T. A. Fenn, College Church,
12, Venkata Maistry Street, George Town, Madras.